Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර් செப். 16 - 22, 2004

வாரமலர்


# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 580



## இ. தொ.கா. ஆதரவு திருப்பமடையும் அரசியல்



## கிழக்கில் நிழல் யுத்தம்

## 'உளவாளிகள்' ஆரம்பம்



## மினி உலகக் கிண்ணம் அணிகளின் தரம் என்ன? ஆய்வு

## ஆன்மீகம்

### எல்லா மதங்களும் கூறும் அன்பே பிரதானம்

இப் பரந்த உலகில் வாழுகின்ற அனைத்து மக்களுக்கும் இறையருள் ஒன்றே அவசிய தேவையாகும்.

'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்பது ஆன்றோர் அருள்வாக்கு. இக் கலியுகத்தில் அன்றாடம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற சம்பவங்களைக் காணுகின்ற போது, எங்கே நிம்மதி என்று நினைக்கத் தோன்றுகிறது.

எல்லா மதங்களும் அன்பையே பிரதானமாகக் கைக்கொள்ளச் சொல்கின்றன. நாம் அனைவரும் கடவுள் திருவருளை வேண்டுதல் செய்து நமது நாட்டில் சகல இன மக்களும் சமத்துவமான சகவாழ்வு பெற்று சந்தோசமாக வாழ, ஒன்றுசேர்ந்து பிரார்த்தித்து நலம் பெறுவோமாக!

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.



### நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன்

பொருளாசையை விலக்கி வாழுங்கள். உள்ளதே போதும் என்றிருங்கள். ஏனெனில் நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன்! உன்னை விட்டு விலக மாட்டேன் என்று கடவுளே கூறியிருக்கிறார். இதனால் நாம் துணிவோடு "ஆண்டவரே எனக்குத் துணை, நான் அஞ்சமாட்டேன். மனிதர் எனக்கு எதிராக என்ன செய்ய முடியும்."

(எபிரேயர் 13-5.5)

அன்புச் சகோதரங்களே; பார்த்தீர்களா ஆண்டவர் கூறுவதை. பொருளாசையால் இன்று எத்தனை குடும்பங்கள் பிளவுபட்டு வேதனையோடும் துக்கத்தோடும் வாழ்வதைக் காணுகின்றோம். சகோதர, சகோதரிகளோடு மகிழ்ச்சியாக வாழ வேண்டியவர்கள் பகைமையோடு வாழ்வதையும் நாம் காணலாம். இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது. நாம் நினையாத நேரம் மரணம் வரும் என்று நாம் நினைப்போமானால் பொருளாசை எம்மை அணுகாது.

நாம் தூய்மையான உள்ளத்தோடு வாழும்போது இறைவன் எம்மைக் கைவிடவும் மாட்டார். எம்மை விட்டு விலகவும் மாட்டார். நாம் எவருக்கும் அஞ்சத் தேவையில்லை.

-செல்வி மேரி சுபாஷினி, இரவெல்ல.

### துஆ பிரார்த்தனை

இன்று நாம் நமது தேவைகளை நம்முடைய அறிவு, முயற்சி, தேகபலம், பணம் போன்றவைகளால் அடைய முடியுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறோம்.


ஆனால் இவற்றை எல்லாம் மிஞ்சிய ஒன்றுள்ளது. அதுதான் எம்மைப் படைத்த அல்லாஹ்விடம் கேட்கும் 'துஆ' பிரார்த்தனை. இதன் மூலமே எல்லாவற்றையும் நாம் பூரணமாய்ப் பெற முடியும்.

'துஆ' பிரார்த்தனை நம் தேவைகளை நிறைவேற்றித் தருவது மட்டுமல்ல, நாம் பலவீனர்களாயின் அது ஓர் கேடயம். நாம் நோயாளிகளாயின் அது ஓர் வைத்தியன். நாம் வறியவர்களாயின் அது நம் இல்லாமையைப் போக்கும் பெருவள்ளல். நாம் அல்லாஹ்வின் நேசர்களாயின் அது நம்மை இன்னும் அவனிடம் நெருங்க வைக்கும் துணைக்கருவி. நாம் ஆதரவு இழந்திருக்கும் நிலையில் அணைத்துக்கொள்ளும் அன்பு நண்பன்.

பிரார்த்தனைகளை நாம் அல்லாஹ்விடம் கேட்கும் முறையில் கேட்டால் நிச்சயமாக எல்லாம் வல்ல அல்லாஹ் அதனை அங்கீகரிப்பான். நாம் 'துஆ' பிரார்த்தனைகளை ஆரம்பிக்கும்போது முதலில் பாவங்களை விட்டும் 'தவ்பா' செய்துகொள்ள வேண்டும். பின் உள்ளச்சத்தோடு 'துஆ' கேட்டால் அது அல்லாஹ்வால் ஒப்புக்கொள்ளப்படுவதில் தடையேதுமில்லை.

—எம்.சி.கலீல், கல்முனை – 05.

## கவிதைப் போட்டி இல.577



இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

பரிசுக்குரிய கவிதை

### நான் ஆமைதான் அடிமையல்ல

அடங்கி வாழ்கிறேன் என
நினைத்து என்னை
ஏறி மிதிக்காதே - ஆடே.
நான் ஆமைதான்; அடிமையல்ல;
அடங்கி வாழ்வோரும்
அப்படித்தான் - ஆடே
அடங்கி வாழ்வோரை ஏறி
மிதிக்க நினைப்போரை
அடங்கி வாழ்வோர் எகிறி
விட்டால் ஏறி மிதித்தோர்.
எங்கே(யோ)ா? போய்
விழுவார்கள்.

-உ.சசிசுதாஜினி, திருகோணமலை.

### தெரியாத போது.....

மனிதர்களுக்குள்ளே...!
நாம் மனிதத்தை.....
தேடும்போது.....
இந்த ஆட்டுக்கு
எங்கே தெரியப் போகிறது
தான் ஏறி நிற்பது
ஆமையா? கல்லா? என்று....!

—மனோகோபாலன், ஹப்புத்தளையூர்.

### சவாரி!

ஆமை வேக
அரசியல்வாதிகளின்
காலை வாறும்
கபடத்தனத்தை
அறியாத.....
அப்பாவி
மலையக மக்களும்
மாற்றங்களின்றி
விழி பிதுங்கி
வழி இன்றி
தவிக்கும்போதே
உணர்கின்றனர் - தாம்
சவாரி செய்தது
மண்குதிரைகளில் என்று!


—கா.சுபாஷ், டிக்கோயா.

### வியப்பில்லை....

தமிழினத்தின் மேல்
தமிழினமே ஏறி -
அடிமைப்படுத்தி
ஆட்சி செய்வதை
கண்முன் பார்க்கும்
நமக்கு
ஒரு இனத்தின்
மேல்
மற்றொரு இனம்
நிற்பதைப்
பார்க்கும்போது
வியப்பு
ஏற்படுவதில்லை.

—ஏ.விமல்சன், கொழும்பு – 12.

## கவிதைப் போட்டி இல.580



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 22.09.2004

கவிதைப் போட்டி இல.580
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772,
கொழும்பு.

### நமக்கொரு பாடம்

நீ நானாகவும்
நான் நீயாகவும்
வாழ மறுக்கும்
ஈழ மண்ணில்
சகோதரா!
மிருகங்கள்
காட்டும்
ஒற்றுமை-
இது நமக்கொரு
பாடம்.

—தமிழடியான், கிண்ணியா.

### அல்லல்!

சுமக்க முடியாத
சுமையைச்
சுமந்து அல்லற்படும்
இந்த ஆமைபோல்
நின்றுவிடாத
சகோதரப் படுகொலையால்
நிதமும் அல்லற்படுகிறது
தமிழ் இனம்!

—எஸ்.நாகேந்திரன், ஆரையம்பதி –03.

### உணர்வற்று.....

அழுக்கான மனதுடன்
அதிதூய வெண்ஆடையில்
அரசியல்வாத ஆடுகளால்
அடிக்கடி மிதிபடும்
அப்பாவியான எங்களுக்கும்
அகமெல்லாம் மரத்து விட்டது
இந்த
ஆமையைப் போலவே....

—சங்கம ஹிஷாம், திருகோணமலை.

### பூடக யுத்தி

இனப்பிரச்சினை
விவகாரத்தில்
இணக்கமான தீர்வொன்று
கிட்டி வராமல்
எட்டிப் போகும்
அசமந்தப்போக்கை
நாசூக்காய் விளம்பும்
பூடக யுத்தியா இது?

—ஏ.எம்.அல் அப்ஸன், ஏறாவூர் – 03.

### பரிணாம வளர்ச்சி

குரங்கில் இருந்து பிறந்தவன்
மனிதன் என்பதாலோ
மீண்டும் கொடிய
விலங்காகிக்கொண்டிருக்கிறான்.
மனிதனிடம் வெறும் கொலை
வெறியும் பழிவாங்கலும்தான்
தலைதூக்கி இருக்கிறது.
இப்போதெல்லாம்
விலங்குகளிடம்தான் ஒற்றுமையின்
உயர்ச்சி தெரிகிறது.

—வ.சந்திரபிரசாத், மாமாங்கம்.

### கலியுகம்

ஆடும் ஆமையும்
உறவாடுகிறது
ஆறறிவு படைத்த
மனிதயினம்
வெறியாடுகிறது.

—எஸ்.பி.பாலமுருகன், பதுளை.

### நகராது மலராது

ஆடு இறங்கும் வரை
ஆமை நகராது.
மாற்றுக் கருத்துக்கு மதிப்பு
கிடைக்கு மட்டும்
சமாதானம் மலராது.

—றெ.பி.மரிய டினேசன், நானாட்டன்.

## உங்கள் பக்கம்

### கருத்தடையால் களையெடுக்கப்படும் மலையகம்!

மலையகம் காலங்காலமாக ஏதேனும் ஒரு சவாலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டே வருகின்றது. மலையக மக்களை வழிநடத்தச் சிறந்த அரசியல்வாதிகள் இன்மையாலும், சிறந்த எதிர்காலத் திட்டங்கள் இன்மையாலும், மலையக சமுதாயம் பலத்த பின்னடைவுகளை எதிர்நோக்கி வந்துள்ளது. என்றாலும் முன்னேற்றத்தை நோக்கிய அதன் பயணம் நலிவடையவில்லை. கடும் உழைப்பாளிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள மலயைகம், கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக சத்தமற்ற ஒரு பாரிய யுத்தத்திற்கு முகங்கொடுத்து வருகின்றது என்றால் அது வேறொன்றுமில்லை, கட்டாயக் கருத்தடை.

வறுமை என்பது மலையகத்தவருக்கு மட்டும்தானா? அதுவும் தமிழ்க் குடும்பங்களுக்கு மாத்திரமா? ஏனெனில் நாட்டின் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள் மலையகத்தவர்கள் மாத்திரமல்ல என்பதைச் சுட்டிக் காட்டியே ஆகவேண்டும். பெரும்பான்மையான சிங்கள, முஸ்லிம் இன மக்களும் உள்ளனர் என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை. குடும்பக் கட்டுப்பாடு வறுமையை ஒழிக்கச் சரியான வழிமுறை என்றால், இதனை ஏன் ஏனைய சமூகங்களிடையே நடைமுறைப் படுத்த முடியவில்லை?

தோட்ட மக்களின் பொருளாதார நிலையையும், உடல், உள செயற்பாடுகளையும் சமப்படுத்த வேண்டுமாயின் திட்டமிட்ட குடும்பம் அவசியம் என நியாயம் கற்பிப்பவர்கள், விவசாய சிங்கள மக்களிடமோ அல்லது பெருந்தோட்டத்துறையில் தொழில் புரியும் ஏனைய சமூகங்களிடமோ மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வராதது ஏன்?

மலையக மக்களிடமிருக்கும் பொருளாதார நிலையையும், உடல், உள ரீதியான செயற்பாடுகளையும் சமப்படுத்த, ஆக்கபூர்வமான எவ்வளவோ செயற்பாடுகள் இருக்கையில், அவர்கள் மத்தியில் ஏன் இந்தக் கட்டாயக் கருத்தடை நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது இன்றைய இளைஞர், யுவதிகளின் வினாவாக உள்ளது.

மலையக மக்கள் மேற்படி விடயத்தில் கவனஞ் செலுத்தாது இருக்குமிடத்து வெகுவிரைவில் மலையக மக்களின் கோட்டையாக விளங்கும் நுவரெலியா மாவட்டத்தில் மலையகத் தமிழர் சிறுபான்மை இனமாக வாழ வேண்டிய நிலைக்கு உட்படுவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. உயர் ரக தொழில்நுட்ப வசதி இல்லாத வைத்தியசாலைகளினூடாக மேற்கொள்ளப்படும் மேற்படி மலையக மக்களின் களையெடுப்பினைத் தடுத்து நிறுத்துவதுடன், மலையகத்தைப் பீடித்துள்ள மேற்படி குடும்பக் கட்டுப்பாட்டினை விரட்டியொழிக்க மலையக சமுதாயமே அணி திரண்டு போராட வேண்டிய காலமிது. இன்றே செய்வோம், நன்றே பெறுவோம்.

-கா.சுபாஷ், டிக்கோயா.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk





## வாசக(ர்) சாலை

*அன்பான எனது தினமுரசே!*

நான் முதலில் எழுதும் கடிதம் இது. நான் துபாயில் இருந்து எழுதும் கடிதம். நாட்டில் இருக்கும்போது உனது முகம் பார்க்காமல் இருக்கமாட்டேன். இங்கு வந்து உனது முகத்தைத் தேடினேன். கிடைத்துவிட்டது. மிகச் சந்தோசமும் மகிழ்ச்சியும் அடைந்தேன். உன்னைப் பார்க்கும்போதெல்லாம் நம் நாட்டில் இருக்கின்ற மாதிரி இருக்கிறது நமது நாட்டில் நடக்கும் பிரச்சினைகள், நல்ல செய்திகள், நாட்டில் நடக்கும் ஊழல்கள் அனைத்தையும் இங்கிருந்து முரசின் வாயிலாக அறிந்துகொள்வதில் என்னைப் போல் இங்கு இருக்கும் அவைருக்கும் மிக மகிழ்ச்சி. அடுத்து நலமாக வாழுவோம் பகுதி மிகவும் பயனுள்ளது! எனக்கு மட்டுமல்ல அனைவருக்கும் பயனுள்ள வகையில் இருக்கின்றது. நல்ல கருத்துக்களை இன்னும் எதிர்பார்க்கிறேன். அடுத்து சினி விசிட் பக்கம் இந்த வாரம் முற்றிலும் அருமை. ஏனென்றால் இந்தியாவில் நமது நாட்டின் அழகை சினிமாவின் மூலம் காட்டப் போகின்றார்கள். அது மிகச் சந்தோஷம். மற்றது ஜெய் ஆகாஷ் முரசுக்கு கொடுத்த பேட்டி மிகவும் சுவையாக இருந்தது. அடுத்த வாரம் அவர்கள் தந்த பேட்டியை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறேன். உன்னைப் பற்றி உனக்கு எழுதுவதற்கு இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. உன் சேவைகள் இன்னும் ஆகாயம் வரை வளர்ந்து புகழுடன் வளர எனது வாழ்த்துக்கள்.

*—என்.பத்மசீலன், துபாய்.*

### இளம் தளிர் முரசே!

உலக சுவாரசியங்களை உன்னுள் ஈன்றெடுத்து நித்தம் வரும் வியாழனுள் வெளிக்கொணர்ந்து, தித்திக்கும் தினமுரசாய் இப் பாரெங்கும் ஓங்கி ஒலித்து, உனது அபிமான வாசகர்களுக்கு அறிவூட்டும் தேன்கிண்ணமாய் ஊற்றெடுத்து உனக்குள் நீயே ஒரு வசீகரத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாது, இளம் பிஞ்சுகளின் உள்ளத்தையும் உன்னுள் வசியப்படுத்திய உன் முத்தான முரசுக்கு என் பொன்னான வாழ்த்துக்கள்.

*-என்.உதயதேவி, பனங்காடு.*

எங்கள் உள்ளக்
கிடங்கில் ஊற்றெடுத்து
உறையாது ஓடும் உன்
நற்சேவைகள்
கங்கையாகப்
பெருக்கெடுத்து
பாசக் கடலில்
சங்கமமாகி
ஆழிக் கடலைப் போல்
வலுப்பெற வேண்டும்
என வேண்டி
என்னுடைய
வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்ளும்
உன் இரசிகன்.

*—எஸ்.எம்.எம்.நாஸிர், பண்டாரவளை.*

# "இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மாற்றுத் தமிழ்க் கட்சிகள் சுதந்திரமாக அரசியல் பணிகளில் ஈடுபட அனுமதிக்க வேண்டும்"

## தமிழ்ச்செல்வனிடம் எரிக் சொல்ஹெய்ம் வலியுறுத்தல்

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினருக்கும், எஸ்.பி.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலி இயக்கக் குழுவினர்களுக்குமிடையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பின்போது சமாதான முன்னெடுப்புப் பற்றி அர்த்தப்புஷ்டியான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. கிழக்கில் இடம்பெற்றுவரும் அரசியல் படுகொலைகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் சமாதான முன்னெடுப்பையும் பாதிக்குமென்று தெரிவித்த தமிழ்ச்செல்வன், தமது சிரேஷ்ட உறுப்பினர்களான சேனாதி, பாவா, யோகா ஆகியோர் கொல்லப்பட்ட சம்பவங்களையும், அண்மையில் இடம்பெற்ற புல்லுமலைத் தாக்குதல் பற்றியும் நோர்வே தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே தமது உறுப்பினர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதாகவும் அரசாங்கப் படையினரின் அனுசரணையுடனேயே இத் தாக்குதல்கள் நடத்தப்படுவதாகவும், தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டினார். இத் தாக்குதல்களில் தமிழ்க் குழுக்கள் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தமக்கு நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்த தமிழ்ச்செல்வன், யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கேற்ப இக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார். அத்துடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுதந்திரமாக, தாக்குதல் அச்சுறுத்தலின்றி புலிகள் அரசியல் பணிகளில் ஈடுபடக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று புலிகளின் மட்டக்களப்பு அரசியல் பிரதிநிதி கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த எரிக் சொல்ஹெய்ம், புலிகளின் குற்றச்சாட்டை ஆயுதப் படையினர் திட்டவட்டமாக மறுத்துள்ளபோதிலும் புலிகள் இயக்கத்தின் இக் கருத்தை அரசின் உயர் மட்டத்துக்கு எடுத்துச் செல்வதாகவும் தெரிவித்தார். எனினும், இதேபோன்று வடக்கிலும், கிழக்கிலும், கொழும்பிலும் நிராயுதபாணிகளாகச் செயற்படும் ஜனநாயக வழிக்குத் திரும்பிய தமிழ் அரசியல்வாதிகள் மரண அச்சுறுத்தலின்றித் தமது அரசியல் பணிகளை முன்னெடுத்துச்செல்ல முடியாத நிலை குறித்துச் சுட்டிக்காட்டினார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கொள்ளுப்பிட்டி தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மற்றும் மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்கள் பற்றியும் சுட்டிக்காட்டினார். இக் கொலை முயற்சிகளையும், கொலைகளையும் யார் செய்திருப்பார்களென்பதை அனுமானிக்க முடியும். எனவே, இலங்கை மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு புலிகள் இயக்கமும் வன்செயல்களைக் கைவிட்டுப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்ஹெய்ம் தெரிவித்தார். ❑

# இ.தொ.கா. சுயநலனுக்காக அரசுடன் இணையவில்லை.

## -கட்சி முக்கியஸ்தர் விளக்கம்-

இலங்கையை இரு தசாப்த காலத்துக்கு மேலாக உலுப்பி வந்த இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கும் மலையக மக்களின் அன்றாட, நீண்டகாலப் பிரச்சினைகள் குறித்துக் காத்திரமான முறையில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவுமே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்துகொண்டதென்று இ.தொ.கா.வின் பிரமுகரான வி.ஆர்.தனராஜ் தெரிவித்தார். "தேர்தல் முடிந்து ஐந்து மாத காலமாக அரசுடன் இ.தொ.கா. இணைந்து செயலாற்றுமா வென்று இலங்கை அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்பட்ட கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. அமைச்சுப் பதவிகளுக்காகக் குறுகிய சுயநல நோக்குடன் இ.தொ.கா. அரசுடன் இணைந்துள்ளதென சில வட்டாரங்களில் விமர்சனங்கள் செய்யப்படுகின்றனவே" என்று கேட்டபோது,

"எந்தச் சுயநல நோக்கும் இ.தொ.கா.வுக்குக் கிடையாது. இ.தொ.கா. இன்றுதான் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டதென்று கூறுவதும் தவறானது. தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்திலிருந்தே மலையக மக்களின் பிரச்சினைத் தீர்வுகளுக்காக அரசுடன் இணைந்து செயலாற்றி வந்திருக்கிறோம். மலையக மக்களின் பிரச்சினைத் தீர்வுக்காக பதினான்கு அம்சத் திட்டமொன்றினை நாம் முன்வைத்துள்ளோம். எமது பிராந்தியப் பிரச்சினைகளின் தீர்வுக்காக நாம் குரல்கொடுக்கும் அதேவேளை, நாட்டையே இரத்தக்களரியாக்கிய யுத்தத்துக்கு முடிவுகட்ட அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கும் இ.தொ.கா. தீவிர ஆதரவு வழங்கும். சுமார் ஐந்து மாதங்களாக எமது கட்சியின் தலைமைப்பீடம் கூடி அடிக்கடி ஆழமாக ஆராய்ந்த பின்னர் எடுத்த முடிவு இது. இ.தொ.கா. நினைத்திருந்தால் தேர்தல் முடிந்த கையோடேயே அரசுடன் இணைந்திருக்கலாம்" என்றும் தனராஜ் விளக்கமளித்தார். "அரசுடன் இணைந்துள்ளதால் மேல் கொத்மலைத் திட்ட முன்னெடுப்புக்கான உங்கள் எதிர்ப்பைக் கைவிட்டு விடுவீர்களா?" என்று கேட்டபோது, "இல்லை. எமது பதினான்கு அம்சத் திட்டத்தில் அதனையும் ஒன்றாகச் சேர்த்துள்ளோம். இத் திட்டம் பற்றி ஆராய்வதற்கு அமைச்சரவைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. நாம் எமது கோரிக்கையை வென்றெடுக்கத் தொடர்ந்தும் போராடுவோம்" என்றார்.

# யாழ். கலாசாரச் சீரழிவுக்கு பாலகுமார் கூறும் காரணம்

யாழ்ப்பாணத்தில் கலாசாரச் சீரழிவுகள் அதிகரித்து வருவதற்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் அபரிமிதமான பணமே காரணம். எனவே, கூடுதலாகப் பணம் அனுப்ப வேண்டாமென்று புலி இயக்க முக்கியஸ்தரான வே.பாலகுமார், கனடியத் தமிழ் வானொலி நிகழ்ச்சியூடாக வேண்டுகோள் விடுத்துள்ளார். ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவரிடம் "யாழ்ப்பாணத்தில் கலாசாரச் சீரழிவு உள்ளதாகக் கூறுகிறீர்கள். அதை நிறுத்துவதற்கான வழிவகை உங்களிடமே உள்ளது" என்று நேயர் ஒருவர் குறிப்பிட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார் பாலகுமார். கடந்த ஏழாம் திகதி இந்நிகழ்வு இடம்பெற்றது. ❑

# ஈ.பி.ஆர்.எல்.எப். மறுப்பறிக்கை

'சிதம்பரபுரத்தில் 20 பெண்களின் எலும்புக்கூடுகள் மீட்பு; சுரேஷ் அணியினர் மூவர் கைது' என்ற தலைப்பில் செப்டெம்பர் 02-09ஆம் திகதிய முரசில் வெளிவந்த செய்தி குறித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சுரேஷ் அணியைச் சேர்ந்த வவுனியா மாவட்டச் செயலாளர் பி.உதயன் என்பவர் மறுப்பறிக்கையினை அனுப்பி வைத்துள்ளார். பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பவர்களில் எவரும், எக் காலத்திலும் தமது கட்சியின் உறுப்பினர்களாக இருந்ததில்லையென்றும் இரண்டு எலும்புக் கூடுகள் மட்டுமே மீட்கப்பட்டதாகவும் அந்த மறுப்பறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ❑

# "பிரபாகரனுடன் நேரடியாகப் பேசியே பிரச்சனைகளைத் தீர்க்க முடியும்"

## -அமைச்சர் டக்ளஸ்

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடுவதில் எவ்வித பயனுமில்லை. புலி இயக்கத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து, மாற்றுக் கருத்துக்கள் கொண்ட அரசியல்வாதியைப் படுகொலை செய்வதை உடனடியாக நிறுத்தும்படி நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கேட்க வேண்டுமென்று, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டார். ஈ.பி.டி.பி.யின் தூதுக்குழுவொன்றினைக் கடந்த 14ஆம் திகதி கொழும்பில் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேசியபோது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான கலாநிதி க.விக்னேஸ்வரன், சி.தவராஜா மற்றும் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோர் இச் சந்திப்பில் பங்குபற்றினர். நோர்வேயின் சார்பில் எரிக் சொல்ஹெய்முடன் நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் மற்றும் தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர். புலிகள் மேற்கொண்டு வரும் மனித உரிமை மீறல்கள், மனிதப் படுகொலைகள் பற்றி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சொல்ஹெய்முக்கு விளக்கமாக எழுத்துரைத்தார். சகல விதமான படுகொலைகளையும் கண்டிப்பதாகவும் தெரிவித்த சொல்ஹெய்ம், படுகொலை செய்யப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும் கட்சிக்கும் தனது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொலைசெய்யும் நோக்கோடு தற்கொலைக் குண்டுதாரியைக் கொழும்புக்குக் கூட்டிவந்த சத்தியலீலா என்ற பெண்மணி சிறையிலிருந்து அமைச்சரிடம் மன்னிப்புக் கோரி எழுதிய கடிதத்திதை ஈ.பி.டி.பி.யினர் எரிக் சொல்ஹெய்மிடம் காட்டி விளக்கினர். தன்னைப் புலிகள் எவ்வாறு பயன்படுத்தினரென்று இப் பெண்மணி அக் கடிதத்தில் விளக்கியிருப்பதாகத் தெரியவருகிறது. புலிகளே இத் தாக்குதல் முயற்சியைக் மேற்கொண்டார்களென்பதைக் காட்டுவதற்காகவே அக் கடிதம் எரிக் சொல்ஹெய்மிடம் காண்பிக்கப்பட்டதாகத் தூதுக்குழுவில் அங்கம் வகித்த ஒருவர் கூறியுள்ளார். இது குறித்து அமைச்சரிடம் கேட்டபோது, அதனை ஊர்ஜிதப்படுத்திய அவர், அப் பெண்ணை மன்னித்துவிடப்போவதாவும் கூறினார். சத்தியலீலா மன்னிப்புக் கோரி அமைச்சருக்கு எழுதிய கடிதம் அடுத்த வார தினமுரசு பத்திரிகையில் வெளியாகும்.

இதேவேளை கடந்த பத்தாம் திகதி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குழுவொன்று அமைச்சர் தலைமையிலான ஈ.பி.டி.பி. தூதுக்குழுவொன்றினைச் சந்தித்துக் கலந்துரையாடியது. வடக்கு, கிழக்கில் புலிகள் மேற்கொண்டுவரும் மனித உரிமை மீறல்கள், அத்துமீறல்கள் ஆகியன பற்றியும் ஈ.பி.டி.பி.யினர் எடுத்துரைத்தனர். அமெரிக்கத் தூதரகத் தலைமை அரசியல் அதிகாரியான திருமதி பட்ரீசியா மகோனி தலைமையிலான தூதுக்குழு சுமார் ஒரு மணித்தியாலப் பேச்சுவார்த்தை நடத்தியது. ❑

# ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் நால்வர் 50 நாட்களுக்குள் சுட்டுக் கொலை

கடந்த ஐம்பது நாட்களுக்குள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த நான்கு பேர் வடக்கிலும், கிழக்கிலும் கொழும்பிலும் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனரென்று அக் கட்சியின் பேச்சாளரொருவர் தெரிவித்தார். திருகோணமலையில் ஈ.பி.டி.பி.யின் பாராளுமன்ற வேட்பாளரான ரமணி, மட்டக்களப்பில் ஆலையடிவேம்புப் பிரதேச சபைத் தலைவர் ரவீந்திரன், கொழும்பில் ஊடகவியலாளரும் ஈ.பி.டி.பி.யின் பிரசாரச் செயலாளருமான பாலநடராஜ ஐயர், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் அருள்தாஸ் ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.யின் நிதிப் பொறுப்பாளராகவும் செயற்பட்ட அருள்தாஸ், கடந்த பதினோராம் திகதி ஊர்காவற்றுறை கரம்பனில் சுட்டுக் கொல்லப்பட்டார். போர் நிறுத்த காலத்திலும் புலிகள் சமாதானமெனும் மூடுதிரைக்குப் பின்னாலிருந்துகொண்டு மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும், முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் கொன்றொழிக்கும் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனரென்பதற்கு இப் படுகொலைகள் ஒரு சான்றாகும் என்று ஈ.பி.டி.பி. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் தீவகத்தில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது படுகொலைச் சம்பவம் இதுவெனத் தெரிவித்துள்ள அறிக்கையில், தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கான பாதையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் தோழர் அருள்தாஸ் 'மாயவன் சந்திரசேகரன்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ❑

# வன்னியில் மரமுந்திரிகை

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா, தனது அமைச்சின் கீழுள்ள இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை அகில இலங்கை ரீதியாக, அனைத்து இன மக்களும் பயன்பெறும் வகையில் விஸ்தரிக்கவுள்ளார்.

இதனடிப்படையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மரமுந்திரிகை பயிரிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சங்கர் குணசேகரம் தெரிவித்துள்ளார்.

இதன் பயனாக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 14,000 மரமுந்திரிகைக் கன்றுகள் பயிரிடப்படவுள்ளன. ❑

# கூட்டுறவுத் துறையை முன்னேற்ற நடவடிக்கை

உலகமயமாக்கல் மற்றும் திறந்த பொருளாதாரத்துடன் போட்டி போடக்கூடிய வகையில் கூட்டுறவுத் துறையை முன்னேற்றுவதற்குச் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக கமத்தொழில் சார்ந்த உற்பத்திகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய கலாசார அமைச்சரும், கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்த 13ஆம் திகதி தேசிய மட்டத்திலான கூட்டுறவுத்துறை சார்ந்த பிரதிநிதிகளைச் சந்தித்து சுமார் ஐந்து மணி நேரம் கலந்துரையாடியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டுறவுத் துறையின் நிதி சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக நிதி அமைச்சரையும், திறைசேரிப் பொறுப்பாளரையும் சந்தித்துப் பேசி உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், தேவையேற்படின் ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். ❑

# மாலைதீவில் தற்கொலைக் குண்டுதாரிகள்?

மாலைதீவின் தலைநகரான மாலேயில் தற்போது இலங்கையைச் சேர்ந்த இரு தற்கொலைக் குண்டுதாரிகள் இருக்கிறார்களென்று ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிப்பதாக கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே லீடர்' ஆங்கில வாரப் பத்திரிகை கடந்த 12ஆம் திகதிய இதழில் தெரிவித்துள்ளது. மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூமின் நெருங்கிய சகாவான யாமின் என்பவர் இலங்கையிலுள்ள தனது வர்த்தகத் தொடர்புகளூடாக இந்தத் தற்கொலைக் குண்டுதாரிகளை மாலேக்கு வரவழைத்துள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாலேயின் தொழிலமைச்சில் தொழிலாளர்களாக இவர்களிருவரும் வேலை செய்வதாகத் தெரிவித்துள்ள இப் பத்திரிகை, ஊர்ஜிதமற்ற வட்டாரங்களை மேற்கோள் காட்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. ❑

# சமூக நீதிக்கான போராளிகளுக்கு இலங்கையில் ஆபத்து அதிகரிக்கிறது.

## -சின்னபாலாவின் அஞ்சலிக் கூட்டத்தில் கனடிய மனித உரிமை ஆர்வலர்.

"இலங்கையில் உண்மையையும் நீதியான சமாதானம் மற்றும் மனித கௌரவத்தையும் நிலைநாட்டப் போராடும் எமது சக தோழர்களின் உயிர்களுக்கு முன்னெப்பொழுதையும் விட இப்போது மிக மோசமான ஆபத்து நிலவுகிறது. எமது பிள்ளைகளுக்கு அங்கே பாதுகாப்பில்லை. நீதிக்காகப் போராடுபவர்கள் அங்கே நாளாந்தம் குறிவைக்கப்படுகிறார்கள். மனித கௌரவத்துக்கும் சமூக நீதிக்குமாகத் துணிச்சலுடன் அமைதியாகச் செயற்பட்டு வந்த பாலநடராஜ ஐயர் போன்றவர்களைப் பாசிஸ மற்றும் இனவெறிச் சக்திகள் பாரிய அச்சுறுத்தலாகக் கருதுகிறார்கள்" என்று கனடிய மனித உரிமைப் போராளியான கேவின் சிம்மின் குறிப்பிட்டார்.

கடந்த மாதம் 16ஆம் திகதி கொழும்பு, பாமன்கடையில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி.யின் பிரசாரச் செயலாளரும், ஊடகவியலாளருமான சின்னபாலாவுக்கு அஞ்சலி செய்யுமுகமாக கனடா, ரொறன்ரோவில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'இலங்கையில் மனித உரிமைகள், சமத்துவம், சமாதானம், ஜனநாயகம் ஆகியவற்றுக்கான கூட்டணி' என்ற அமைப்பு ஒழுங்கு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் அங்கு உரையாற்றுகையில், "1970களில் தனது மாணவப் பருவத்திலிருந்து இன்று வரை தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர் சின்னபாலா. சின்னபாலாவின் கொலை மூலம் அவரது மூன்று உரிமைகள் மீறப்பட்டுள்ளன. கருத்துச் சுதந்திரம், அரசியல் அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பதற்கான சுதந்திரம், எல்லாவற்றுக்கும் மேலாக அவரது வாழ்வுரிமை ஆகியன பறிக்கப்பட்டுள்ளன. சகல உரிமைகளிலும் பார்க்க மிக முக்கியமானது வாழ்வுரிமையாகும். இந்த உரிமை பேணப்பட்டால் மட்டுமே ஏனைய சுதந்திரங்களைப் பெற முடியும். மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை அழித்தொழிப்பதன் மூலம் வாழ்வுரிமை பறிக்கப்படுவதை முழுத் தமிழ்ச் சமூகமும் உணர்ந்துகொள்ளாமை துரதிர்ஷ்டவசமானது" என்று கூறினார்.

"பாலா ஐயர் இவ்வாறு சுட்டுக் கொல்லப்படுவதற்கு அவர் செய்த பிழைதான் என்ன? தமிழ் ஊடகங்கள் மக்களுக்கு உண்மையைச் சொல்லத் தயங்குகின்றன. புலிகளின் ஊதுகுழல்களாகச் செயற்படும் தமிழ் ஊடகங்கள் மக்களுக்குப் பொய்களையே கூறுகின்றன" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி சாடினார். மற்றொரு மனித உரிமைப் போராளியான டேவிட்சன் தனது உரையில், "தாம் தூக்கித் திரியும் ஆயுதங்களை விடப் பேனாவின் சக்தி வலிமையானதென்று புலிகளுக்குத் தெரியும். எனவேதான் சின்னபாலா போன்ற நேர்மையான, சிறந்த பத்திரிகையாளர்களைச் சுட்டுக் கொல்கின்றனர்" என்றார். ❑

# முரசம்

## சமாதான முயற்சியும் சர்வதேச அக்கறையும்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

இடையறுந்துபோன சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சி வருடக்கணக்காக நீண்டுகொண்டு சென்றது. முன்னைய ஆட்சிக் காலத்தில் முறித்துக் கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளை இன்றைய ஆட்சிக் காலத்தில் சீராக்குவதில் பல சிரமங்கள் இருக்கவே செய்யும். முன்னைய ஆட்சியாளர்கள் பேசிக்கொண்டவையும் இணங்கியவையும் இப்போதைய புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமா என்ற கேள்வி உள்ளது. அதுவும் இவற்றுக்காகவே கடந்த ஆட்சியாளர்களை விமர்சித்தவர்களால் அவ்வாறு செய்ய முடியுமா என்பது ஒரு சிக்கல். அதேவேளை புலிகள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபையை கடந்த ஆட்சியாளர்கள் அப்போது ஏற்றுக் கொள்ளவில்லை. புலிகளும் அதனைக் கைவிடத் தயாராக இல்லை. இந் நிலையில்தான் தற்போதைய அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான முயற்சியின் தொடர்ச்சியாக, நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் இலங்கை வந்துள்ளார். அவர் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத் தரப்பினருடனும், வன்னி சென்று புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடனும் பேச்சுக்களை நடத்தி நிலைமையைச் சீராக்க முயற்சிக்கிறார்.

இதேவேளை சர்வதேச சமூகத்தின் அக்கறை தற்போது இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து அதிகரித்துள்ளது. சமாதானத்துக்குப் பாதிப்பான விடயங்கள் குறித்து அதன் கவலை அதிகரித்துள்ளது. குறிப்பாக அரசியல் படுகொலைகள், சிறுவர்களைப் படையணிகளுக்குத் திரட்டுதல் போன்ற விடயங்கள் சர்வதேச சமூகத்தால் கண்டிக்கப்படுகின்றது. அண்மையில் இலங்கை வந்த அமெரிக்காவின் வெளிநாட்டுப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் தலைவர் லார்ஜ் ஜே கொ·பர் பிளாக் தெரிவித்த கருத்து, உண்மையான இதயசுத்தியுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதையும் இப் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்துவதாக உள்ளது. அவர் இத்தகைய கருத்துக்களைக் கூறிய பின்னர்கூட படுகொலைகள் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் கொல்லப்பட்டுள்ளார். இதேவேளை தற்போது இந்தியக் கடற்படைத் தளபதி அருண் பிரகாஷ் இலங்கைக்கு வருகை தந்துள்ளார். ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி வருகைதரவுள்ளார். இவ்வாறான அதிகரித்த சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளின் வருகை, இலங்கையில் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முடக்க நிலைமையை மாற்றுவதற்கான அக்கறையை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது. இத் தேக்கம் சர்வதேச சமூகத்தால் சகித்துக்கொள்ள முடியாத நிலைக்குச் செல்லுமேயானால், அதனால் ஏற்படும் பாதிப்பு எத்தகையதாக இருக்குமென்று சிந்தித்து ஒழுகுவது அவசியம். இல்லையேல் வருந்தத் தக்க விளைவுகளுக்கு நாம் முகங்கொடுக்க நேரிடலாம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இ.தொ.கா.வின் ஆதரவு
# திருப்பமடையும் அரசியல்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அரசாங்கத்துடன் இணைந்துள்ளதையடுத்து மத்திய அரசியலில் புதிய திருப்பமொன்று தோன்றியுள்ளது. இந்த இணைவின் முக்கிய அம்சம் என்னவென்றால், இதன் மூலம் அரசாங்கம் பெரும்பான்மைப் பலத்தை ஈட்டிக்கொள்வதேயாகும்.

இறுதியாக நிகழ்ந்த பொதுத் தேர்தலின்போது ஆட்சி மாற்றமேற்பட்டாலும், புதிய அரசாங்கத்துக்குப் பெரும் பான்மைப் பலம் கிடைத்திருக்கவில்லை. உண்மையில் இந்த ஆட்சி மாற்றமானது ஒரு அரசியல் மாற்றமாகவும் நிகழ்ந்தது. அதாவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியென்ற ஓர் ஐக்கிய முன்னணியை அமைத்தன. அம் முன்னணியில் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து வந்த அணியினரும் பேரியல் அஷ்ரபின் தலைமையிலான நுஆ கட்சியினரும் இணைந்து தேர்தலில் போட்டியிட்டனர். இந்த ஐக்கிய முன்னணியை அமைத்துக் கொண்டதன் மூலம், ஐக்கிய தேசியக் கட்சியின் ஐக்கிய தேசிய முன்னணியை இலகுவாகத் தோற்கடிக்க முடிந்தது.

ஆயினும், தற்போதைய விகிதாசாரத் தேர்தல் முறையால் இந்த ஐக்கிய முன்னணிக்கு ஆட்சி கிடைத்த போதிலும் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்கவில்லை. 225 ஆசனங்களைக் கொண்ட இலங்கைப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற குறைந்தது 113 ஆசனங்கள் தேவை. சபாநாயகராக ஒருவர் செயலாற்ற வேண்டியுள்ளதையும் கருதும்போது 114 ஆசனங்களைக் கொண்டிருப்பது வசதியான நிலையாகும். ஆனால் இவ் ஐக்கிய முன்னணிக்கு 105 ஆசனங்களே கிடைத்தன. ஈ.பி.டி.பி. அரசாங்கத்தில் இணைந்து கொண்டதையடுத்து அது 106 ஆசனங்களாகியது. எனினும் அதனால் சாதாரண பெரும்பான்மையை ஈட்டிக்கொள்ள முடியவில்லை.

இந் நிலையில் அது சிறுபான்மை அரசாங்கமாகவே செயற்பட வேண்டியிருந்தது. தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்வதில் எதிர்க்கட்சி வரிசையிலுள்ள கட்சிகளது ஆதரவை நாட வேண்டியிருந்தது.

இவ்வகையில் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வே அதற்குப் பெரும் சவாலாக அமைந்தது. அந்த அமர்வின் போது சபாநாயகர் ஒருவரைத் தெரிவுசெய்வது பிரதானமான விடயமாக இருந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதானமான ஒரு நோக்கமான அரசியல் யாப்பு நிர்ணய சபையைப் பாராளுமன்றத்தில் உருவாக்குவதற்கு சபாநாயகரின் பங்கு மிக முக்கியமானது. இந் நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தனது தரப்பிலிருந்து சபாநாயகரொருவரைத் தெரிவு செய்ய வைக்க வேண்டிய அவசியத்தைக் கொண்டிருந்தது. இதன் நிமித்தம் எதிர்க்கட்சி வரிசையிலிருந்த ஹெல உறுமய, தமிழரசுக் கட்சி ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் ஆதரவை வென்றெடுக்க, அல்லது அவர்களை வாக்களிப்பதிலிருந்து விலகி நிற்கச் செய்ய முயன்றது.

தமிழரசுக் கட்சி அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்கு உதவுவதாகக் காட்டிய சமிக்ஞைகளை அரசாங்கம் நம்பி ஏமாந்தது. ஹெல உறுமய விலகி நிற்க முடிவு செய்தும், அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க முன்வந்ததையிட்டு அதைச் சமப்படுத்த மேலும் இருவரை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க வைத்தது. இச் சபாநாயகர் தெரிவு இரு தடவை நிகழ நேர்ந்தது. முதற் தடவை இரு தரப்புக்கும் சம அளவில் வாக்குக் கிடைத்தது. இரண்டாவது தடவை ஐ.தே.க வேட்பாளருக்கு அதிகப்படியான வாக்குக் கிடைத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தோல்வியடைந்தது.

இவ்வாறு முதலாவது பாராளுமன்ற அமர்வே அரசாங்கத்துக்குப் பெரும்பான்மை இல்லாத குறைபாட்டை எதிரொலித்தது. பெரும்பான்மை இல்லாத நிலையில் உலக நாடுகள் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை ஈட்டிக்கொள்வது சிரமம். அதனால் உறுதியற்ற ஒரு நிலையிலேயே அரசாங்கம் செயற்பட வேண்டியிருக்கும். அத்தோடு முக்கியமான தீர்மானங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்வது சிரமமாக இருக்கும். குறிப்பாக வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றும்போது பெரும் இக்கட்டு நிலை ஏற்படும். அது நிராகரிக்கப்பட்டால் அரசாங்கத்தில் நம்பிக்கையற்ற நிலை தோன்றும். இந் நிலையில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் எதிர்க்கட்சி கொண்டுவர முனையும். இது அரசாங்கம் கவிழக்கூடிய ஆபத்துக்கு இடமளிக்கும்.

இத்தகைய ஒரு திரிசங்கு நிலையை அரசாங்கம் கொண்டிருக்கும் நிலையில்தான் தற்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது. அது 8 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. அது அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதன் மூலம் அரசாங்கத்திற்கு தற்போது மொத்தம் 114 ஆசனங்கள் கிடைத்துள்ளன. இதனால் அரசாங்கம் தற்போது சாதாரண பெரும்பான்மையை ஈட்டிக்கொண்டது. இதன்மூலம் அது இது வரை அநுபவித்து வந்த உறுதியற்ற நிலையிலிருந்து விடுபட்டு தன்னை உறுதியாக்கிக் கொண்டது. இதனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இம் முடிவு, மத்திய அரசியலில் ஒரு பாரிய திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை அண்மைக் காலத்தில் முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க முன்வந்திருந்தனர். அவர்களை முஸ்லிம் காங்கிரஸ், கட்சியிலிருந்து விலக்கியிருந்தது. அவர்கள் நீதிமன்றம் சென்றதில் அவர்களைக் கட்சியிலிருந்து விலக்கிய விதம் பிழையென நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. தற்போதைய நிலையில் எதிர்க்கட்சிக்கு ஆதரவான வாக்குகளிலிருந்து அவர்களின் 3 வாக்குகள் குறைவடைவதுடன், ஆளும் கட்சிக்குச் சார்பாக 3 வாக்குகள் அதிகரிப்பதால் ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையிலான சமநிலையில் எதிர்க் கட்சியின் நிலை மேலும் 6 வாக்குகளால் தாழ்ந்துள்ளது. எனினும் இந்த உறுப்பினர்களில் ஹுஸைன் பைலா, முஸ்லிம் காங்கிரஸுக்கும் - ஐ.தே.க.வுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் பேரில் ஐ.தே.க.வின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டவராவர். நீதிமன்ற உத்தரவால் முஸ்லிம் காங்கிரஸால் இவர்களை நீக்க முடியாவிட்டாலும் ஹுசைன் பைலாவை ஐ.தே.க. நீக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. அதுவும் நீதிமன்றப் பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லும் ஒன்றே.


**இ.தொ.கா.வின் அரசியல் நீண்டகாலமாகவே பங்கேற்கும் அரசியலாகவே இருந்து வந்துள்ளது. அதாவது அரசாங்கத்தில் பங்குபற்றுவதன் மூலம் தமது மக்களுக்கு அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கும் வழிமுறையையே இ.தொ.கா.வின் மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் கடைப்பிடித்து வந்தார். இ.தொ.கா. எதிர்க்கட்சி அரசியல் மார்க்கத்தை ஒருபோதும் மேற்கொள்ளவில்லை.**


எனினும், முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அரசாங்கத்தை ஆதரிக்க முன்வந்தவர்களது பாராளுமன்ற உறுப்புரிமையைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள முடியுமா என்ற கேள்வி உள்ளது. எவ்வாறாயினும் தற்போது அவர்களின் வாக்குகள் அரசாங்கத்துக்கு ஆதரவாக உள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இணைவின் பின் 114 வாக்கு மட்டத்துக்கு உயர்ந்து பெரும்பான்மையை உறுதிப்படுத்திக்கொண்ட நிலையில் இம் மூன்று வாக்குகளுடன் அரசாங்கம் 117 வாக்குகளைத் தன் பக்கம் கொண்டுள்ளது.

இத்தகைய நிலையில் அரசாங்கத்தின் அடுத்த நகர்வு, சபாநாயகர் பதவியைத் தம் வசப்படுத்திக்கொள்வதாக அமையலாம். தற்போதைய பெரும்பான்மையுடன், சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொணர்ந்து, புதிய சபாநாயகர் தெரிவுக்கு வழிகோலி, அதைச் சாதித்துக்கொள்ளலாம். எதிர்க்கட்சியின் சபாநாயகர் ஒருவரைக் கொண்டிருப்பது அரசாங்கத்துக்கு அசௌகரியமாகவே இருக்கும். எதிர்க்கட்சித் தரப்பில் மேற்கொள்ளப்படக்கூடிய இடைஞ்சல்களைத் தவிர்க்கவும், தனது அரசியலமைப்பு நிர்ணய சபை போன்ற திட்டங்களை முன்னெடுக்கவும் தனது தரப்பிலிருந்து ஒரு சபாநாயகரைத் தெரிவுசெய்யவே அரசாங்கம் முனையும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இந்த ஆதரவானது சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கத்துக்கிருந்த இக்கட்டையும் போக்கியுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இம்முறை பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேர்தல் ஒப்பந்தமொன்றைச் செய்து, ஐ.தே.மு. பட்டியலில் போட்டியிட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி அது தனக்கான போனஸ் ஆசனங்களையும் பெற்றுக்கொண்டது.

ஆனால் ஐ.தே.மு.வினால் ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை. தற்போதைய நிலையில், அதனால் ஆட்சியைக் கவிழ்க்க முடியுமேயன்றிக் கைப்பற்ற முடியாது. அவ்வாறு ஆட்சி கவிழ்க்கப்படுவதை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விரும்பவில்லை. அடுத்த ஒரு தேர்தலில் இதேயளவு ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்ற கேள்விக்குறி உள்ளது. ஏனெனில், இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எடுத்த வாக்குகளைப் பார்க்கும்போதும், ஐ.தே.மு. கண்ட வீழ்ச்சியினை நோக்கும்போதும் இன்னொரு தேர்தல் உடனடியாக வந்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே வெற்றியீட்டுமென்ற கணிப்பு உள்ளது. அதனால் ஆட்சியேறப் போகின்றதென நம்பப்படும் நிலையில் அது மேலும் கூடுதல் வாக்குகளைப் பெறலாம். அது இ.தொ.கா.வையும் பாதிக்கலாம். அத்தோடு ஐ.தே.க. ஆட்சியேற மாட்டாதென்ற கருத்து நிலவுகையில் அதனோடு தேர்தல் உடன்படிக்கை செய்துகொள்வதும் அதற்கு விவேகமானதாக அமையாது.

மேலும், இ.தொ.கா.வின் அரசியல் நீண்டகாலமாகவே பங்கேற்கும் அரசியலாகவே இருந்து வந்துள்ளது. அதாவது அரசாங்கத்தில் பங்குபற்றுவதன் மூலம் தமது மக்களுக்கு அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்கும் வழிமுறையையே இ.தொ.கா.வின் மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் கடைப்பிடித்து வந்தார். இ.தொ.கா. எதிர்க்கட்சி அரசியல் மார்க்கத்தை ஒருபோதும் மேற்கொள்ளவில்லை.

1994ஆம் ஆண்டுத் தேர்தலில் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐ.தே.க.வுடன் தனது இ.தொ.கா.வுக்கான தேர்தல் உடன்பாடொன்றைச் செய்துகொண்டு ஐ.தே.க. பட்டியலிலேயே தெரிவாகியபோதிலும், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டதையடுத்து அதன் அரசாங்கத்தில் இணைந்து அமைச்சராகவும் பதவி வகித்தார்.

தற்போதும் அவ்வாறான ஒரு வகையிலேயே இ.தொ.கா., ஐ.தே.க. பட்டியலில் தெரிவாகியபோதிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்கத்தில் இணைந்துகொள்கிறது.

இங்கே ஐ.தே.மு. தனது பட்டியலில் தெரிவான இ.தொ.கா.வினரைப் பதவி நீக்கம் செய்ய முடியுமா என்ற ஒரு கேள்வி உள்ளது. இ.தொ.கா. செய்துகொண்ட உடன்படிக்கையில் அதன் சுயாதீன அரசியல் முடிவுகளுக்கான அங்கீகாரம் உள்ளதால் அவ்வாறான ஒரு முடிவை நீதிமன்றம் நிராகரிக்க முடியும். அத்துடன் அவ்வாறு செய்யும் பட்சத்தில் ஐ.தே.க. தனது நீண்டகால நட்புறவொன்றைப் பலிகொடுக்க நேரிடும். அப்படிச் செய்தாலும்கூட அதனால் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது. புதிய தேர்தலொன்றுக்கே இட்டுச் செல்லும். இந் நிலையில் அத்தகைய தேர்தலில் இ.தொ.கா., ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் தேர்தல் ஒப்பந்தத்துக்குச் செல்வதற்கு இது உந்திவிடும். அதனால் அடுத்த தேர்தலில் ஐ.தே.க. மேலும் பாதகமான நிலைக்குத் தள்ளப்படும். இத்தகைய சூழலில் ஐ.தே.க. அவ்வாறான ஒரு விஷப் பரீட்சையில் இறங்கப்போவதில்லை.

இங்கே யாவரையும் விட இ.தொ.கா.வின் முடிவால் முகம் கோணிப்போனவர்கள் தமிழரசுக் கட்சியின் பெயரிலுள்ள தமிழ்க் கூட்டமைப்பினரே. அவர்கள் அரசாங்கம் கொண்டிருந்த பெரும்பான்மையற்ற தொத்துப்பறி நிலையில், தமது 22 ஆசனங்கள் மூலம் அரசை ஆட்டுவிக்கலாம் என்ற எண்ணத்திலிருந்தார்கள். அவ்வாறே சில சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தை ஆசைகாட்டி ஏமாற்றியும் இருந்தார்கள். ஆனால் இ.தொ.கா. தனது ஆதரவை வழங்கி அரசாங்கத்தை உறுதிப்படுத்திவிட்டதால் அவர்களின் இத்தகைய எண்ணம் தவிடுபொடியாகிவிட்டது.

அதனால் அவர்கள் இ.தொ.கா.வின் மீது கடும் சீற்றம் கொண்டுள்ளார்கள். அண்மையில் நிகழ்ந்த தனியார் தொலைக்காட்சி விவாதமொன்றில் இரு தரப்பினரும் மிக மோசமாக மோதிக்கொண்டார்கள். தமிழ்க் கூட்டமைப்பினர் இ.தொ.கா.வையும் தமது எண்ணப்படி நடந்துகொள்ள வேண்டுமென நிர்ப்பந்திக்க முனைகிறார்கள். அத்துடன் நில்லாது மலையக அரசியலில் தலையிட்டு, அங்கு மலையக மக்கள் முன்னணியை அபரிமிதமாக ஆதரித்து, ஒத்தாசை வழங்குவது இ.தொ.கா.வுக்கு நேரடியான அரசியல் சவாலாகவும் உருவெடுத்துள்ளது. தமிழ்க் கூட்டமைப்பினர் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனை மலையகத்தின் பிரபாகரன் என்று பட்டப் பெயர் சூட்டியது, தொண்டமானின் பெயருக்கும் இ.தொ.கா.வுக்கும் பெருத்த அடியாக அமைந்தது. இத்தகைய அரசியல் தலையீடுகளை நிகழ்த்தியபடி இ.தொ.கா.வுக்கும் அழுத்தம் பிரயோகிக்க விழைந்ததானது, இ.தொ.கா.வில் கடும் கோபத்தையே கிளறிவிட்டுள்ளது. இது கூட்டமைப்பு இழைத்த மற்றுமொரு அரசியல் தவறாக அமைந்துவிட்டது.

# கிழக்கில் நிழல் யுத்தம்

கிழக்கில் நடைபெற்று வரும் விரும்பத் தகாத சம்பவங்கள் மக்கள் மத்தியில் பதற்றமான சூழலைத் தோற்றுவித்துள்ளன. நிலைமை இப்படி மோசமடைவதற்கு வழி வகுத்துக் கொடுத்தவர்களே இன்று பக்கம் பக்கமாக எதிர்வு கூறல்களில் இறங்கியிருப்பது நகைப்புக்குரியது. போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதன் பின்னர், அவ்வப்போது நடைபெற்று வந்த கட்டாய நிதி அறவீடு, மிரட்டல்கள், ஆட்கடத்தல், கண்மூடித்தனமான ஹர்த்தால்கள், ஆர்ப்பாட்டங்கள் என எடுக்கப்பட்ட அத்தனை நடவடிக்கைளையும் வீர வசனங்கள் பேசி ஆமோதித்தவர்கள்தான் இந்த மோசமான நிலைமை தோற்றம் பெறக் காரணகர்த்தாக்கள். இவ்வாறான செயல்களை மனிதாபிமானம் கொண்டு பாராமல் வரவேற்றார்கள். ஆனால், அப்போதே நாம் அதை விமர்சித்தோம். ஹர்த்தால்களாலும் ஆர்ப்பாட்டங்களாலும் அன்றாடங்காய்ச்சிகளாக வாழ்க்கை நடத்தும் எம் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். தவிரவும் கல்வியைத் தொலைத்து நிற்கும் எமது பிள்ளைகள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் அடிக்கடி கூறிவந்தோம். எவரும் காதில் வாங்கிக்கொள்ளாததால் இவ்வாறான கெடுபிடிகள் படுகொலைகளாகவும், சிறு சிறு மோதல் சம்பவங்களாகவும் அடுத்த கட்ட வளர்ச்சி கண்டது. அப்போதும் நாம் மிக வன்மையாகக் கண்டித்தோம். அதையும் எவரும் கனக்கிலெடுக்கவில்லை. பிறகு என்ன நடந்தது? விடிந்தால் ஒரு கொலை; இருண்டால் ஒரு கொலை என்று அரசியல் எதிரிகள் மீதான தாக்குதல் தொடர்ந்தது. இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது பற்றியெல்லாம் எவரும் அலட்டிக் கொள்வதில்லை. அல்லது இவ்வாறான படுகொலைகள் யுத்த நிறுத்த மீறல்கள் என்று சுட்டிக் காட்ட எவரும் முன்வரவுமில்லை. இச் சந்தர்ப்பங்களில் கட்டிக் காக்கப்பட்ட மௌனங்கள் தமிழர் போராட்ட வரலாற்றுக்கும், ஏகத் தலைமைக்கும் தங்களால் இயன்ற பங்களிப்பு என்று எண்ணிக்கொண்டனர்.

கருணா புலிகள் அமைப்பிலிருந்து விலகிச் சென்ற பின்னர் படுகொலைகள் நடைபெறும் விதம் இன்னும் விகாரமடைந்தது. கருணாவுடன் இருந்தார்கள் என்பதற்காக வீட்டில், கோர்ட்டில், சிறையில், தங்குவிடுதியில், வேலைத்தளத்தில் என ஏகத்துக்கும் படுகொலை செய்யப்பட்டார்கள். இவையெல்லாம் புலிகளின் வீரதீரச் செயல்களாகவே ஊடகங்களால் வர்ணிக்கப்பட்டன. என்ன நடந்தது? அதையே பயன்படுத்திக்கொண்டு இன்னும் பல தமிழ் இளைஞர்கள் புலனாய்வுத் துறையினர் என்ற பெயரில் படுகொலை செய்யப்பட்டனர். இக் காலகட்டங்களில் தொடர்ச்சியாக ஈ.பி.டி.பி.யினர் மீதும் படுகொலைகள் புரியப்பட்டு வந்துள்ளன. ஆனால், ஈ.பி.டி.பி.யின் மீது புரியப்படும் படுகொலைகளை கருணா குழுவென்றோ, புலனாய்வுத் துறையினர் என்றோ கூற முடியாமல் திண்டாடுவதும் வரலாறாகிப் போனது. ஏனெனில், இது அரசியல் படுகொலைகள் என்பதால் சென்ற வாரம் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதும் ஆதரவாளர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டதும் இதில் அடங்கும்.

> **படுகொலைகள், ஆட்கடத்தல், வரி, கப்பம், சிறுவர் ஆட்சேர்ப்பு என்பவற்றை எப்படி ஒரு யுத்த நிறுத்த மீறலாகவும், தனிமனித உரிமை மீறலாகவும் கண்டிக்கிறோமோ, அதேபோல் புலிகள் மீது புரியப்பட்ட தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஒரு கொலைக்கு இன்னொரு கொலை நியாயமாகி விட முடியாது. ஒரு வன்முறைக்கு இன்னொரு வன்முறை சமமாகிவிடாது.**

நிலைமை இப்படித் தொடர்ந்து கொண்டிருக்கையில், கிழக்கில் மட்டும் நிழல் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக ஊடகங்கள் பந்தி பந்தியாக எழுதித் தள்ளியது சிந்திக்க வைக்கிறது.

அண்மைக்காலமாக மட்டக்களப்பின் புல்லுமலை, ஆயித்தியமலை, வவுணதீவு, குடும்பிமலை போன்ற புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. இத் தாக்குதல்களுக்கு கருணா குழுவினரும் படையினரும் காரணம் என்று புலிகளும், ஊடகங்களும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. கருணாவின் செயற்பாடுகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டன என்று கூறிவந்த புலிகள் இப்போது கருணா குழுவினர் என்று பேசிவருவது கேள்விக்குரியது. தவிரவும் கருணா நாட்டில் இல்லாத நிலையில் உடனடியாகக் கருணா ஆதரவாளர்கள் படையினருடன் இணைந்து இவ்வாறான தாக்குதல்களை நடத்துவர் என்பது நம்ப முடியாதது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குதல் தொடுப்பதென்பது படையினரைப் பொறுத்தவரை இயலாத காரியம். அப்படி ஒரு தாக்குதல் நடத்த வேண்டிய அவசியம் படையினருக்கு இருக்குமென்றால் ஹெலிகொப்டர்கள் வழங்குவதும் பாதுகாப்பு வழங்குவதும் சாத்தியத்திற்கு அப்பாற்பட்டவை.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெறும் படுகொலைகள், தாக்குதல்களுக்கு புலிகளே பொறுப்பு என்று படையினர் தெரிவித்தாலும், ஆதாரம் இருக்கிறதா என்று கோணங்கித்தனமான கேள்வி கேட்கும் ஊடகங்கள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டால் வந்தவர்கள் சிங்களம் பேசினார்கள், ஒரு சில தமிழ் இளைஞர்கள் வந்தார்கள், படையினரின் முகாம்களை நோக்கிப் பின்வாங்கிச் சென்றார்கள் என்று நேரில் சென்று வழியனுப்பி வைத்தவர்கள் போல கருத்துக் கூறுவதும் வழமையாகிவிட்டுள்ளது.

கருணா குழுவினரோ, படையினரோ புலிகளைத் தாக்கவில்லை என்றால் புலிகள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்ற கேள்விக்கு என்ன விடை?

இச் சந்தர்ப்பத்தில் அமெரிக்காவின் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான கொ.்.பபிளக் தெரிவித்த கருத்து சில உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளது. புலிகளின் தாக்குதல் பாணியினை வேறு சில குழுக்களும் பின்பற்றித் தாக்குகின்றன எனவும், இது எதிர்காலத்தில் பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் கவலை தெரிவித்திருந்தார். இக் கருத்தின் பின்னணியில் பார்க்கும்போது புலிகளுக்கு எதிரான சில குழுக்கள் உருவாகி வருவதாகவே எண்ணத் தோன்றுகிறது.


படுகொலைகள், ஆட்கடத்தல், வரி, கப்பம், சிறுவர் ஆட்சேர்ப்பு என்பவற்றை எப்படி ஒரு யுத்த நிறுத்த மீறலாகவும், தனிமனித உரிமை மீறலாகவும் கண்டிக்கிறோமோ அதேபோல் புலிகள் மீது புரியப்பட்ட தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஒரு கொலைக்கு இன்னொரு கொலை நியாயமாகி விட முடியாது. ஒரு வன்முறைக்கு இன்னொரு வன்முறை சமமாகிவிடாது. நியாயமாகவும் சமமாகவும் கருத்துக் கொண்டவர்களுடன் எமக்கு உடன்பாடில்லை. ஏனெனில் விடுதலை எனும் பெயரில் மக்கள் கொடுமைப்படுத்தப்படுவதையும் பழிவாங்கப்படுவதையும் நேசிக்கின்ற குணம் எமக்கு இல்லை. சிலருக்கு இருக்கவும் செய்யும். அவர்கள் சர்வதேசத்தின் பார்வையில் அம்பலப்படுவார்கள்; அம்பலப்படுகிறார்கள். புலிகள் மீது யுத்தம் திணிக்கப்படுகிறது; புலிகள் பொறுமை காக்கிறார்கள், அரசு யுத்தம் ஒன்றை அனுமதிக்கிறது என்ற பாணியிலான ஊடக வித்தகர்களின் ஆவேசமும், பொறுப்பற்ற கருத்துக்களும் பயன் தரப்போவதில்லை.

இதேவேளை, அரசு சமாதான முயற்சிகள் தொடர்பில் எவ்விதமாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்காமல் பின்னடித்து வருவதால் இவ்வாறான புதிய பிரச்சினைகள் தோன்றக் காரணமாகிறது. புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் படையினர் என்று குற்றம் சாட்டப்படுவதானது புலிகளுக்கு எதிரான அரசியல் கருத்துக் கொண்டோர் படுகொலை செய்யப்படுவதற்குப் புலிகளே காரணம் என்பதை இலகுவாகப் புரிந்துகொள்ள வைத்துள்ளது.

மொத்தத்தில் யுத்த நிறுத்த காலத்தில் இடம்பெறுகின்ற மோசமான நிகழ்வுகளுக்கு ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக்கொண்டிருப்பது ஆரோக்கியமானதல்ல. இந்தக் கடினமான நிலைமையைத் தளர்த்த ஒரே ஒரு வழிதான் உண்டு. அமெரிக்க பிரதிநிதி கூறியது போல் புலிகள் சமாதானப் பேச்சுகளில் பற்றுறுதியுடனும், உண்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும். அதேவேளை அரசாங்கமும் தற்போது கிடைக்கப்பெற்றுள்ள பெரும்பான்மையைச் சரியாகப் பயன்படுத்தி, சமாதான முயற்சியில் ஈடுபட்டு, தமிழ் மக்களுக்கு கௌரவமான நிரந்தரத் தீர்வு ஒன்று கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உலக நாடுகள் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் சமாதானப் பேச்சுக்களை இழுத்தடிப்பதையோ, மீண்டும் ஒரு யுத்தத்தை அப்பாவி மக்கள் மீது திணிப்பதையோ இரு தரப்பும் கைவிட வேண்டும். இரு தரப்பும் நெருங்கி வரும் புள்ளியில் இனங்காணப்படக்கூடிய தடைக்கற்களான சந்தேகம், புரிந்துணர்வின்மை, இணங்காத் தன்மை, பிடிவாதம், அரசியல் நோக்கம், சர்வாதிகாரப் பேரவா என்பவற்றை அடியோடு இல்லாமல் செய்வது அவசியமாகும். இப்படியான தடைக்கற்கள் நீங்க விரும்புபவர்கள் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும், மனித உரிமையையும் நேசிப்பவர்களாக இருப்பர். இல்லாதவிடத்து இத்தனை எதிர்பார்ப்புகளும் விழலுக்கு இறைத்த நீருக்குச் சமமாகும். இரு தரப்புமே தங்கள் விருப்பு வெறுப்புக்களைவிடவும், மக்கள் எதை விரும்புகிறார்கள், மக்களுக்காக இனியாவது எதைச் செய்ய வேண்டும் என்பதை தெளிவாகச் சிந்தித்துச் செயலாற்றுவது எல்லோருக்கும் நன்மையாக அமையும்.

அலசுவது
- மதியூகி -

## அதிரடி அய்யாத்துரை



சம்பந்தமானவர் தேசயாத்திரை திரிஞ்சு திரும்பியிருக்கிறாரெல்லோ. அது உள்வீட்டு வட்டாரத்துக்குள்ள புகையாய்க் கிளம்பியிருக்காம். புகை வன்னி வட்டாரக்காறருக்கு கொஞ்சம் அதிகமாய்க் காட்டுதாம். இங்க எத்தினையோ காரியங்கள் ஒப்பேறக் கிடக்குது. பார்லிமென்டில தங்கட முகத்தைக் காட்டுறதுக்காக நாலு வீராப்பு வசனத்துப் பேசி பத்திரிகைச் செய்தித் தலைப்பைக் குடுத்துட்டு வெளிநாட்டுக்கு மாறிவிடுறார். வெளிநாட்டில ஆளுக்கு சொந்த அலுவல்களிலதான் அக்கறையாம். வெளிநாட்டு ராசதந்திரிகளின்ர கேள்விகளுக்கு மழுப்பலாகப் பதிலளிச்சுக் கொண்டு திரியிறாராம். இங்க வாந்தாப்போல தமிழ்த் தரப்பு வட்டாரங்களுக்குள்ளால தான் அவற்ற குழையடிப்பெண்டு எண்டு அவை ஆளின்ர கணக்கைப் பிடிச்சிட்டினம் போல. இப்ப நிலைமையச் சரிப் பண்ணுறதுக்கு எதையும் முந்தி விழுந்து செய்து காட்ட அவதிப்படுகிறாராம். என்னத்தைச் செய்யப்போறார்? அரசாங்கத்தைக் கிழிச்சுத் தள்ளலாம். இதைத்தானே இந்தக் கூட்டம் ஜென்ம ஜென்மமாச் செய்து வந்தது. ஆன பலன் என்ன? உருப்படியா எதையும் செய்யிறதாயிருந்தால் இந்தியாவை, வெள்ளைக் காரனைச் சந்திச்சு தாங்கள் சொல்லுறத நம்ப வைக்க முடியுமா? இவையால அப்பிடி முடியுமாயிருந்தால் அவை முக்கியம் முறிஞ்சும் ஐரோப்பிய யூனியன்காறர் இப்பிடியொரு வலு மோசமான அறிக்கைய முகத்துக்கு நேர விட்டது எப்பிடி? அந்த நேரத்தில பேசாமலிருந்து போட்டு இப்ப வந்து பிலிம்காட்டப் பாக்கினமோ எண்டு கணக்கு விளங்கினவை கதைக்கினமாம். ம்...சம்பந்தர் கில்லாடி. எப்பிடியும் சமாளிப்பார். இருந்து பாருங்கோ.

போன பாராளுமன்றத்தில் மீன்பிடி அமைச்சு விவகாரத்தில கூட்டமைப்பார் குமுற வெளிக்கிட்ட வையல்லோ! குருநகர்ப் பிரச்சினையைப் பற்றிக் கேள்வி கேட்டவுடன மழுப்பியடிச்சினமாம். சத்தம் போட்டெண்டாலும் அதப் பற்றி ஒரு சொல்லும் சொல்லாமல் தப்பிக்கிறதுக்குத்தான் வழி பாத்திச்சினமாம். வழமை போல மற்றவயளில பழி போட்டுக்கொண்டு விஷயத்தை திசைதிருப்பி விட்டிச்சினமாம். அதில வேடிக்கை என்னவெண்டால், முன்னாள் மீன்பிடி அமைச்சின்ர ஆலோசகரா அரசாங்க அணைவில ஜீப்பும் சம்பளமும் வாங்கின சுரேஷ்பிரேமர் முந்தி விழுந்து முன்னைய காலத்து மீன்பிடித் தடை வலயத்தப் பற்றி கண்டிக்க வெளிக்கிட்டதுதான். அவர் ஆலோசகரா இருந்த காலத்தில நடந்தது எப்பிடி மறந்துப் போச்சாமெண்டு தெரியேல்ல. ஒரு வேளை ரொக்கம் கிடைச்ச சொப்பனத்தில இருந்திட்டாரோ அப்ப ம்...... ஆரெல்லாம் எதை எதைக் கண்டிக்கிறதெண்டு விவஸ்தையே இல்லாமப் போச்சு.

தமிழ் மக்களுக்காக தன்ர வாழ்க்கையை அர்ப்பணிச்ச அரிய மனிதன் பெரிய எழுத்தாளன், இவற்ற கொலையையும் துரோகப் பட்டியலில சேர்த்துக் கட்டி ஒப்பேத்திவிட முடியாதெண்டு கண்டதால கூட்டமைப்பார் இங்க கதையை மறுவளமா மாத்திப் போட முக்கி முனகினமாம். எதைச் சொன்னாலும் இழுத்து வைச்சுப் பேச அம்பிட்ட மனிசன் எங்கட அறளை வேந்தனார் தானே! அவரிட்ட விசயத்தக் குடுத்து பாராளுமன்றத்தில பேச விட்டிருக்கினம். ஆனால் பொய் பேசுறமெண்ட விவஸ்தையில்லாம பேசிக்கொண்டு போனதை பார்த்து, 'அட இந்தாள் வயசு போன காலத்தில ஏன் வாய்மை தவறின பேர் வாங்கப் பாக்குது' எண்டு கவலைப் படுகினமாம் விசயம் தெரிஞ்சவை. அவற்ர தலைவர் அமிர்தலிங்கத்தின்ர கொலையாளியை அவர் பொருட்படுத்தயில்ல. இதில பொய் பேசுறது மட்டுந்தான் ஆளுக்கு கஷ்டமே. அவர் குளிர்விட்டுப் போனார். எதையும் இப்ப புரட்டிக் கதைக்க ஆள் ரெடி. யு டோன்ற் வொறி......

குருநகர் அவலத்துக்கு இப்ப நட்டஈடு திரட்டிக் கொடுக்கினமாம் எண்டு அறிஞ்சன். நல்ல விஷயந்தான். ஆனால் பாருங்கோ, அந்த நட்டஈட்டை மீனவர்களிட்ட இருந்து சங்கங்களுக்குள்ள நிதி அறவிட்டெல்லோ குடுக்க வெளிக்கிட்டு இருக்கினமாம். கஷ்டப்பட்டவையளிட்ட நட்டஈட்டு நிதி வசூலிச்சே, நட்டப்பட்டவையளைத் திருப்திப்படுத்த வேணும்? ஏன் இருக்கவே இருக்கினம் எங்கட கூட்டமைப்பு எம்.பி.மார். அவையின்ர ஒரு மாசத்துச் சம்பளத்தையும் அலவன்சுகளையும் கணக்குப் பாத்தாலே ஆளுக்கு ஐம்பதைத் தாண்டுமே! மொத்தம் பத்து லட்சத்துக்குக் கிட்டத் தேறுமே! அதிலயும் கோடிமேல கோடிகளாய் சேர்த்து கார் அடுக்கி வைச்சிருக்கிற குமார் பொன்னம்பலத்தின்ர பெடியன் கஜேந்திரகுமார் போல ஆக்களை ஒரு தொகையை வெட்டச் சொன்னால் என்ன குறைஞ்சே போயிடும்? மககள் மக்கள் எண்டு மேடையில் முழங்கிறவைக்கு மக்களுக்கு நேர்ந்த அவலத்தைக் கண்டு மனமிரங்க மாட்டுதோ! ரொக்கம் வேற மக்கள் வேற போல. எல்லாம் பொலிடிக்ஸ்!

நட்டஈட்டு திட்டமெண்ட பேரில திருகோணமலையிலையும் ஒரு .்.போரம் வலம் வருகுதாம். 90களில நடந்த அனர்த்தங்களுக்கு நட்டஈடு பெற்றுத் தாறதாச் சொல்லித்தான் இந்த .்.போரம் குடுபடுகுதாம். இந்த அனர்த்தங்களுக்கு முந்தியே புனர்வாழ்வு அமைச்சுக்கு நட்டஈட்டு அம்பிளிகேஷன் அனுப்பின கன பேருக்கு நட்டஈடும் கிடைச்சிருக்க, இந்தப் புது .்.போமின்ர பின்னணி என்னவெண்டு வியப்பா இருக்குதாம். .்.போமில குடும்ப விவரங்கள், பிள்ளைகளின்ர விவரங்களெல்லாம் நிரப்பிக் குடுத்திட்டு, பிறகு வீட்டுக்கொரு பிள்ளை வில்லங்கத்தில மாட்டுப்பட்டிடுவோமோவெண்டு முழுசுதாம் சனம். யார் கண்டார் எது நடக்குமெண்டு?

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தில சேந்ததில யாரையும்விட எங்கட கூட்டமைப்புக் காறருக்குத்தான் கொதிப்பாய் இருக்குதாம். தனியார் தொலைக்காட்சி விவாதத்தில கூட்டமைப்பு வேந்தரும் சீ.டபிள்யூ.சி.க்கார எம்.பிக்களும் அடிபாடாக்குறையாக மோதிக்கொண்டதைப் பாத்தனீங்களோ? எல்லாரையும் தங்கட வளவுக் கொல்லைக்குள்ள கொணர்ந்து கட்டி மேய்க்க வேணுமெண்ட நினைப்புத்தான் இப்ப எங்கட ஆக்களைக் கெடுத்தபடியிருக்குது. தங்கட வழியில போற மலையக அரசியலை எங்கட வண்டியில ஏறெண்டு இழுத்து வந்து ஏத்தப்பாத்தால் மீளத்தானே செய்வினம். சுதந்திரம் கிடைச்ச சூட்டோடையே மலையகத் தமிழ்ற்ர முதுகில சூடு போட்டவங்களயெல்லாம் கூட்டிவைச்சு ஒரு கூட்டமைப்பெண்டு கட்டிக்கொண்டு, மலையகத் தமிழருக்குத் துரோகம் செய்தது யாரெண்டு மலையகப் பிரதிநிதிகளைப் பாத்துக் கேக்கிறார் எங்கட கூட்டமைப்பு வேந்தனார். காலத்தைப் பாத்தியளோ? அதே கேள்வியை முதலில காங்கிரஸ்காறருக்குள்ள ஒருக்கால் போட்டுப் பாத்தாரெண்டால் விஷயம் அம்பலமேறும் அதுதான் அவங்கள் மலையகத் தமிழரைப் பற்றி பேச உங்களுக்கு அருகதையில்லையெண்டு முகத்துக்கு நேரே கைகாட்டிச் சொல்லிப்போட்டாங்கள். இதுக்கு மேலயும் ஏறி மிதிக்கப் பாத்தா ஏற்கெனவே முஸ்லிம்களோட முறிச்சுக்கொண்டதைப் போல இனி மலையகத்தோடையும் பகைச்சுக்கொள்ளத்தான் நேரும் எண்டு பாத்தவை சொல்லினமாம்.

மலையகத்துக்குள்ளயும் பிளவைத் தூண்டி பொலிடிக்ஸ் விளையாடவெல்லோ நிக்கினம்.

'மழை விட்டாலும் தூவானம் விடாது போல' எண்டுவினம். ஆனால் இங்க தூவானம் விட்டாலும் மழை விடாது போல எண்ட கணக்காயிருக்கு. ஓடிக்கொண்டிருக்கிற மேட்டர் மீற்றரைத்தான் சொல்லுறன். நொன்ஸ்டொப்பாயெல்லோ போய்க்கொண்டு கிடக்குது. யாழ்ப்பாணத்திலயும் இப்ப மாற்றுக் கட்சிக்காறர் மேல ஒரு கொலை விழுந்திருக்குது. முன்னாள் பிரதேச சபைத் தலைவர் ஒருவர் கொலையுண்டிருக்கிறார். கண்காணிப்புக் குழுவுக்கே கண்ணைக் கட்டி விட்டாச்சுது. சமாதான காலம் இப்ப சாக காலமா மாறிப் போச்சு. எப்பதான் இந்தக் கொலை வரிசை ஓயுமோ. இல்ல இதுவும் ஒரு ஓயாத அலைதானோ?

# தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@sltnet.lk

# எழுத்தாளர்களின் கவனத்திற்கு

**மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பி.கு.

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.

நன்றி.

- ஆ - ர்

# சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்


## லண்டன், பாரிஸ்

**இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்**

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

**டாக்டர் ஆர். தியாகராஜன் DHMS, AMRSH (LON)**

25.09.2004 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை, பேறின்மை (Strility), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையான பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி:

**02087678004 - 07984803488 - 07833341693**

**E-mail : homoeocare@rediffmail.com**

இந்தியா - 0091-9843051099 இலங்கை - 0094-777602513

செப்டெம்பரில் இலங்கை விஜயம் 18.09.2004 முதல் 22.09.2004 வரை


# ஊதுகுழல்களான ஊடகங்கள்

ஊடகங்கள் நாட்டில் நடக்கின்ற சம்பவங்களைச் செய்திகளாகவும் தகவல்களாகவும் தருகின்றமை வரவேற்கத் தக்கது. நியாயம் எது, அநியாயம் எது என்பதைக் கவனத்தில் கொண்டு ஜனநாயகத்தின் - நடுநிலையின் மையமாகவே ஊடகங்கள் இன்னும் மக்களால் மதிக்கப்படுகின்றன. இப்போது இலங்கையில் இருக்கின்ற ஊடகங்கள் துரதிர்ஷ்டவசமாக ஜனநாயகத்தை மறந்து, நியாயங்களைப் புதைத்து, சார்பு நிலை ஊடகங்களாகவும் பிரசாரப் பிரசுரங்களாகவும் பணியாற்றுகின்றமை பலத்த கேள்விகளையும் சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளது.

அண்மையில் நடந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவன் என்ற வகையில் எனைய சம்பவங்களோடு சடைந்து பேசாமல் வெளிப்படையாகவே கருத்துக்களைச் சொல்லவே விரும்புகிறேன்.

ஆகஸ்ட் 30ஆம் திகதி பாலைதீவுக் கடற் பகுதியில் குருநகர் மீனவர்கள் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் ஊடகங்களின் கவனத்துக்கு உட்படுத்தப்படாமை எமது கவனத்தை ஈர்த்தது. யாழ்ப்பாணத்தில் வெளிவருகின்ற பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்தன. கொழும்பிலிருந்து வெளிவருகின்ற பத்திரிகைகளும் வானொலிகளும் தொலைக்காட்சிகளும் எங்கள் செய்தியை வெளிப்படுத்த முன்வரவில்லை என்பது எமக்குக் கவலை அளித்தது. சூரிய நாமம் கொண்ட வானொலி விரிவாகச் செய்தியைச் சொல்லாவிடினும் தகவலாக வெளியிட்டமைக்கு நன்றி. வல்லமை பொருந்திய வானொலியும் தொலைக்காட்சியும் எமது விடயத்தில் கண்ணை மூடிக் கொண்டமை வருத்தம் தருகின்ற அதேவேளை, பக்கச் சார்பான நிலையில் வெளிப்படுத்தியமை பெரும் வேதனைக்கும் விசனத்துக்கும் உரியது. அதேவேளை பத்திரிகைகள் பேனாக்களை உடைத்துக்கொண்டனவோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. இந்த இருட்டடிப்புக்கள் தமிழ்த் தேசியத்திற்குச் செய்த பிரதியுபகாரமாவெனக் கேள்விகள் எழத் தொடங்கியுள்ளன. அப்படியாயின் நாங்கள் தமிழர்கள் இல்லையா? எங்கள் மீது புரியப்பட்ட தாக்குதல்களை நாம் எதிர்த்தோம். அது படையினருக்கு எதிரானதாக இருந்திருந்தால் எவ்வளவு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கும் என்பதை இங்கு குறிப்பிடத் தேவையில்லை. தமிழர்களே தமிழர்களைக் கொன்றுக் குவிக்கின்ற கலாசாரத்தை ஏற்றுக்கொள்கின்ற இந்த ஊடகங்கள், தமிழரே தமிழரை சுடுகின்ற எமது பிரச்சினையை இருட்டடிப்புச் செய்ததும் அவ்வகையானதே. சம்பவம் நடைபெற்று முடிந்து இரண்டு நாட்கள் கழிந்த நிலையில், இது இரு மீனவ சமூகங்களுக்கிடையிலான பிரச்சினை எனச் செய்திகளை வெளியிட்ட ஊடகங்கள், உண்மைக்குப் புறம்பான செயற்பாட்டைக் கொண்டவை. எமக்கு நடந்த அவலத்தை உடனுக்குடன் வெளியுலகத்துக்குக் கொண்டுவந்த முரசின் சேவை பாராட்டுக்குரியது.

எதிர்காலத்திலாவது ஊடகங்கள் உண்மையாகச் சேவை புரிய வேண்டுமெனக் கேட்டு நிற்கின்றோம்.

-சே.நியூட்டன், குருநகர்.

# மக்களை மறந்துவிடும் மலையகத் தலைமைகள்

மலையக மக்களின் இருப்பு என்றுமே கேள்விகுறிதான். முடிந்த கதையைக் பேசிப் பேசியே எமது வாழ்வு ஒரு சுபீட்சம் இல்லாமல் இருக்கின்றது.

மலையக மக்களின் உரிமைகள், அபிலாசைகள், உணர்வுகள் என்றுமே மலையக மக்களின் தலைவர்கள் என்று கூறி அரசியல் நடத்தும் மலையகத் தலைமைகளால் மதிக்கப்படவில்லை. விதைப்பவன் ஒருவன்; அறுவடை செய்பவன் இன்னொருவன் என்ற கதையே எமது சமூகத்தில் தொடருகின்றது. எப்போதும் எமது தலைமைகள் மக்களோடு மக்களாக இருந்ததில்லை. எப்பொழுது ஒரு தேர்தல் வருகின்றதோ அப்போது ஒட்டிக்கொள்கின்றனர். மலையக மக்களைக் காக்க வந்த தெய்வங்களாக அவதாரம் எடுக்கின்றனர். 'ஆட்டம் நின்றால் ஓட்டம்' என்பது போல் எல்லாம் முடிந்ததும் போய்விடுகின்றனர். என்ன செய்வது? மக்களும் 'தெரியாத பேயைவிட தெரிந்த பேய் மேல்' என்று இருந்து விடுகின்றனர். ஒரு மாற்று வழி தெரியவில்லை. யாரிடம் பணம் இருக்கின்றதோ அவர்களின் பேச்சே எடுபடும். தம் சுயநலனுக்காக மலையக மக்களை சாட்சி சொல்லி அவர்களின் உணர்வுகளை விற்றுவிடுகின்றனர். பல தடவை அமைச்சுப் பொறுப்புக்கள் பெற்றும் மலையக மக்களின் எதிர்காலக் கல்வி, பொருளாதாரம், தொழில் என்பனவற்றில் ஒரு முன்னேற்றமும் இல்லை.

தொடர்ந்தும் மலையக சமூகம் கல்வி வளர்ச்சியில் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றது. எந்த ஒரு ஆக்கபூர்வமான செயற்பாடும் இல்லை. மலையக இளைஞர், யுவதிகளின் கல்வி சாதாரண தரத்துடன் நிறைவுபெறுகிறது. எமது மலையகப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் சேவை மனப்பான்மையுடன் சேவை செய்வதில்லை. அது பணம் சம்பந்தப்பட்டதாகவே இருக்கின்றது.

எமது அரசியல்வாதிகள் மலையகத்தில் இருக்கும் கோவில்களுக்கு விக்கிரகங்கள், ஒலிபெருக்கி திருவிழா நடத்த, பணம் என்பனவற்றை வழங்கி, மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுகின்றனர். இன்று எமக்கு என்ன தேவை? என்ன குறைகள் என்ன? எமது எதிர்பார்ப்புகள் என்ன? என்பதை அரசியல்வாதிகள் புரிந்து செயற்பட வேண்டும். எமது தேவைகளை அவர்களது சொந்தப் பணத்திலிருந்து கேட்கவில்லை. இன்று நாம் இருக்கும் வீடுகள் கூட ஆங்கிலேயர் கட்டித் தந்தவை. எங்கள் வாழ்வு அடிமை வாழ்வா? எங்கள் வாழ்வு வளம் பெற எமது தேவைகள் நிறைவேற வேண்டும் என்பதற்காகவே நாம் மலையகத் தலைமைகளைத் தெரிவுசெய்தோம். இதனை அவர்கள் புரிந்துகொள்வார்களா? இதுதான் மலையக மக்களின் மனங்களிலும் எழுகின்ற வினா.

-ம.ருத்ரா, சின்ன செல்வகந்த.


## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.

☎ 067-2250349


# 9ஆம் ஆண்டு நினைவலை



மலர்வு 24 09 1981

உதிர்வு 22 09 1995

**செல்வி ம.அல்போன்ஸ் - அமலவிஜி**

**நாகர்கோவில் மகா வித்தியாலய 9ஆம் ஆண்டு மாணவி**

ஒன்பது ஆண்டுகள் ஓடிச் சென்றாலும் அன்புப் புன்னகை கலையாத உன் முகமும் மை பூசாத கண் விழியும் எல்லோரினதும் உள்ளத்தை விட்டு ஒரு நொடியேனும் மறையவில்லையம்மா. எங்களோடு நீடூழி வாழாத குறை எம்மை வாட்டுதம்மா. பள்ளிக்குச் சென்று நீ பாடங் கற்று வருவாய் என்றிருந்தோம். வந்ததுவோ உன் மரணச் செய்தி. ஆனாலும் மறக்கவில்லை உன் அழகு முகம். பிறந்தநாளை நினைத்திருந்த அமலவிஜியே! உன் இறப்பு நாளை நினைவு கூருகிறோம். உன் பிரிவால் அப்பா அல்போன்ஸ் - அம்மா சிசிலியா, அக்காமார் ராஜி, றெஜி, ஜசி, அண்ணா ராஜன், அத்தான்மார் அசோக், அருள்தாஸ், கேதீஸ், அண்ணி சாளினி, மகன்மார் அனஸ், அஜய், மகள் அபி, அசானி பங்குத்தந்தை ஏ.ஜே. யாவீஸ், தொட்டப்பா ஸ்ரீபன்-றீற்றா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் உம்மோடு உயிர்நீத்த சக மாணவ மாணவிகள் அனைவரையும் நினைவு கூருகிறோம்.


லண்டன் தொலைபேசி 00442086469549

தகவல் - அல்போன்ஸ்
எஸ்.கேதீஸ்,
328/9C, அளுத் மாவத்தை, கொழும்பு-15.
தொலைபேசி: 4-614363


## மலையாள மாந்திரீகம்







**கை கண்ட பலன் பெற வாருங்கள்**

எம்மால் வெற்றி பெறுவது என்பதாலேயே வாங்கும் பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்

**தினந்தோறும் எம்மிடம் வந்து குவியும் மடல்கள்**

வசீலா, கெகிராவ.

டாக்டர் ஐயா அவர்களுக்கு!

என் கணவர் சலீம் (05.04.1954) பாடசாலை ஒன்றில் ஆசிரியராக இருந்தபோது அந்தப் பாடசாலையில் படித்த ஜரீனா என்ற பெண்ணோடு தொடர்புகொண்டு இருந்தார். 2002ஆம் ஆண்டு ஐயா அவர்களிடம் வந்து பரிகாரம் செய்து எனது கணவனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தேன். இப்பொழுது அவர் மீண்டும் இங்கு வருகிறார். அவர் வந்தவுடன் பழைய தொடர்பு தொடராதிருக்க, ஐயா அவர்கள் காவல் செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஐயாவிடம் செய்த பரிகாரத்தால் எனது மகன் திருமணம் செய்து வெளிநாட்டில் உள்ளார். ஐயாவின் ஆசீர்வாதத்தால் எனது மகனின் வாழ்க்கை சுபீட்சமாகிவிட்டது.

என்றும் எமக்கு உங்கள் ஆசீர்வாதங்கள் வேண்டும்.

புஸ்ரீனா, கொழும்பு -12

அன்புள்ள P.K. SAMY ஐயா அவர்களுக்கு நாங்கள் துன்பத்தில் இருந்த பொழுது உங்களைத் தேடி வந்தோம். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகளால் நான் படிப்பில் அவ்வளவாகக் கவனம் செலுத்தவில்லை. அப்பொழுது அன்பான ஐயா அவர்களே! உங்கள் உதவியால் மாந்திரீக சக்தியுடனும், கடவுளின் உதவியுடனும் எனது EXAM நல்லபடியாக நடந்து BEST RESULTS எடுத்தேன்.

நீங்கள் என்னை BLESSING செய்தீர்கள். உங்கள் அன்பாலும் கடவுளின் உதவியாலும் EXAM செய்யும்போது எனக்கு ஒரு புதிய தெம்பும் தன்னம்பிக்கையும் வந்தது. என் தாய் எனக்காகப் படுகின்ற எல்லாக் கஷ்டத்திற்கும் நான் இன்று என் கல்வியில் முதலாம் இடத்தில் இருக்கிறேன். ஐயா உங்களின் அன்பும் ஆசீர்வாதமும் எனக்கும் என் குடும்பத்திற்கும் எப்போதும் இருக்கட்டும்.

**Prof. Dr. P.K. Samy (J.D.G.A.N) J.P.**

No: 162, Kotahena Street, Mayfield Road, Colombo-13

Sri-Lanka CLI-No- 0094(11)2342463, 42470615, 3431137, 2344832-2449110, Hotline-CLI No:- 0094-(11)-4613133, 4613124, 4613127, Fax-0094112344831

Email-drpksamy@sltnet.lk

நுவரெலியாவில் : Tel Cli No : 052-2222508, 2235097, 223093

வெளிநாட்டவர்களுக்கு எம்மிடம் பிரத்தியேக விசேட சேவைப் பிரிவுண்டு. (இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை. இரகசியங்கள் பாதுகாக்கப்படும்)

## இன்னொருவர் பார்வையில்

# கள்ள மத்தியஸ்தர்

**இலங்கையின் பிரபல அரசியல் விமர்சகரான தயான் ஜயதிலக ஹ"ஸ்டன் என்பவருக்கு எழுதிய "கள்ள மத்தியஸ்தர்" என்ற தலைப்பிலான விடயதானம் கடந்த ஐந்தாம் திகதி ஆசியன் ட்ரிபியூன் இணையத்தளத்தில் வெளியானது. அதன் முக்கிய பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.**

உண்மையில் அமானுஷ்யமாக நடந்துகொள்ளும் அனுசரணையாளரொருவர் எமக்கு இருக்கிறார். ஆனால், எம்மால் அவரை நீக்கிவிட முடியாது. ஏனெனில் அது செய்வதற்குக் கஷ்டமானதொன்றாக அமைந்துவிடும். மற்றப் பிரச்சினை என்னவென்றால் எப்போதுமே நாம் அனுசரணையாளர்களுடன் பிரச்சினை களைக் கொண்டுள்ளவர்களாகவே இருக்கி றோம். எனவே இந்த அனுசரணையாளர் பற்றி ஏதாவது தெளிவற்ற நிலையை நாம் கொண்டிருக்கும் அதேவேளை, எம்மைப் பற்றியும் ஏதோ தெளிவற்ற தன்மை இருக்கிறது என்று தயான் ஜெயதிலகா கூறுகிறார். அவர் மேலும் கூறுவதாவது,

யார் அனுசரணையாளர்களாகச் செயற்பட்டிருந்தாலும் நாம் அவர்களை என்றும் விரும்பியதில்லை. பிரதமர் இந்திரா காந்தியின் தூதுவரான பார்த்தசாரதியை

> **எனவே, நோர்வேக்காரர்கள் ஒன்றில் அடிமுட்டாள்களாக இருக்க வேண்டும் அல்லது துரோகிகளாக இருக்க வேண்டும். இதில் எவ்வாறானவர்களாக அவர்கள் இருந்தாலும், பண்பான அனுசரணையாளர் களாவதற்கான தகுதி அவர்களுக்குக் கிடையாது. ஆனால், அவர்களை உதைத்து வெளியேற்ற எம்மால் முடியாது.**

நினைவிருக்கிறதா? அவர் மேற்கு நாட்டவரோ, வெள்ளையரோ, கிறிஸ்தவ ஏகாதிபத்தியவாதியோ அல்லர். எனினும் இவற்றுக்கும் அப்பால் அதே தரப்புகளிலிருந்தே அதே போன்றே பாரிய கூக்குரல்கள் எழுப்பப்பட்டன. அவருக்கெதிராகவும் அவர் உருவாக்கிய ஒப்பந்தத்துக்கெதிராகவும் பின்னிணைப்பு 'சி'க்கு எதிராகவும் பாரிய கூக்குரல்கள் எழுந்தன. 1984இல் சர்வகட்சி மாநாடு முறிந்து போனதை நாம் நினைவில் கொள்ளலாம். 1984ஆம் ஆண்டு பின்னிணைப்பு 'சி'யை நாம் அமுல்படுத்தியிருந்தால் 1987இல் விமான மூலம் வடக்கில் உணவுப் பொருட்கள் போடப்பட்டதையும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் நாம் கண்டிருக்கமாட்டோம். நோர்வே, இப்போது தீர்வுக்கான முயற்சியில் ஒரு பகுதியாக இருப்பதைப் போன்று, பிரச்சினையின் ஒரு பகுதியாகவும் உள்ளது. பாரிய இழப்பைச் சந்திக்காமல் அவர்களை நாம் தூக்கியெறிந்துவிட முடியாது. இது குறித்து நாம் ஏதாவது செய்துதானாக வேண்டும். ஆனால் முடியுமா?

இரு தரப்புகளுமே பேசாததால் எமக்கொரு அனுசரணையாளர் தேவையாக உள்ளது. அத்துடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு வேண்டிய சகல சாத்தியமான வழிவகைகளையும் தேடிப் பிடிக்க நாம் தயாரென்று உலகுக்குக் காட்ட வேண்டிய தேவை எமக்குள்ளது. நாம் ஏன் அவ்வாறு உலகுக்கு காட்ட வேண்டும்? ஏனெனில் எமக்கு நிதி தேவையாக உள்ளது.

நோர்வேக்காரர்களை அனுசரணையாளர்களாகத் தேர்ந்தெடுத்தமை ஏன் தவறானது? ஏனெனில், அவர்களால் நடுநிலையான மத்தியஸ்தர்களாகச் செயற்படுவது சாத்தியமற்றது. 1987ஆம் ஆண்டு எமக்கெதிராக ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் அவர்கள் கூட்டுத் தீர்மானமொன்றினைக் கொண்டுவந்தார்கள். 1983இல் அத்தீர்மானத்தைக் கொண்டுவந்திருந்தால் அது மிகவும் நியாயமானதாகும். ஆனால், 1987ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு விருப்பம் தெரிவித்து அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ள இணக்கம் தெரிவித்த வேளையில்தான் இந்த மனித உரிமை மீறல் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். 1987ஆம் ஆண்டு புலிகள் யாழ்ப்பாண வீதிகளில் நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்களை உயிருடன் எரித்தார்கள். அனுராதபுரத்தில் யாத்திரிகர்களைக் கொன்றார்கள்.

சில காரணங்களுக்காக நோர்வேயினால் நடுநிலையான மத்தியஸ்தராகச் செயற்பட முடியாது. அங்கே வலுவான சக்திமிக்க தமிழ் அமைப்புகள் புலிச்சார்புப் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளன. இருந்தும் அனுசரணையாளர்களாகச் செயற்பட முன்வந்த பல டசின் கணக்கான நாடுகளில், நோர்வேயை ஜனாதிபதி குமாரதுங்க தேர்ந்தெடுத்தார். பிரான்ஸின் அனுசரணை வேண்டாமென புலிகள் நிராகரித்தனர். ஆனால், புலிகளின் விட்டுக் கொடுக்காத தன்மையைச் சாட்சியமாக உலகுக்கு அம்பலப்படுத்திப் பயன்பெறக் கொழும்பு தவறிவிட்டது. ஆனால், சந்திரிகாவின் நிர்வாகத்தினால் நிலைமையை வழிக்குக் கொண்டுவர முடியுமென்பதைச் சொல்லித்தானாக வேண்டும். எரிக் சொல்ஹெய்ம் ஈடாடிப் பக்கம் வளைந்தபோது, அவரின் கேடு விளைவிக்கும் பாத்திரத்தை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெற்றிகரமாக அம்பலப்படுத்தி, அவரின் பங்களிப்பைக் குறைத்து அனுசரணை வேலைகளை மேற்கொள்ள உயர்மட்ட நோர்வே பிரதிநிதியொருவரை அவர் பெற்றுக் கொள்ள முயன்றார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் இது நடைபெற்றபோதிலும் அது கைநழுவிப் போய்விட்டது.

நோர்வேயினர் புலிகளுக்கு இராணுவ அறிவுறுத்தல்களை வழங்கினார்களா? இல்லையா? என்பது தெரியாது. இப்போதைக்கு நோர்வேயின் விளக்கத்தை ஒரு கணம் ஏற்றுக்கொள்வோம். பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் மற்றும் கௌதமாலாவின் யு.ஆர்.என்.ஜி. கெரில்லாக்களின் பேச்சுவார்த்தைகளின் போதும் அவர்களுக்கு அனுசரணையாளர் களாகச் நோர்வே, செயற்பட்ட வேளை இதே வாய்ப்பை அவர்களுக்கும் வழங்கினார்களா? இல்லையெனில் ஏன்?

எல்சல்வடோரிலும் அயர்லாந்திலும் நீண்டகாலம் நடைபெற்ற ஆயுத மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதில் அமெரிக்கர்கள் மிகவும் வெற்றிகரமான பங்களிப்புச் செய்தனர். எல்சல்வடோர் கெரில்லா இயக்கத்தினதும் கௌதமாலா கெரில்லாக்களினதும் ஆயுதங்கள் களையப்படுவதற்கு முன்னர், அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தபோது இந்த கெரில்லா இயக்கங்களுக்கு வானொலிக் கருவிகள் கொடுத்தார்களா? அல்லது அமெரிக்க இராணுவ நிலைகளுக்குச் செல்ல வசதியளித்தார்களா? அல்லது பெரிய வெள்ளிக்கிழமை ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அமெரிக்க செனட்டர் ஜோர்ஜ் மிச்செவ்வால் ஐரிஷ் கெரில்லாக்களுக்கு செய்மதி உபகரணங்கள் கொடுக்கப்பட்டதா? அல்லது அமெரிக்க இராணுவ நிலைகளுக்குச் செல்ல வசதி செய்து தரப்பட்டதா?

எனவே, நோர்வேக்காரர்கள் ஒன்றில் அடிமுட்டாள்களாக இருக்க வேண்டும் அல்லது துரோகிகளாக இருக்க வேண்டும். இதில் எவ்வாறானவர்களாக அவர்கள் இருந்தாலும், பண்பான அனுசரணையாளர் களாவதற்கான தகுதி அவர்களுக்குக் கிடையாது. ஆனால், அவர்களை உதைத்து வெளியேற்ற எம்மால் முடியாது. மத்தியஸ்தர் ஒரு கள்ளனாகவோ அல்லது வஞ்சகனாகவோ இருக்கலாம். ஆனால் அங்கு தலையிட்டு அவர்களை விரட்ட எம்மால் முடியாது. மூன்றாவது மத்தியஸ்தரும் ஆட்ட நடுவருமான அவர்களால் இனியும் தீங்கு ஏற்படாமல் நாம் ஏதாவது செய்தாக வேண்டும். அவர்களோடு சேர்ந்து அனுசரணையாளர்களாகச் செயற்பட வேறு யாரையாவது நாம் நியமிக்க வேண்டும் அல்லது அவர்களுக்கு மேலாகச் செயற்பட அல்லது இரு பொறுப்புகளையும் வகிக்க யாரையாவது நியமிக்க வேண்டும்.

# 449 பிள்ளைகளைப் புலிகள் விடுவித்துள்ளனர்

## 1300க்கு மேற்பட்டோர் இன்னமும் அவர்கள் வசமுள்ளனர்.

**அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதான முன்னெடுப்புகளில் ஏற்பட்டுள்ள தேக்கநிலைமையிலும், புலிகள் இயக்கம் அளித்த உறுதிமொழிகளையும் மீறித் தொடர்ந்தும் தமது படையணிகளில் 18 வயதுக்குக் குறைவான வயதுடைய பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதாலும் வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமிகளுக்கான புனர்வாழ்வுப் பணிகள் ஆபத்தான கட்டத்தை எட்டியிருப்பதாக ஐ.நா.அமைப்பான யுனிசெப் கூறுகிறது. வயது வந்த பெரியவர்களின் மோதல்களில் சிக்கியுள்ள பிள்ளைகள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டாமென்றும் அறிக்கை கோரியுள்ளது. அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.**

வடக்கு, கிழக்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான செயற்றிட்டம் ஆபத்தான நிலையிலிருப்பதாக ஐ.நா.சிறுவர்களுக்கான சர்வதேச அவசர நிதியம் (யுனிசெப்) கடந்த ஒன்பதாம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. 2004ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத கால முன்னேற்ற மீளாய்வு அறிக்கையிலேயே யுனிசெப் இவ்வாறு தெரிவித்துள்ளது. சிறுவர்களைத் தமது படையணிகளில் சேர்த்துக்கொள்வதில்லையென்று புலிகள் தெரிவித்த உறுதிமொழியைப் பாரதூரமாகக் கருதி நிறைவேற்றத் தவறுவதாலும், சமாதான முன்னெடுப்புகள் முன்னேற்றமின்றித் தொடர்ந்தும் தேக்கநிலையில் இருப்பதாலுமே இந்த ஆபத்தான நிலையேற்பட்டுள்ளதாக அறிக்கை தெரிவிக்கிறது.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டிருப்பதானது, நாட்டின் இரண்டு தசாப்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவியளிப்பதற்குப் பெரும் தடையாக உள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான செயற்றிட்டம் என்ற தலைப்பின் கீழ் இந்த மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. சிறுவர்களைப் படையணிகளுக்குச் சேர்த்துக்கொள்ளும் செயற்பாட்டுக்கு முடிவுகட்டப் புலிகள் தவறியமையும் கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் குழுக்களுக்கிடையிலான மோதல்களின் விளைவும் ஆபத்துக்குள்ளான சிறுவர்களுக்கு உதவியளிப்பதைத் தடுக்கும் ஏனைய காரணிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன.

புலிகள் இவ் வருடத்தின் முதல் ஆறு மாத காலத்திலும் 488 பிள்ளைகளைத் தமது படையணிகளில் சேர்த்துள்ளனரென்று அறிக்கைகள் கூறுகின்றன. சில சிறுவர்கள் தாமாகவே முன்வந்து புலி இயக்கத்தில் சேர்ந்துள்ளனர். ஏனையவர்கள் பலாத்காரமாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். சில வேளைகளில் மோசமான வன்செயல்கள் பிரயோகிக்கப்பட்டுப் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர். குறிப்பாக கிழக்கில் இவ்வாறு இடம்பெற்றுள்ளது. இதே காலப் பகுதியில் 449 சிறுவர்களைப் புலிகள் விடுவித்துள்ளனர். எனினும் 1300க்கு மேற்பட்ட சிறுவர்கள் இன்னமும் புலிகளின் படையணிகளில் உள்ளனர்.

இலங்கையில் கடந்த இரண்டு வருடங்களாக ஓரளவு அமைதியும் ஸ்திரத்தன்மையும் நிலவுகின்றன. இதனால் இக் காலகட்டத்தில் சிறுவர்களின் நிலைமைகள் குறிப்பிடத் தக்க அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன. அதேவேளை நாடெங்கிலும் சமாதானமும் ஸ்திரத்தன்மையுமுள்ள நிலைமையை உருவாக்குவதற்கு அரசாங்கமும் புலிகளும் விசுவாசமாக அரசியல் விருப்பைக்கொண்டிருக்கும் பட்சத்திலேயே தொடர்ந்தும் முன்னேற்றத்தை அடைய முடியும்.

குறிப்பாக 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர், சிறுமியர்களைப் படையணிகளில் சேர்த்துக்கொள்வதை உடனடியாக நிறுத்துமாறும் படை அணிகளிலுள்ள சகல பிள்ளைகளையும் விடுவிக்குமாறும் யுனிசெப்பின் அறிக்கையில் புலிகளுக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களைத் தம்முடன் இணைத்துக் கொள்வதில்லையென்ற உறுதிமொழியையும் புலிகள் பகிரங்கமாக வெளியிட வேண்டும். தமது அணிகளில் தாமாகவே இணைய வரும் சகல இளம் பருவத்தினரின் வயதை

> **சிறுவர்களைப் படையணிகளுக்குச் சேர்த்துக்கொள்ளும் செயற்பாட்டுக்கு முடிவுகட்டப் புலிகள் தவறியமையும் கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் குழுக்களுக்கிடையிலான. மோதல்களின் விளைவும் ஆபத்துக் குள்ளான சிறுவர்களுக்கு உதவியளிப் பதைத் தடுக்கும் ஏனைய காரணிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன.**

ஆராய்ந்தறிவதன் மூலம், அவர்கள் வயது குறைந்தவர்களல்லர் என்தை உறுதிப்படுத்துவோமென்றும் பகிரங்கமாகப் புலிகள் உறுதிமொழி அளிக்க வேண்டும். கட்டாய ஆட்சேர்த்தலையும் ஆட்கடத்தலையும் நிறுத்துவோமெனவும் அவர்கள் உறுதியளிக்க வேண்டும்.

தடைப்பட்டு நிற்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள், இந்த நாட்டுப் பிள்ளைகள் மீது ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் குறித்தும் யுனிசெப் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்று இலங்கையிலுள்ள யுனிசெப் பிரதிசிதி ரெட் சாய்பான் தெரிவித்துள்ளார். பாதுகாப்பின்மை அதிகரித்திருப்பதாலும் சிறு பிள்ளைகளைத் தொடர்ந்து போர்ப் படைகளில் சேர்த்துக்கொள்வதாலும் யுனிசெப்பின் செயற்றிட்டங்களின் கீழ் மேற்கொண்டு வரும் வேலைத்திட்டங்களின் பயன்களைப் பாதிப்புற்ற குடும்பங்கள் பெறுவதை மேலும் கஷ்டமாக்கியுள்ளது. தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கோ அல்லது தொழிற்பயிற்சி வகுப்புகளுக்கோ அனுப்புவது பாதுகாப்பில்லையென்று குடும்பங்கள் கருதினால், சர்வதேசத் திட்டங்கள் வெற்றிபெறுவது கஷ்டமாகிவிடும் என்றும் அந்த அறிக்கையில் ரெட் சாய்பான் சுட்டிக்காட்டியுள்ளார்.

2003ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒரேயொரு மனித உரிமைகள் ஒப்பந்தமாகும், இந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் உடடினத் தேவைகளைக் கவனிப்பதற்கென இருக்கக் கூடிய, இரு தரப்பும் செய்து கொண்ட ஒரேயொரு சம்பிரதாயபூர்வ ஒப்பந்தமும் இதுவேயாகும்.

இச் செயற்றிட்டத்தின் கீழ் 2004 ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கிட்டத்தட்ட ஏழாயிரம் பிள்ளைகள் மீண்டும் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அத்துடன் 43,000க்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு கற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. யுத்தத்தினால் சேதமடைந்த அல்லது நிர்மூலமாக்கப்பட்ட 241 பாடசாலைக் கட்டடங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன அல்லது மீளக் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. அத்துடன் 580 சிறுவர் போர் வீரர்களும் அவர்களது குடும்பங்களும் சமூக வேலை ஆதாரங்களைப் பெற்றுள்ளன. மேலும் மிக மோசமான வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த அல்லது தெருக்களில் வாழ்ந்து வந்த 410 சிறுவர்களும் சமூக வேலை ஆதாரங்களால் பயன்பெற்றுள்ளனர்.

வடக்கு, கிழக்கிலுள்ள பிள்ளைகளுக்கு ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு ஆகியவற்றைச் சுதந்திரமாகவும் பூரணமாகவும் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை இலங்கை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். அத்துடன் போதியளவுக்குப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள், சுகாதார மற்றும் சமூக சேவை ஊழியர்கள் தேவையான எண்ணிக்கையில் இருப்பதற்கும் அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் மீது பிரயோகிக்காமல் தடுப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டு மென்றும் யுனிசெப் கோரியுள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வழங்கப்படும் வளங்கள் மற்றும் உதவிகளை அதிகரிக்க வேண்டிய கடப்பாடு சர்வதேச சமூகத்துக்கு உண்டு. குறிப்பாக, செயற்றிட்டத்தின் பங்குதாரர்களான முகவராண்மை நிறுவனங்கள் தமது வேலைத் திட்டங்கள், ஆளணியினர், செயற்றிறன் ஆகியவற்றைப் பிள்ளைகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் தமது தேவைகளை விரைவாகவும் காத்திரமாகவும் பெறக் கூடிய வகையில் அதிகரித்துக் கொள்ள வேண்டும். வயது குறைந்த பிள்ளைகளைப் படையணிகளுக்குச் சேர்த்துக்கொள்வது உட்பட, பிள்ளைகளின் உரிமைகள் மீறப்படுவதிலிருந்து அவர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காகச் செயற்றிட்டத்தில் பங்குபற்றும் அமைப்புகள் சமூக சேவை ஸ்தாபனங்களோடு தொடர்ந்தும் கூட்டமைப்புகளை உருவாக்கி புதிய உத்திகளைக் கையாள வேண்டுமென்றும் யுனிசெப்பின் அறிக்கை கோரியுள்ளது.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

அபிராமி அந்தாதி என்னைப் பண்படுத்தியது; என்னுள் ஓர் ஞான விளக்கை ஏற்றி வைத்தது. முறையாகத் தமிழ் கற்றறியா இந்த மூடனை, நிறையசையும் நேரசையும் விளங்கப் பாக்கள் புனையும் ஆற்றலையும் அறிவையும் அருளிச் செய்து, கவிஞர்கள் வரிசையிலே நிற்க வைத்தது. பகுத்தறிவின்



பெயரால், பக்திப் பனுவல்களைப் புறந்தள்ளும் இளைய தலைமுறையை நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுவதெல்லாம் இதுதான். ஆழ்வார்கள், நாயன்மார்கள் இவர்களது அருளிச் செயல்களைப் படியுங்கள். உங்கள் தமிழறிவு சாணை தீட்டப்பெறும்.

'கம்பரசம்' எழுதிய பேரறிஞர் அண்ணா, என் அருமை நண்பர் திரு.பி.சி.கணேசன் அவர்களுக்குச் சொன்ன ஆலோசனை என்ன தெரியுமா? 'கம்பராமாயணத்தைப் படி....' என்பதுதான்.

'வல்லான் வகுத்ததே வாய்க்கால்'. என்கிறபடி நாம் நடத்த வேண்டிய பாதையைப் பரம்பொருள்தான் நிச்சயிக்கிறது. இன்று ·இப்படி இருப்பவன், பின்னால் இப்படி ஆவான் என்று முன்கூட்டியே இறுதியிட்டுச் சொல்லக்கூடிய வல்லமை எந்த மனிதப் பிறவிக்கும் இல்லை. அடுத்த வினாடியை ஆண்டவன் தன் கையில் வைத்திருக்கிறான்.

"எங்கே வாழ்க்கை தொடங்கும்? - அது எங்கே எவ்விதம் முடியும்? இதுதான் பாதை; இதுதான் பயணம்; என்பது எவருக்கும் தெரியாது"

என்று சொன்ன கண்ணதாசன், ஒரு காலத்தில் நாத் தழும்பேற நாத்திகம் பேசியவர். காலம் அவரை ஆத்திகனாகக் கனிய வைத்தவுடன் கடவுள் தத்துவம் அவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கியது.

ஆத்திகனாகக் கனிய வைத்தவுடன், கடவுள் தத்துவம் அவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கியது.

என்னுடைய இளம் பிராயத்தில் என்னுடன் பழகிய இருவரைப் பற்றி நான் சொன்னால், இறைவன் எந்த மண்ணிலிருந்து எந்தப் பொம்மையை உருவாக்குகிறான் என்பது உங்களுக்குப் புரிய வரும்.

ஸ்ரீரங்கம் நகராட்சியில் Sanitory Inspcetor ஆகப் பணிபுரிந்துகொண்டிருந்த என் அருமை நண்பர திரு. மான் பூண்டியாப்பிள்ளை அவர்கள் என் நாடகத்தில் நடித்து வந்தார்கள். அவர் மிகச் சிறந்த குணசித்திர நடிகர். தமிழ் உரையாடல்களை அதன் ஏற்ற இறக்கம் அறிந்து அழகுறப் பேசுபவர். அனேகமாக நான் சரித்திர நாடகங்களையே எழுதிப் போட்டுகொண்டிருந்தால், மான்பூண்டியாப்பிள்ளை போன்றவர்களின் நல்ல தமிழ் உச்சரிப்பு என் நாடகங்களுக்கு ப்ளஸ் பாயிண்டாக இருந்தது.

மான்பூண்டியாபிள்ளை ஒரு நாள் ஒரு நண்பரை என்னிடம் அழைத்து வந்தார். "அவ்ரும் நடிக்க விரும்புகிறார்; நம்ம நாடகத்தில் இவருக்கும் வேஷம் கொடுங்கள்" என்று பிள்ளையவர்கள் என்னை வேண்டினார்கள். வந்த மனிதர் நல்ல சிகப்பாகவும் இலட்சணமாகவும் இருந்தார். காலரிலல்லாத முழுக்கைச் சட்டையும், தட்டுச் சுற்றாகக் கட்டிய எட்டு முழ வேட்டியும் தும்பைப் பூவைப் பழித்தன. முகத்தில் இருபுறமும் கூர்மையாக முறுக்கிவிடப்பட்ட மீசை சுரதா சொல்வது போல் படுத்திருக்கும் வினாக்குறியாக அந்த மீசை அமைந்திருந்தது..

(தொடரும்.......)




---

**உளவு பார்த்தல் எவ்வாறு ஆரம்பமானது, உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதை சில அநுபவங்களிலிருந்து ஆரம்பிப்போம்......**




## சில அநுபவங்கள்

இந்தியா சுதந்திரம் அடைந்த சமயம் அது, ஜவஹர்லால் நேரு பாரதத்தின் முதல் பிரதமராகப் பொறுப்பேற்றார். ஆட்சிக் கலை நமக்குப் புதியது. நம்முடைய தலைவர்கள் அதற்கு முன்னரே கூட பிரிட்டிஷார் வரம்புக்கு உட்பட்டுக் கொடுத்திருந்த சில உரிமைகளின் அடிப்படையில் நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றிருந்தார்கள் என்பது உண்மை. அதன் காரணமாக ஆட்சித் துறையில் ஓரளவுக்கு அவர்கள் அநுபவமும் பெற்றிருந்தார்கள். ஜவஹர்லால் நேரு கூட ஆரம்ப காலத்தில் அலாகாபாத் முனிசிபாலிடியின் தலைவராக இருந்திருக்கிறார். ஆனால், பெரிய ஒரு சுதந்திர நாட்டை நிர்வகிப்பதற்கு இந்த அநுபவங்கள் மட்டுமே போதுமானதாக இருக்கவில்லை.

சுதந்திரம் பெற்ற பாரதத்தின் பொருளாதாரத்தை நிர்வகிப்பது தொடக்கம் அந்நியர் ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைப் பாதுகாப்பது வரை அனைத்துப் பொறுப்புக்களையும் இந்தியர்களே ஏற்க வேண்டிய அவசியம் 1947ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் பதினைந்தாம் தேதிதான் ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்கள், அதன் விளைவாக ஏற்பட்ட அகதிகள் பிரச்சினை போன்றவற்றை நம்முடைய தலைவர்கள் திறமையாகச் சமாளித்து, அரசியல் ஸ்திரத்தை ஏற்படுத்துவதில் வெற்றி பெற்றார்கள். ஆயினும் வேறு சில விஷயங்களில் அநுபவக் குறைவினால் குழப்பங்களுக்கு உள்ளானார்கள் என்பதும் உண்மை.

பிரதமர் பொறுப்பிலிருந்த நேருவிடம் வெளிவிவகாரத்துறை இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின்போது நிர்வாகப் பொறுப்பில் "வெளியுறவுத் துறையில் அநுபவம் பெற்ற மூத்த அதிகாரிகளைத் தன்னுடைய ஆலோசகர்களாக அவர் வைத்துக் கொண்டார். இந்திய உளவுத் துறையைச் சிறப்பான முறையில் அமைப்பது நாட்டுப் பாதுகாப்புக்கு அவசியம் என நேருவிடம் அவர்கள் வற்புறுத்தினார்கள். வெளிநாடுகளோடு நமது ராஜீய உறவுகளைச் சரியான முறையில் அமைத்துக்கொள்ளவும் அது தேவையென எடுத்துச் சொன்னார்கள்.

அவர்கள் சொன்னதையெல்லாம் நேரு பொறுமையாகக் கேட்டுக்கொண்டாரே தவிர அதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. நம்முடைய வெளிநாட்டுத் தூதரகங்களில் நம்முடைய உளவாளிகள் சிலரையும் அதிகாரிகளாக நியமிக்க வேண்டும் என்கிற யோசனை அவருக்குச் சொல்லப்பட்டபோது அவர் திடுக்கிட்டார். "இராஜதந்திரிகள் என்கிற பெயரில் வெளிநாடுகளில் உள்ள நம்முடைய தூதரகங்களில் உளவாளிகள் இடம்பெறுவது ஒழுக்கக் கேடான விஷயம், அதற்கு நான் சம்மதிக்கமாட்டேன்," என்றும் அவர் கூறினார்.

அவர்கள் சொன்ன யோசனையை நேரு சரியான கோணத்தில் பார்க்கவில்லை. உளவாளிகளை நியமிப்பது ஏன் அவசியமென மூத்த அதிகாரிகள் அவருக்கு விளக்கிச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன விளக்கங்களை நேருவால் ஜீரணிக்க முடியவில்லை.

"சர்வதேச உறவுகளை நெறிப்படுத்தும் விதிகளுக்கு முரண்பாடான செயல் அல்லவா அது?" என்று கோபமாகக் கேட்டார்.

நிலைமையினை அவரிடம் எப்படி விளக்கிச் சொல்லுவது என்று அதிகாரிகளுக்குப் புரியவில்லை. அப்போது வெளியுறவு அமைச்சகத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்த மூத்த அதிகாரி கிரிஜா சங்கர் பாஜ்பாய் நேருவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் ஆவார்.

(தொடரும்.......)


---

எயிட்ஸ் நோயைப் பற்றியே எல்லோரும் மிக அதிகமாகப் பேசி வருவதால் பாலியல் தொடர்பான நோய், எயிட்ஸ் மாத்திரம்தான் என்ற எண்ணம் இன்று பலரிடத்தே காணப்படுகின்றது. எயிட்ஸ் நோயைக் குணப்படுத்தக்கூடிய மருந்து வகைகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படாததால் அது உலகின் பயங்கரமான நோயாகக் கணிக்கப்படுகின்றது. எனினும் பாலியல் தொடர்புகள் காரணமாகச் சிகிச்சை பெற வருகின்ற நோயாளர்களது எண்ணிக்கையைப்

# எயிட்ஸினால் மறக்கடிக்கப்பட்டுள்ள ஏனைய பாலியல் நோய்கள்

பார்க்கும்போதுதான், ஏனைய பாலியல் சார்ந்த நோய்கள் பற்றியும் சிந்திக்கத் தோன்றுகின்றது.

எமது நாட்டில் வெகு விரைவாகப் பரவிச் செல்லக்கூடிய அல்லது இந் நாட்டில் பெரும்பாலும் காணக்கூடியதாகவுள்ள பாலியல் நோய் எயிட்ஸ் அல்ல. எனவே எமது நாட்டில் பாலியல் தொடர்புகள் காரணமாகப் பெரும்பாலும் காணப்படுகின்ற சில நோய்கள்



குறித்துப் பார்ப்போம்.

எங்கள் நாட்டில் பாலியல் தொடர்புகள் காரணமாக - அதாவது நோய் ஏற்பட்டுள்ள ஆணுடன் அல்லது பெண்ணுடன் பாலியல் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதன் மூலமும், தன்னினச் சேர்க்கை மூலமும் தோன்றக்கூடிய பயங்கரமான - மரணத்தைக் கொண்டுவரக்கூடிய - நோய்கள் பல உள்ளன. இவற்றில் அதிகளவில் காணப்படக்கூடிய நோய்கள் பின்வருமாறு:-

சிபிலிஸ், கோனோலியா, ஹர்பீஸ், ஷென்க்ரொய்ட், ட்ரக்கமொனியாசிஸ், இனிகெடிகி, சென்பியாசிஸ், லிம்பொச்ரனியுலோமா, வெனிரம், பூச்சிச் சொறி, க்ரனியுலோமோ, இன்க்சியுனால் போன்றவையாகும். இவை பக்ரீறியாக்களினால் ஏற்படுகின்றன.

வைரஸ் காரணமாக ஏற்படும் நோய்கள், ஜெனிடல், ஹர்பீஸ், கொண்டய் லொமாடா, எக்கியுமினோடா, ஹெப்படய்டீஸ், எப்ஸின்பார், எயிட்ஸ் என்பவையாகும்.

இதில் சிபிலிஸ் எனப்படும் நோய் ட்பொனிமா பெலிடம் நோய் கொண்டுள்ள ஒருவருடன் பாலியல் தொடர்புகளை மேற்கொள்ளும்போது தொற்றிக்கொள்கிறது.

இந் நோய் உடலினுள் ஏற்பட்டு 10 இலிருந்து 90 நாட்களுக்குள் முதன்முறையாக நோய்க்கான அறிகுறி தென்படும்.

இந் நோயின்போது, முதற்கட்டமாக பாலியல் உறுப்புகளில் சிறு சிறு கொப்புளங்கள் தோன்றும் இதன்போது வலிகள் தென்படமாட்டாது. இதனால் இதனைப் பலர் பெரும்பாலும் பொருட்படுத்துவதில்லை.

நோய்க் கிருமி உடலினுள் புகுந்து 2 முதல் 6 மாதங்களுக்குள் முகம், கை, கால்களில் தளும்புகள் தென்படும். இதன்போது காய்ச்சல், தலைவலி அல்லது தொண்டை தொடர்பான நோய்கள் ஏற்படக்கூடும். தலைமயிர் உதிரும் சுமார் 24 மாதங்கள் கழிந்த நிலையில் இந் நோய் உடல் முழுதும் வியாபிக்கத் தொடங்கிவிடும். இதனால் தோல் வியாதிகள், கண் மற்றும் மூட்டு வியாதிகள், நாடி தொடர்பான நோய்கள் போன்றவை ஏற்படுவதுடன் உடல் பலவீனமான நிலைக்குத் தள்ளப்படும். இவ்வாறான நோயாளிகள் 3ஆம், 6ஆம், 12ஆம் வாரங்களில் இரத்தப் பரிசோதனையை மேற்கொண்டால் தமக்கு நோய் ஏற்பட்டுள்ளதை அறிந்துகொள்ள இயலும். இதற்காகப் பல வகையாகன இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந் நோய்க்கு உட்பட்டிருக்கும் கர்ப்பிணிப் பெண்களது வயிற்றிலுள்ள குழந்தைக்கும் இந் நோய் தொற்றிவிடுகின்றது. இவ்வாறு ஏற்பட்டால் 12 முதல் 18 வாரங்களினுள் கரு கலைந்துவிடக்கூடும்

28 வாரங்கள் கழிந்துவிட்டால் குழந்தை இறந்தே பிறக்கக்கூடும் இல்லையேல் சிபிலிஸ் காயங்களுடன் குழந்தை பிறக்கக்கூடும்

தகாத முறையில் பாலியல் தொடர்புகளை மேற்கொள்பவர்கள் இந் நோய்கள் பற்றிப் புரிந்து வைத்திருப்பது நல்லது.

கொனோலியா எனப்படும் பாலியல் நோய் நெசலிகா கொனாலியா பக்ரீறியா கிருமிகளைக் கொண்ட ஒருவருடன் பாலியல் தொடர்புகளை வைத்துக் கொள்வதால் தொற்றிக்கொள்கின்றது. இந் நோய்க்கு உட்பட்டவர்களை இலங்கையில் பெரும்பாலும் காண இயலும்.

2 முதல் 14 நாட்களுக்குள் இந் நோய்க் கிருமி வளர்ச்சி பெறுகின்றது. இதில் பெண் நோயாளியினதும் ஆண் நோயாளியினதும் நோய்க் குணங்கள் வெவ்வேறானவையாகும்.

இந் நோய்க்கு உட்பட்டுள்ள பெண்ணின் நோய்க்குணங்கள் வெளியே தெரியாமல் இருக்கக்கூடும். அதிகமான தடவைகள் சிறுநீர் வெளியாகுதல், சிறுநீர் கழிப்பதில் சிரமங்கள் ஏற்படுதல், கர்ப்பப் பையில் ஏற்படும் கோளாறுகள் காரணமாக பாலியல் உறுப்பு வழியாகச் சீழ் வடிதல், முதுகுவலி போன்றவை ஏற்படக்கூடும்.

ஆண் நோயாளிக்கு சிறுநீருடன் மஞ்சள் நிற சீழ் வடிதல், தொண்டை கட்டுதல், சிறுநீர் கழிப்பதில் சிரமம் உண்டாதல் மற்றும் அடிக்கடி சிறுநீர் வெளியேறுதல் போன்றவை ஏற்படக்கூடும்.

மேற்படி நோய் பீடிக்கப்பட்டுள்ள பெண்ணுக்குப் பிறக்கின்ற குழந்தைகளில் கண்களில் குறைப்பாட்டுத் தன்மைகள் காணப்படும்.

இவ்வாறான பெண்களுக்குப் பிறக்கின்ற பெண் குழந்தைகளின் பாலியல் உறுப்புகளில் அவர்கள் பருவமெய்துவதற்கு முன்பதான காலங்களில் வியாதிகள் ஏற்டவும்கூடும்.

ஹர்பீஸ் எனும் பாலியல் நோய் ஹர்பிஸ் சிம்ப்லெக்ஸ் எனும் வைரஸ் காரணமாக ஏற்படுகின்றது. அந் நோய்க் உள்ளவருடன் பாலியல் தொடர்புகொண்ட 6 தினங்களில் நோய்க் குணங்கள் தென்படக்கூடும்.

இதன்போது பாலியல் உறுப்புகளில் சிறு சிறு கொப்புளங்கள் தோன்றி அவை உடைந்து மீண்டும் சுகப்படும். நான்கு வாரங்களில் சுகமானபோதிலும் நோய்க் கிருமி உடம்பினுள் புகுந்து வாழ்நாள் முழுவதுமாக அடிக்கடி இந் நோய் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்


காய்ச்சல், தலைவலி, பாலியல் உறுப்புகளில் எரிவு, காயங்கள் என்பன ஏற்படும். சிலருக்கு நோயின் அறிகுறிகள் மறைந்திருக்கவும் கூடும்.

ஹர்பீஸ் நோய்க்கு கர்ப்பிணிப் பெண்கள் ஆளானால் கருச்சிதைவு ஏற்பட வழியுண்டு அல்லது பிள்ளைக்கும் அந் நோய் ஏற்படக்கூடும்.

இந் நோய் காரணமாகப் பெண்களின் கர்ப்பப் பை சார்ந்து புற்று நோய் ஏற்படவும் இடமுண்டு என தற்போதைய ஆய்வுகள் கூறுகின்றன.

-பாரூக்

# இதய அஞ்சலிகள்



மலர்வு : 26 ❀ 05 ❀ 1976

அழிப்பு : 11 ❀ 09 ❀ 2004

தீவகம் மயான பூமியாகப்பட்டு மனித
வாசனையே இல்லாத 1992
காலப்பகுதியில் அங்கு எமது தலைவர்
சுடுகாடான எமது பகுதிகளை மக்கள்
வாழும் இடமாக மாற்றியமைக்க வேண்டும்
எனக் கடுமையாக உழைத்தார். அப்போது
ஈ.பி.டி.பி.யில் இணைந்து மக்களுக்கு
சேவையாற்றி மக்களுக்காக
வாழ்ந்தவர்களில் - இன்னும்
வாழ்பவர்களில் - ஒருவரான தோழரே!
உம்மை அங்கேயே சுட்டுக் கொன்றனரே!
துப்பாக்கியை நம்பாமல் மக்களை நம்பியும்
நேசித்தும் வாழ்ந்த நீர் என்றும் எங்களோடு
வாழ்வீர். உங்கள் விருப்பங்களை-
கனவுகளைச் சுமந்து எங்கள் மக்கள் பணி
தொடரும்.

-தோழர்கள்

## மாயவன் சந்திரமோகன்
## (தோழர் அருள்தாஸ்)

ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நிதிப்பொறுப்பாளர், முன்னாள் பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர்



உங்கள் பிரிவால் துயருறும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தோழர்களாகிய நாம் இதயபூர்வமான
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**

## மினி உலகக் கிண்ணம்.....

22ஆம் பக்கத் தொடர்ச்சி.

### மேற்கிந்திய தீவுகள்

இங்கிலாந்துடனான தொடரில் படுதோல்வி அடைந்து மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர். அணிக்குள்ளும் ஒற்றுமையின்மை காணப்படுகிறது. இவையெல்லாவற்றையும்விட லாராவின் தலைமையை ஏற்றுக்கொள்வதில் இழுபறிநிலை தொடர்வதானது அணிக்குப் பாதகமாகவே அமையும்.

### பாகிஸ்தான்

அடுத்த வாரம் இந்தியாவைச் சந்திக்க இருக்கிறது. இப் போட்டியானது இறுதிப் போட்டி அளவிற்கு கிரிக்கெட் இரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளது. ஏற்கெனவே இங்கிலாந்து மைதானங்களில் விளையாடிய அநுபவம் மிக அதிகமாக இருப்பதும் சிறந்த வேகப்

**ரபீ**

பந்துவீச்சாளர்களைக் கொண்டிருப்பதும் சாதகமான அம்சங்கள். ஆனாலும், சவால் விடக் கூடிய நிலையில் இருந்து தவறி இருக்கும் இந்தியாவை, பாகிஸ்தான் வெற்றிகொள்ளுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம். அடுத்த வாரத்தில் மிக முக்கிய அணிகளான இங்கிலாந்து - ஸ்ரீலங்கா, நியூசிலாந்து அவுஸ்திரேலியா, இந்தியா - பாகிஸ்தான் ஆகிய அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெறவுள்ளன. கிரிக்கெட் சுவாரசியங்களோடு அடுத்த வாரமும் சந்திப்போம்.

WITH BEST COMPLIMENTS
FROM

**AIRPORT & AVIATION SERVICES (SRI LANKA) LIMITED**

Services and facilities available for passengers and Airport users at -

*Bandaranaike International Airport*

- Vehicle Parking. Terminal Car Park, Remote Car Park, Coach Park.
- Baggage Trolley (Free of Charge)
- Porter Services
- Banking Facilities/ Re-Exchange Facilities.
- Public Telephones
- Sale of Airlines Tickets
- Passenger Relations Service
- Wheel Chair/Stretcher assistance during arrivals and departures
- Passenger assistance to feeble sick Mothers with Infants
- Overall assistance for unaccompanied minors (Children below 12 years)
- Airport Bus services.
- Duty Free Shopping
- Postal & Telecommunication Facilities
- Child Care
- Shower Rooms & Day Rooms
- Transit Restaurant
- Facilities for the Disables
- Passenger assistance
- CIP services
- Left Luggage
- Bond Baggage
- Meeting service
- First Class & Business Class Lounges
- Medical Facilities
- Taxi Services
- Apron Transport Services
- Public Viewing Gallery

*Note : For Details Contact -*

| | |
|---|---|
| Airport Manager | -2252020/2252861 Ext. 3000 |
| Duty Manger | -2252344/2252861 Ext. 3333/3010 |
| Chief of Security Services | -2252030/2252861 Ext. 3800 |
| Tourist Information | -2252411 |
| Duty Manager, Sri Lankan Airlines | -0732366 |

**AIRPORT & AVIATION SERVICES (SRI LANKA) LIMITED.**
**Bandaranaike International Airport,**
**Katunayake, Sri Lanka.**
Web Site - www.airport.lk



# பாப்பா முரசு



சக்தி சக்தி சக்தீ சக்தீ
சக்தீ என்றே ஆடோமோ?
சக்தி சக்தி சக்தீ யென்றோ –
தாளங்கொட்டிப் பாடோமோ?

சுப்பிரமணிய பாரதியார்–

## பாப்பா முரசு சிறுகதை

# அறிவுள்ள ஆண் வாத்தின் கதை



ஒரு பெரிய அத்தி மரத்தில் ஒரு வாத்துக் கூட்டம் வசித்து வந்தது. அதில் ஓர் வயதான ஆண் வாத்து இருந்தது. அது மிகுந்த அறிவுள் ளதாகும்.

அந்த அத்தி மரத்தின் அடிப்பகுதியில் இளங்கொடி ஒன்று படர்ந்து வளர்வதை ஒருநாள் ஆண் வாத்து கண்டது.

“அதோ! அந்தக் கொடியைப் பாருங்கள்! இது நிச்சயம் நமக்கு ஆபத்தை விளைவிக்கும். இது சிறிதாக இருக்கும்போதே இதை நாம் வெட்டிவிட வேண்டும். இல்லையேல், இது பெரிதாக வளர்ந்து மனிதர்கள் இதைக் கயிறாகப் பயன்படுத்தி மரத்தின் மீது ஏறி நம்மைப் பிடிப்பதற்கு வழி வகுத்துவிடும்” என்று அந்த வயதான வாத்து எச்சரித்தது.

“பரவாயில்லை! அது அப்படியே இருக்கட்டும்” என்று மற்ற வாத்துக்கள் கூறி அங்கிருந்து சென்று விட்டன.

சில நாட்களில் இந்தக் கொடி பெரிதாகவும் உறுதியாகவும் அந்த மரத்தைச் சுற்றிப் படர்ந்தது. ஒருநாள் வாத்துக் கூட்டம் இரை தேடச் சென்றபோது, ஒரு வேடன் அந்தக் கொடியைப் பற்றி அத்தி மரத்தின் மீது ஏறி, வாத்துக் கூடுகளின் இடையே கண்ணி ஒன்றினை வைத்தான்.

தங்கள் கூடுகளுக்குத் திரும்பி வந்த வாத்துக்கள், அங்கு வைக்கப் பட்டிருந்த கண்ணிகளில் மாட்டிக் கொண்டன.

“பார்த்தீர்களா! கொடி பெரிதாக வளர்ந்தால் இப்படித்தான் நடக்கும் என்று நான் முதலிலேயே நினைத்தேன். ஆனால் நான் கூறியதை நீங்கள் கேட்கவில்லை!” என்று வயதான ஆண் வாத்து கூறியது.

“அருள் கூர்ந்து நாங்கள் இப்போது என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுங்கள்!” என்று மற்ற வாத்துக்கள் அதனிடம் பரிதாபமாகக் கேட்டன.

“அப்படியானால் நான் சொல்வதைப் போல் செய்யுங்கள். வேடன் இந்த மரத்திற்குத் திரும்ப வரும்போது நீங்கள் எல்லோரும் இறந்துவிட்டதைப் போல் நடியுங்கள். உங்களை மொத்தமாகத் தூக்கிச் செல்வது சுமையாக இருக்கும் என்று வேடன் கருதி, கண்ணியிலிருந்து விடுவித்து, ஒவ்வொருவராகக் கீழே தூக்கிப் போடுவான். இவ்வாறு நம் அனைவரையும் கீழே தூக்கிப் போட்டவுடன், நாம் அனைவரும் வெகு தூரத்திற்குப் பறந்து சென்றுவிட வேண்டும்” என்று வயதான வாத்து கூறியது.

மறுநாள் காலை வேடன் வந்து பார்த்தபோது அனைத்து வாத்துக்களும் ஆடாமல் அசையாமல் இருப்பதைக் கண்டான். அதனால் அவை இறந்துவிட்டன என்று முடிவு செய்த வேடன், அவற்றைக் கண்ணியிலிருந்து ஒவ்வொன்றாக விடுவித்துக் கீழே போட்டான். எல்லா வாத்துக்களும் இவ்வாறு விடுவிக்கப்படும் வரை பொறுத்திருந்த வாத்துக்கள், அனைத்து வாத்துக்களும் விடுவிக்கப்பட்டுவிட்டன என்று கண்டதும் உயரே பறந்து தொலை தூரத்திகுச் சென்றன. வயதான ஆண் வாத்து அவற்றிற்கு நல்ல அறிவுரை கூறியது. அவை முதலில் அதன் அறிவுரையைக் கேட்காதபோதிலும், அவை வேடன் வைத்த கண்ணியில் மாட்டிக் கொண்டதும், அதற்காக மனம் வருந்தி, வயதான வாத்திடமே மீண்டும் அறிவுரை கேட்டு அதன்படி நடந்ததால் பிழைத்தன.

அதனால் பிள்ளைகளே! நல்ல அறிவுரையைக் கேட்பீர்களாக!

# ஆண்எலியும் பெண்எலியும்



ஆண்எலி ஒன்று, பெண்எலி ஒன்று
அன்பாய் வளையில் வசித்தனவே.

ஆண்எலி எதிரே, பெண்எலி எதிரே
அப்பம் பெரிதாய் இருந்தவே.

ஆண்எலி தின்றது, பெண்எலி தின்றது
ஆயினும் ஆசை தீரவில்லை.

ஆண்எலி புகுந்தது, பெண்எலி புகுந்தது
அருகில் இருந்த வீட்டினிலே

ஆண்எலி பார்த்தது, பெண்எலி பார்த்தது
அருமைப் பண்டம் பொறியினிலே.

ஆண்எலி பாய்ந்தது, பெண்எலி பாய்ந்தது
ஆசை தீரத் தின்றிடவே.


ஆண்எலி கேட்டது, பெண்எலி கேட்டது
அதிரும் சத்தம் பட்டெனவே.

ஆண்எலி திகைத்தது, பெண்எலி திகைத்தது
அந்தோ! பொறியில் சிக்கினவே.

ஆண்எலி கதையும் பெண்எலி கதையும்
அப்புறம் அறியேன், அறியேனே!

# அதிசய உலகம்

## ஒட்டகச்சிவிங்கி



15 முதல் 25 வருடங்கள் வரை வாழும் இம் மிருகம் சுமார் 5.5 மீற்றர் உயரமான மரத்தின் உச்சியை தரையிலிருந்தே மொட்டையடித்துவிடும் உயரத்திற்கு வளர்ந்தவை. சுமார் 550 கிலோ முதல் 1930 கிலோ வரை எடையுடையது. ஆண் ஒட்டகச்சிவிங்கி பெண் ஒட்டகச்சிவிங்கியை விடப் பெரியது, வலிமையானது. செம்பழுப்பு நிறத் தோல் மேலே அழகிய டிசைனுடன் இருக்கும். தலையில் இரண்டு சிறிய கொம்புகள் உண்டு. பெண் 5 வயதிலும் ஆண் 8 வயதிலும் பருவமடையும். 453 முதல் 464 நாள் வரை ஒரு பிரசவத்துக்கு எடுக்கும். ஒரு தடவையில் ஒரு குட்டியை மட்டும்தான் ஈனும். இலைகள், செடி, கொடிகள், சில வகைப் பூக்கள், பழங்கள் மற்றும் விதைகளை உணவாக உட்கொள்ளும். மென்மையான பிராணியான இதன் குளம்புகள் மிகவும் வலிமையானவை. உயிரைக் காத்துக்கொள்ள இயற்கை இவற்றுக்கு அளித்துள்ள ஆயுதமும் இதுதான். ஓங்கி உதைப்பதன் மூலம் சிங்கத்தையே கொல்லக்கூடிய வலிமை ஒட்டகச்சிவிங்கிக்கு உண்டு. கேட்கும் சக்தியும் முகரும் சக்தியும் அதிகம். பல கிலோ மீற்றர் தூரம் வரை தெளிவாகப் பார்க்கும் திறன் இதன் ப்ள்ஸ் பாயிண்ட். பிறந்த குட்டி 1.8 மீற்றர் உயரம் இருக்கும். பிறந்த உடனேயே எழுந்து நிற்கும். பிறந்த ஓரிரு வாரங்களிலேயே குட்டிகள் ஒன்று சேர்ந்து ஒரே குழுவாக வாழும். குட்டிகளாய் இருந்கும் போது சிங்கம், புலி போன்றவற்றால் வேட்டையாடப்படும். அதையெல்லாம் மீறி இந்த இனம் உயிர் தப்பி வாழும். பருவமெய்திய ஆண் ஒட்டகச்சிவிங்கிகளுக்கிடையில் யார் பலசாலி என்று நிரூபிக்க சண்டையிட்டுக்கொள்ளும். யார் பலசாலியோ அதுதான் அந்தக் கூட்டத்திலுள்ள பெண் ஒட்டகச்சிவிங்கியுடன் காதல் செய்ய முடியும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **22.09.2004**.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 562**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 560

**பரிசுக்குரியவர்:**
**அ. கட்சன் சைந்திரன்,**
**தரம் 1, புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| அருட்செல்வம் செந்தூரன், 246, அன்புவழிபுரம், திருகோணமலை. | மு.அ.பா மஸ்ரியா, மட்.அல்ஹிறா வித்தியாலயம், காத்தான்குடி-05. |
| செல்வம் தெய்வீகன், புளியங்குளம், திருமலை. | கே. எம். நிஸ்வார், 101/3 கொழும்பு வீதி, குருநாகல். |
| அ. அபிஷென், மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் | எம். எச். அமானி, தரம் 2 கஹட்டபிடியா, முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. |
| எஸ். சகித்யன் 200/51, பைப் வீதி, கொழும்பு - 05 | பி. சல்மான் பாரிஸ், அல்லைநகர் -06, தோப்பூர், திருகோணமலை. |
| ச. ஜேக்கப் ஜெனஸ், மட்/புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | ரி. அன்பு மைந்தன், 8B, பெரேரா ஒழுங்கை, கொழும்பு -06. |

# உங்கள் பொது அறிவு எப்படி?

1. இத்தாலிக்கும் சிசிலிக்கும் இடையில் உள்ள நீரிணை எது?
**மெசினா நீரிணை.**
2. இலங்கையையும் இந்தியாவையும் தொடுக்கும் தொடுவாய் எது?
**பாக்குத் தொடுவாய்**
3. செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைக்கும் கால்வாய் எது?
**சுயஸ் கால்வாய்**
4. சீனாவின் சோகம் எது?
**குவாங்கோ நதி (மஞ்சள் நதி)**
5. ஆபிரிக்காவிலுள்ள நீண்ட நதி எது?
**நைல் நதி**
6. சிறாண்ட கூலி அணை அமைந்துள்ள நதி எது?
**கொலம்பியா.**
7. ரொறன்ரோ நகரம் எவ் வாவிக்கரையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது?
**ஒன்ராறியோ வாவி.**
8. டார்லிங் நதி எங்குண்டு?
**அவுஸ்திரேலியாவில் உள்ளது.**
9. பஞ்சாப் மாகாணம் எதனால் இப் பெயரைப் பெற்றது?
**ஐந்து நதிகள் இருப்பதால்.**
10. சைபிரஸ் எந்தக் கடலில் உண்டு?
**மத்தியதரைக் கடல்.**

# தகவல் பெட்டி





## கை வண்டி

இதுதான் துவிச்சக்கர வண்டியின் புதிய புரட்சி. ‘கன் ரன்ஸ் பைக்’ என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற இத் துவிச்சக்கர வண்டியை 7 பேர் ஓட்டிச் செல்ல முடியும். அது மட்டுமல்ல, ஓட்டிச் செல்வதற்கு ‘ஸ்ரியரிங்’கும் பொருத்தப்பட்டுள்ளது.




## வெப்பத்தில் நெருக்கடி

இக் காலத்தில் உலகின் பல நாடுகள் வறட்சியின் கோரப் பிடியில் சிக்குண்டுள்ளன. இந்த வெப்பத்தில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காக தென் கொரியாவில் யோன்கின் நகரத்தில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்திற்குள் இறங்கிய மக்களுக்கு அதிகளவான சன நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்ட சூழ்நிலையையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.

## புதுமையான பருந்து


தலைக்கவசம் அணிந்தது போல் காட்சியளிக்கும் இப் பருந்துக்கு இப்படியொரு அதிசயத் தண்டனையை வழங்கியவர்கள் மருத்துவர்களே. காலில் ஏற்பட்ட முறிவு ஒன்றுக்கு இரும்புத் தகடு பொருத்தி சிகிச்சை மேற்கொள்ளப்பட்டபின், அக் காயத்தை தனது சொண்டினால் (அலகினால்) தோண்டுவதைத் தடுப்பதற்காகவே இவ்வாறு தண்டனை வழங்கியுள்ளனர் மருத்துவர்கள்.



## சாமியின் சாதனை

பெண் சாமியாரான மாதா ஜெகதாம்பா புதுடெல்லியில் பிரபல்யம் பெற்ற சாமியார். தனது தலைமயிரை 15 அடி வரை வளர்த்து உலக சாதனை படைத்து இருக்கிறார்.





## கண்டுபிடிப்பு

இந்திய பொறியியலாளரான கரீன் காந்தி அமெரிக்காவில் தனது கண்டுபிடிப்புக்காக ஜனாதிபதி புஷ்ஷிடம் விருது பெற்றிருக்கிறார். இவரின் கண்டுபிடிப்பு என்ன தெரியுமா? உலகிலேயே அதிக கார்கள் உள்ள இடம் அமெரிக்கா வாகனப் புகை சூழலை மாசடையச் செய்கின்றன. எனவே, எவ்வாறு தடைசெய்யலாம் என்பதைச் செய்து காட்டினார் காந்தி. காரின் புகைபோகும் குழாயில் இருந்து வெளிறேும் அசுத்த புகையை குழாய்க்கு அருகில் நன்றாக வடிகட்டி சுத்தமான புகையாக வெளியேற தனது மூளை வளத்தைப் பயன்படுத்தி விருது பெற்றார்.

## இரவு பகலாக...

"கஷ்டப்பட்டு உடம்பையும் வருத்தி நான் நடித்த 'பிதாமகன்' என்னை விருதுக்குரியவனாக்கி இருக்கிறது. இந்த விருது டைரக்டர் பாலாவுக்குரியது என்று மனம் திறந்த விக்ரத்திடம், 'அந்நியனும்' உங்கள் நடிப்பில் எதிர்பார்க்கிற படமாகத் தெரிகிறதே" என்றோம்.

"'அந்நியன்' படத்தில் ஒவ்வொரு காட்சியிலுமே கஷ்டப்பட்டு நடிக்கிறேன். இந்தக் கடின உழைப்புக்கு முதலில் ரசிகர்கள் தரும் கரகோஷத்தை எதிர்பார்க்கிறேன்" என்றார். விக்ரம் எதிர்பார்ப்பு நிறைவேற வாய்ப்பு இருக்கிறது.

## மீண்டும் 'சேர்ந்திசை'!

மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதனும் இளையராஜாவும் 'மெல்லத் திறந்தது கதவு' என்ற படத்திற்கு கடைசியாக இசையமைத்தார்கள். இப்போது மீண்டும் இணைந்திருக்கிறார்கள். படம் 'விஷ்வதுளசி'. மம்முட்டி - நந்திதா தாஸ் ஜோடி சேரும் இந்தப் படத்தை அமெரிக்காவில் வாழும் தமிழ்ப் பெண்ணான சுமதிராம் இயக்குகிறார்.

## இருவர்

'கற்க கசடற' என்ற படத்தில் நாயகனாக அறிமுகமாகிறவர் விக்ராந்த் (விஜய்யின் சித்தி மகன்). வளர்ந்துகொண்டிருக்கும் 'அன்புத் தோழி' படத்தில் நடித்துக்கொண்டிருப்பவர் பெயரும் விக்ராந்த். பெயர் ஒன்று என்றாலும் இருவருமே வேறு வேறு. யாராவது ஒருவர் பெயரை மாற்றிக் கொள்வார்கள் என எதிர்பார்க்கிற படவுலகம்.

# சினி விசிட்



அழகேசனில் சத்தியராஜ் - ரோமா

## கிராமத்துப் படம்...

நல்ல கதையுடன் கூடிய அதிரடிப் படம் என்றால் விடுவதில்லை விஜயகாந்த். என்றாலும் அவர் படப்பிடிப்புக்குப் போகும் இடங்களில் எல்லாம் 'வானத்தைப் போல', 'சின்னக்கவுண்டர்' போன்ற கிராமத்துப் படங்கள் பற்றியே இரசிகர்கள் ஆர்வத்துடன் நிறையக் கேட்கிறார்கள். அதன் விளைவுதான் சமுத்திரக்கனி சொன்ன 'நிறைஞ்ச மனசு', கதையைக் கேட்டதும் உடனே 'ஓகே' சொல்லிவிட்டார், கேப்டன்.

## நடித்து முடித்த பிறகும்...

காமெடியில் கலக்கல் பண்ணி வரும் எம்.எஸ்.பாஸ்கர், 'அழகிய தீயே' படத்தில் விழுந்து விழுந்து சிரிக்க வைத்த அளவுக்கு ஒரு காட்சியில் கலங்கவும் வைத்தார். அவர் வீட்டில் தங்கியிருந்த நாலு நண்பர்களில் ஒருவரின் மரணம் பாதித்த அந்தக் காட்சி எடுக்கப்பட்ட நாள் முதல் தொடர்ந்து இரண்டு நாட்கள் சோக மூடில் இருந்தவரிடம் காரணம் கேட்டபோது, "கேரக்டரா வாழுறவன்தான் நல்ல கலைஞன். சோகக் காட்சி என்று வரும்போது அந்த இடத்தில் நான் இல்லை. நான் ஏற்றிருக்கிற கேரக்டர்தான் நிற்கிறது. காட்சி முடிந்த பிறகும் எனக்குள் குடியேறிய அந்த கேரக்டர் வெளிப்பட முடியாமல் இரண்டு நாட்கள் வரையாவது இயல்பு வாழ்க்கைக்கு அப்பாற்பட்டு நிற்கிறேன்" என்றார்.

அட! கேரக்டராகவே மாறிப் போவதில் இப்படி ஒரு கஷ்டமா....!



## விருது வந்தாச்சு...!

நடிப்புக்காக தேசிய விருது தேடிவந்த சந்தோஷத்தில் இருக்கிறார் மீரா ஜாஸ்மின். 'ஒண்ணு நடுவிலாபம்' என்ற மலையாளப் படத்தில் மீரா ஏற்றிருந்த ஷாகின் என்ற கேரக்டர்தான் விருதுக்குரியவராக்கி இருக்கிறது.

மகத்துவம் பொருந்திய அந்த கேரக்டர்தான் என்ன என்று மீராவைக் கேட்ட போது, "பத்தாம் வகுப்பு படிக்கிற ஷாகின், வலுக் கட்டாயமாக ஒரு மரம் வெட்டிக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்படுகிறாள். ஒரே மாதத்தில் காரணம் இன்னதென்று சொல்லாமல் அவள் கணவன் அவளை விவாகரத்துச் செய்து விடுகிறான். "ஹைய்யா ஜாலி! இனி ஒழுங்காக பள்ளிக்கூடம் போகலாம்" என உற்சாகம் ஷாகினுக்கு. அடுத்து பள்ளியிலும் வீட்டிலும் ஏற்படும் பிரச்சினைகள்தான் கதை" என்றார்.

"விருது நாயகியின் புதிய அணுகுமுறை எப்படி இருக்கும்?" என்று கேட்டபோது, "இனி கதை கேட்பதில் இன்னும் தீவிரமாக இருப்பேன்" என்கிறார்.

## த்ரிஷா Vs ஸ்நேகா!

தமிழில் நம்பர் ஒன் ஸ்தானத்தை அடைவதற்கான போட்டியில் த்ரிஷாவுடன் மல்லுக்கு நிற்கிறார் நடிகை ஸ்நேகா.

சிம்ரன் இடத்தைப் பிடிப்பதில் ஜோதிகா, த்ரிஷா, லைலா, ஸ்நேகா ஆகியோருக்கு இடையே போட்டி இருந்தது. இதில் ஜோதிகா, தயாரிப்பாளர்கள் சங்கத்துடன் தகராறு, சூர்யாவுடன் கிசுகிசு என்று மெதுவாக ஓரங்கட்டப்பட்டு வருகிறார். வாய்ப்புகள் ஏதும் வராத நிலையில் மும்பை போய்விட்ட லைலா, தவணை முறையில் கோலிவுட்டுக்கு விசிட் அடிக்கிறார்.

நமிதாவும் மும்பை புது வரவுகளும் கவர்ச்சி காட்டும் அளவுக்கு நடிப்பு விஷயத்தில் பெரிய ஸீரோக்களாக இருப்பதால், யாரும் நிலையான இடத்தைப் பிடிக்க முடியாத சூழல். சதா, மீரா ஆகியோர் தெலுங்கில் பிஸியாகியிருக்கிறார்கள்.

இதனால் தமிழில் இப்போதைக்கு த்ரிஷாவுக்கும், ஸ்நேகாவுக்கும் இடையே மட்டும்தான் நேரடிப் போட்டி நிலவுகிறது. எப்படியும் நம்பர் ஒன் ஆகிவிடுவது என்ற முடிவில் இருக்கும் ஸ்நேகா, த்ரிஷாவின் பலம், தனது பலவீனம் குறித்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்துள்ளார்.

த்ரிஷாவின் சிக் இடை தன்னிடம் இல்லை என்பதை உணர்ந்த ஸ்நேகா, அந்தக் குறையை நிவர்த்தி செய்ய ஒரு ஆபரேஷன் செய்யப் போகிறாராம். கேரளாவுக்குப் போய் இடுப்பில் தேவையில்லாத கொழுப்பை அறுவை சிகிச்சை மூலம் நீக்கப்போகிறார்.

மேலும் பெரிய நடிகர்களுக்கு ஜோடியாக நடித்தால், இளைய தலைமுறை நடிகர்கள் நம்மை ஒதுக்கிவிடுவார்கள். அது முதலிடத்துக்கு வருவதைப் பாதிக்கும் என்பதைக் கச்சிதமாகப் புரிந்துகொண்டிருக்கும் ஸ்நேகா, மிகவும் தைரியமாக விஜயகாந்த், சரத்குமாருடன் நடிக்கமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்.



ரீமாசென்

ஜூப்பிலி

விஜயகாந்த் படம் -கஜேந்திரா

# பார்த்திபன் உண்ணாவிரதம்

திருட்டு வி.சி.டியை பொதுமக்கள் பார்க்காமல் புறக்கணிக்கக் கோரி நடிகர், இயக்குநர், தயாரிப்பாளரான பார்த்திபன் உண்ணாவிரதம் இருந்தார்.

பார்த்திபன் இயக்கி நடித்துள்ள படம் 'குடைக்குள் மழை'. இந்தப் படம் திரைக்கு வந்துள்ளது. "இந்தப் படத்தை யாரும் திருட்டு விசிடியில் பார்க்க வேண்டாம்" என்று பார்த்திபன் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

திருட்டு விசிடி மூலம் இப் படத்தை கேபிள் டி.வி.யில் ஒளிபரப்ப வேண்டாம் என்று கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு பார்த்திபன் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறியிருப்பதாவது :

"'குடைக்குள் மழை' வித்தியாசமாக ஒரு புதிய கோணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. பெரிய திரையில் பார்த்தால் மட்டுமே திருப்தி தரும் வகையில் அதிநவீன வசதிகளைப் பயன்படுத்திப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது குட்டித்திரையில் பார்ப்பதற்கு ஏற்ற படமல்ல. எனவே எக் காரணம் கொண்டும் உங்கள் கேபிள் டி.வியில் இப் படத்தை ஒளிபரப்ப வேண்டாம். இதனால் பணவருத்தம் என்பதை விட மனவருத்தம் அதிகமாக உள்ளது. இந்த வருத்தத்துக்கும் வலிகளுக்கும் பின்னால் நிறைய வடுக்கள் உள்ளன" என்று கூறியுள்ளார்.

---

விஜயகாந்த் துவங்கும் அரசியல் கட்சிக்குப் பெயரை அவரது இரசிகர்களிடமே கேட்டுள்ளார். மாவட்ட வாரியாக தலைமை மன்றத்திற்குத் தபால் மூலம் தெரிவிக்க உத்தரவிட்டுள்ளார் பிரேமலதா விஜயகாந்த்.

---

சமீபத்தில் மும்பை சென்று இந்திப் பட வாய்ப்புக்காக அங்குள்ள மாடல் கோ-ஆர்டினேட்டர்களிடம் தன் டுமச் கிளாமர் ஆல்பத்தை விநியோகித்துவிட்டுத் திரும்பியுள்ளார் மீனா.

---

மீரா ஜாஸ்மின் இப்போது அதிக அளவில் கன்னடப் படங்களிலேயே நடித்து வருகிறார்.

---

நவீன இலக்கியவாதிகள் கூட்டம் போட்டால் போய் மணிக்கணக்கில் அமர்ந்து செவிமடுக்கிறார் இயக்குநர் பாலா.

---

அஜித்துடன் 'அட்டகாசம்' படத்தில் நடிகை கிரணாகவே நடிக்கிறார், கிரண்.

---

'ஷாக்', 'அது', 'கன்னி நிலா' ஆகிய படங்களைத் தொடர்ந்து 'குறுக்கெழுத்து' என்ற பெயரில் ஒரு பேய்ப் படம் தயாராகி வருகிறது.



தேவதையைக் கண்டேன் தனுஷ் - ஸ்ரீதேவி

## தனுஷுக்கு வந்த சோதனை!

'நான் பார்க்கத்தான் லோக்கலு - ஆனா, தமிழ்நாட்டுக்கே கலக்கலு' என்று பஞ்ச் டயலாக் விட்டார் தனுஷ். கடைசியில் 'சுள்ளான்' சுருண்டு அவரையே கலக்கிவிட்டது. தற்போது, அண்டர் புரொடக்ஷனில் இருக்கும் அவரது படங்களான 'ட்ரீம்ஸ்', 'அது ஒரு கனாக்காலம்', 'தேவதையைக் கண்டேன்' ஆகிய படங்களுக்கு டோக்கன் அட்வான்ஸ் கொடுத்து வைத்திருந்த சில விநியோகஸ்தர்கள் ஜகா வாங்கிக்கொண்டுவிட்டனர். 'தம்பி படத்தை வாங்கி சூடுபட்டு, கடைசியில் சிங்கிள் டீக்குக் கூட டோக்கன் வாங்க முடியாம போயிடப் போகுது!' என்று இவர்கள் தத்துவம் உதிர்க்கின்றனர்.





## ரகசியமில்லா ரகஸ்யா!

'வசூல்ராஜா' வில் கெட்ட ஆட்டம் போட்ட ரகஸ்யா இப்போது 'தேவதையைக் கண்டேன்' படத்தில் தனுஷுடன் ஆடப் போகிறார்.

பாலிவுட்டில் அயிட்டம் நம்பர் ஒன் பாடல்களில் பட்டையைக் கிளப்பிக்கொண்டிருந்தவர் ரகஸ்யா. அவரை முதன்முதலாக தமிழுக்கு 'கம்பீரம்' படத்தின் மூலம் கொண்டு வந்தார்கள். படம் ஓடாததால் அவரின் ஆட்டம் பெரிதாக வெளியே தெரியவில்லை. தொடர்ந்து வாய்ப்புக்கள் இல்லாமல் மீண்டும் மும்பைக்கே போய்விட்டார்.

'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்.' படத்திற்காக மீண்டும் அவரை இயக்குநர் சரண் அழைத்து வந்தார். படத்தில் 'சிரிச்சு சிரிச்சு வந்தான்' பாடலுக்கு தினேஷின் கிக்கான டான்ஸ் மூவ்மெண்ட்களுக்கு தக்கனூண்டு உடைகளுடன் இவர் ஆடிய துள்ளல் ஆட்டம் இருக்கிறதே, அப்பப்பா! அதுவும் வீணை வாசிப்பது போன்ற மூவ்மெண்ட்க்கு தியேட்டர்களில் விசில் பறக்கிறது. இந்தப் பாடல்தான் இப்போது 'டாப் டென்' னில் நம்பர் ஒன்.

இரசிகர்களிடம் ரகஸ்யாவுக்கு இருக்கும் வரவேற்பைப் பார்த்துவிட்டு, நடிகர் தனுஷ் தனது 'தேவதையைக் கண்டேன்' படத்தில் ஒரு பாட்டுக்கு இவரை வளைத்துப் போட்டுள்ளார்.

---



ரதி

## சிம்புவுக்கு சிந்து 'நோ'

இந்தியில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, குமரியானபின் மாடலிங்கில் நுழைந்து சாம்சங், பெடரல் பேங்க் விளம்பரங்கள் மூலம் தெலுங்கு சினிமா வழியாக தமிழுக்கு வந்த மும்பைப் புயல் சிந்து துலானி படு பிஸியாகிக் கொண்டிருக்கிறார்.

தனுஷுக்கு ஜோடியாக இவர் நடித்த 'சுள்ளான்' சுருண்டுவிட்டாலும், அடுத்த சிம்ரன் நீதான் என்று சொல்லி சுள்ளியை, குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறார்கள், கோடம்பாக்கம் ஆசாமிகளும் தெலுங்குவாலாக்களும்.

'அதிதி' என்ற தெலுங்குப் படம் மூலம் திரையுலகின் புதிய தாரகையாக அறிமுகமாகிய சிந்து துலானி, அங்கிருந்து இளமை கலாட்டாவாக சுள்ளானில் தமிழுக்கு அறிமுகமானார்.

முதல் படமான தெலுங்கில் அடக்க ஒடுக்கமாக நடித்த சிந்து, 'சுள்ளானி'ல் காட்டிய தாராளத்தைப் பார்த்து, "அவரா இவரு" என்று ஆச்சரியப்பட்டு நிற்கிறது தெலுங்கு திரையுலகம்.

ஆச்சரியத்தோடு நின்றுவிடாத தெலுங்கு புரோடியூசர்கள், சென்னைக்கு வந்து சிந்துவுடன் கொஞ்சம் கடலை போட்டுவிட்டு, கையில் அட்வான்ஸையும் கொடுத்துவிட்டுப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

'சுள்ளான்' அநுபவம் மிகவும் இனிமையாக இருந்ததாகவும், முதல் படத்திலேயே இளைஞர்களின் இதயங்களைக் கொள்ளையடித்தது ரொம்பவும் சந்தோஷமாக இருப்பதாகவும் சொல்கிறார் சிந்து.

அப்பா பேங்க் ஆபிசர், அம்மா ரயில்வே ஊழியர். நான் படிச்சது பி.ஏ.சோஷியாலஜி. எனக்குப் பிடிச்சது குஷ்பு. ரோல் மாடல் ஐஸ்வர்யாராய் என தன்னைப் பற்றிச் சின்னதாய் ஒரு புரோபைலும் கொடுத்தார்.

இப்போதைக்கு தமிழில் வணக்கம் என்ற வார்த்தை மட்டுமே பேசத் தெரிந்த சிந்து துலானிக்கு தமிழிலும் அடுத்தடுத்து வாய்ப்புக்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

ஆனால் அதில் 3 படங்களை மட்டுமே ஒப்புக் கொண்டிருக்கும் சிந்து, சிலம்பரசனோடு ஜோடி சேரக் கிடைத்த வாய்ப்பை உதறிவிட்டாராம்.

சிம்புவின் சேட்டைகள் குறித்து அரசல் புரசலாக அறிந்ததால் அந்தப் பட வாய்ப்புக்கு 'நோ' சொல்லிவிட்டார் சிந்து என்கிறார்கள். ஆனால், சிம்புவின் தரப்பிலோ தனுஷை சந்தேகக் கண்ணோடு பார்க்கிறார்களாம்.

நம் படத்தில் நடிக்க வேண்டாம் என சிந்துவுக்கு தனுஷ் ஏதும் தடை போட்டிருப்பாரோ என சிம்பு தரப்புக்குச் சந்தேகமாம். நறநறத்துக்கொண்டிருக்கிறார்கள்.

---

## தனிக்கட்சி : லியாகத் அலிகான்

எதிர் வரும் சட்டமன்றத் தேர்தலில் புதிய கட்சி ஒன்றைத் தொடங்கி நடிகர் விஜயகாந்த் தனித்துப் போட்டியிடுவார் என்று அவரது நெருங்கிய நண்பரும் இயக்குநரும் வசனகர்த்தாவுமான லியாகத் அலிகான் கூறினார்.

தாராபுரத்தில் விஜயகாந்த் பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டத்தில் பேசிய லிபாகத் பின்னர் நிருபர்களிடம் கூறியதாவது :

விஜயகாந்த் அரசியலுக்கு வருவதை ரசிகர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் விரும்புகின்றனர். வரும் சட்டமன்றத் தேர்தலில் விஜயகாந்த் புதிய கட்சி தொடங்குவார். தனித்துப் போட்டியிடுவார். இப்போதே விஜயகாந்த் ரசிகர் மன்றங்கள் ஒரு அரசியல் கட்சி போன்றுதான் செயற்படுகின்றன.

ரஜினி ரசிகர்களையும் நாங்கள் அரவணைத்துச் செல்வோம். பாட்டாளி மக்கள் கட்சி தொண்டர்களைவிட ஆயிரம் மடங்கு வீரத்துடனும் விஜயகாந்த் ரசிகர்கள் இருக்கிறார்கள். வரும் சட்டமன்றத் தேர்தலில் தமிழக மக்களின் பேராதரவுடன் விஜய்காந்த் தலைமையில் புதிய அரசு அமைவது உறுதி" என்றார் லியாகத் அலிகான் கொஞ்சம் கூட சளைக்காமல்.

### விஜய்காந்த் பேட்டி:

இதற்கிடையே பழனியில் நிருபர்களிடம் பேசிய விஜய்காந்த், உடுமலைப்பேட்டையில் நடத்தப்பட்ட ரசிகர்கள் சந்திப்பில் அரசியல் முக்கியத்துவம் ஏதுமில்லை. அதை பத்திரிகைகள் தான் பெரிதுபடுத்திவிட்டன. ரசிகர்களுடன் போட்டோ எடுத்துக் கொண்டேன் அவ்வளவுதான். அரசியல் கட்சி தொடங்கும் சிந்தனையும் இப்போதைக்கு இல்லை. அதைப் பற்றி சிந்திக்கவும் இல்லை.

'கஜேந்திரா' படத்துக்கு சிக்கல் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. நான் படத்தை முடித்துக் கொடுத்துவிட்டேன். படத்தை எப்போது ரிலீஸ் செய்வது என்பதை தயாரிப்பாளர்தான் முடிவு செய்ய வேண்டும் என்றார்.

அரசியலுக்கு வர்றதுக்கு முன்னாலேயே இப்படி குழப்புறீங்களே?...இந்த ஒரு லாவகம் போதும் கேப்டன்...அரசியலுக்கு வந்தா நிச்சயம் ஜெயிச்சுருவீங்க!




## விட்டுவிடுங்கள்!



நானும்
அழகாய்த்தான் இருந்தேன்,
காதலிக்கப்படும்வரை....
நான் சிரித்தேன்
சிலர் எனக்காய்
பரிந்து வருகையில்....
நான் அழுதேன்
என்னைப் பிரிந்து சிலர்
கவலை கொள்கையில்....
நான்
தூக்கித் தூக்கிப்
பந்தாடப்பட்டேன்,
சிலர் என்னை
மாறி மாறி எறிகையில்

ஐயோ....
விட்டுவிடுங்கள்
நான் காதலிக்கப்படாமலே
முதிர் கன்னியாகிவிடுகிறேன்.
இதயங்கள்
மட்டும் பேசும் வரை
உணர்வுகள்
உண்மை பகிரும் வரை
விட்டுவிடுங்கள் நான்
அழகாய் இருந்து கொள்கிறேன்.
ஏனெனில்
நானும் அழகாய்த்தான் இருந்தேன்.
காதலிக்கப்படுவரை.

-யாழ். முல்லை, புத்தளம்.

## ஹைக்கூ

அம்மோய்! பாவம்......
கம்பிக் கூடுதான்
தம்பிக்கு விடு....
'மேசை மின் விசிறி'

வெள்ளையனின் தலை
தட்டுப்பட்டு விட்டதோ
ஐயகோ.....அவன்
தற்கொலையாகுகிறான்.....
'தீக்குச்சி எரிகிறது'

தப்பென்னதான் செய்ததோ
அப்போய்! அதன் தலை
கிள்ளப்படுகிறதே.....
'தேயிலைக் கொழுந்து'

தியாக மென்றால் இது தானோ
பளபளப்பான மேனி
பாகாய் உருகிறதே....
'மெழுகுவர்த்தி எரிகிறது'

இது குழலா
இல்லை கோடரியா....?
'மரம் கொத்தியின் சொண்டு'

-கன்னிமுத்து வெல்லபதியான்,
எருவில்.


## என் காதல்

கடந்த காலச் சிறகுகளைக்
கழற்றி விட்டு
புதிய சிறகுகளைச் சேகரிக்கப்
பறந்து விட்டேன்.

எனக்குக் கவிதையெழுதக்
கற்றுத் தந்த
உன் கண்ணீர்ப் பூக்கள்
என் இதயத்தையும்
பேச வைக்கின்றன.

கவிதை மொழி கொண்டு
இதயம் பேசும் பேனாக்களே
உன் விமர்சனக் கணைகளால்
ஏன் விழிகூட பிதுங்கவில்லை.
ஏனென்றால்.....
நீ தீண்டுவதற்கும் கூட
நான் பாக்கியம்
செய்யவில்லை.

-மு.ஹா.மு.சபீக், மருதமுனை.



## தெவிட்டாத காதல்!

இருவிழி
மோதலில்
இதயத்தில்
ஒப்பாரி!

மரணத்தின்
விளிம்பில்
மனசு பறித்தவளின்
ஞாபகம்!

உன் பால் நிலவு
முகத்திற்கு
பாதா
போட்டுச் செல்!
ஒரு நிலவின்
தொல்லை போதும்!

கர்ப்பம்
பிரசவத்தில்
முடிகிறது
காதல்
கல்லறையில்!

நீ
நிஜமாக வேண்டும்
அப்போதுதான்
நான்
நாகரிகமடைவேன்!

-புத்தளம் நஸீம்ஷமி.


## புன்னகை வரவுகள்

நொடிக்குள் வீழ்ந்து
தொடு தூரம் துடித்த நினைவுகள்
மூச்சுக் காற்றில் முத்தம் தொட்ட
முகமாய்
வெட்கிச் சிவந்த விழிகள்

ஓடை நீரில் தாளம் போட்ட
பாதங்கள்
என்னைக் கண்டதும் ஓடி வந்த
கால்கள்
எரி வீழ்ந்த மனதுக்குள்
நான் வீழ்ந்தபோது இதயம் தொட்ட
கரங்கள்

கரையைத் தொட்ட அலையோடு
தென்றல் தூவும் உப்புப் பூக்களோடு
இதயம் மீட்டும் வீணையோடு
உன்னைத் தொடும் சுவாசத்தோடு
உயிர் சுமக்கும்
புன்னகை வரவுகள்.


-ரவீ, குறிவெளை.



## ஆதலால் துரோகியாயிரு!

ஒன்றும் ஒன்றும் நான்கென்றார்
இரண்டென்று சொல்லியதால்
துரோகியானாய்!


பேரினவாத அழித்தொழிப்பில்
தஞ்சம் கோரி
வெளிநாடு ஓடாமல்
விடுதலை வேண்டிப்
போராளியானதால்
துரோகியானாய்!



கொலைசெய்யாதே
கொள்ளையடிக்காதே
பைபிள் சொல்கிறது.
அதையே நீ சொல்லித்
துரோகியானாய்!

தமிழ்த் தேசியம் சிங்களத்
தேசியம்

கூச்சல்களிடையே
மனிதநேசம் பேசியதால்
துரோகியானாய்!



ஆழ்வதற்காக அல்ல
வாழ்வதற்கே தேசம்
என்றாய் துரோகியானாய்!

துப்பாக்கி முனையில்
பணயக் கைதிகளாய்
எல்லோரும் மௌனித்திருக்க
நியாயம் கேட்டதால்
துரோகியானாய்!

அநியாயங்கள்
அன்னியரால் மட்டுமல்ல
அன்னையால்
இழைக்கப்பட்டாலும்

ஒன்றுதான் என்றாய்
துரோகியானாய்!

தம்முயிர் காக்க
தமிழ்த் தேசிய போதைக்குள்
வெறியூண்ட மக்களுக்கும்
துரோகியானாய்!

போதைகளும் வெறிகளும்
துவேசமும் மூர்க்கமும்
நிறைந்த தேசத்தில்
உன்போன்ற
துரோகிகளால்தான்
மனிதநேயம்
இன்னும் மிச்சமிருக்கிறது.
ஆதலால் துரோகியாயிரு!

-மானுடன், பலாலி.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

"கவிதை சொற்களால் அமைவதே. ஆயினும் மொழியின் ஆதிக்கப் பகுதிக்கு அப்பாற்பட்டதாயிருக்கிறது. கவிதை நிலையான ஒரே அர்த்தமுடையது என்ற கொள்கை புரண்டு போய்விட்டது. 'பல்வேறு அர்த்த விசிறல்களில் கவிஞன் என்ன அர்த்தம் கருதினான் என்பதே ஒரு புதிர்தான்' என்கிறார் வில்லியம் எம்ப்ஸன்.....

கவிஞன் மொழியின் சொற்களைக் கொண்டு கவிதையின் சொற்களை உருவாக்குகிறான். மனசுக்குள்ளிருந்து மனசுக்குள் வெளிக்காற்று படாமல் பாயத் தெரிந்த மொழி. மொழி மூச்சுவிடும் அழகை அந்த ரூபத்தில் காணலாம். சொல், இங்கே சொல்வதற்கும் சொல்லாதிருப்பதற்கும் பயன்படுவதாகிறது.

குறிப்பிட்ட அர்த்தம் தரும் சொற்கள்கூடக் கவிதையில் தமது அர்த்தங்களை இழந்து அசைச்சொல் போல் ஆகி த்வனிகளால் நிரம்பித் தெரிகின்றன.

ஆக, அர்த்த மதிப்பினால் அல்லாமல் அநுபவ மதிப்பினால் உயிர்த்திருப்பனவதாம் கவிதையின் சொற்கள். கவிதையைப் புரிந்துகொள்வதென்பது கவிதையின் அநுபவ மதிப்பை உணர்வதுதான்......" என்று சொல்லிச் செல்கிறார் கவிஞர் அபி.

இவ்வாரச் சிறப்புக் கவிதைகள் உதடுகளின் விசேடத்தைச் சொல்கின்றன.



## உதடுகளின் சரித்திரம்

ஆரஞ்சுச் சுளை என்கிற வர்ணனை
சும்மா இல்லை
அப்படி உதடுகளை
நானே பார்த்திருக்கிறேன்.

வேறு சில உதடுகள்
குங்குமச் சிமிழ்கள்
திறந்தாலே
குங்குமத்துக்குப் பதிலாக முத்துக்கள்.

ஆபிரிக்க உதடுகளும்
பிரெஞ்சு உதடுகளும்
எதிரெதிர் முனைகள்
முன்னது ரொம்பத் தடிப்பானது
மற்றது வெறுமனே
கோடு கிழித்ததுபோல் இருப்பது.

கிரேக்க உதடுகள்தான் உதடுகள்
அழுத்தம் திருத்தமாக
நேற்று 17 - A யில் பார்த்த
யுவதியினுடையது போல.

எப்போதும் விஸ்கி வாசனை வெளியிடும்
கோபால் மாமாவின் உதடுகள்
பார்த்து வரைய முடியாதபடி
கோணிக் கொண்டே இருப்பவை.

மூன்றாம் வகுப்புத் தோழி
முப்பது, முப்பத்தொன்று, முப்பத்திரண்டு
எண்ணுகையில்
முத்தத்துக்குப் போல் குவிந்த
அவள் உதடுகளை
எப்போதும் மறவேன்.

மற்றபடி
மலைத்தொடர் போல்
ஆங்கில 'ஓ' போல்
இரண்டு விரல்களுக்கே
மறைந்து விடுகிறாற்போல
வெள்ளைக்கும் சிவப்புக்கும் பிறந்த
ரோஜா நிறத்தில்
எப்போதும் பிளந்தபடி
மீசைக்குள் ஒளிந்தபடி
எத்தனை உதடுகள்....

தோற்றத்தில்
எத்தனை வித்தியாசம் இருந்தாலும்
குணம் ஒன்று
எல்லா உதடுகளும்
பிதுங்குகின்றன 'இல்லை' என்று.


-ஸோமா வனதேவா.

## காதலின் ஸ்தூபி


காலத்துக்குள்
காலமற்றிருப்பவை
முத்தமிடும் கணங்கள்.
மூடிவைக்கப்பட்ட பியானோவுக்குள்
பொத்தி வைக்கப்பட்ட சங்கீதமாய்
நம் முத்தங்கள்
நமக்குள் ஒளிந்து கிடந்தன.
என் வறண்ட நாவினை
உயிரின் இதழ் போன்ற
உன் நாவினால் தீண்டியபோது
நமக்குள் உறைந்து கிடந்த காதல்
உருகத் துவங்கியது.
முத்தங்கள் உதடுகளைக் கௌவும் நிகழ்வன்று
உயிரைப் பருகும் அற்புதம்.
முத்தங்களில் கடல் ஏழல்ல,
முத்தங்களின் ஸ்வரங்களும் ஏழல்ல;
முத்தத்தில் மூழ்கியவன் தாகூர்.
முத்தக் கடலில் இறங்காமல்
கரையில் நின்று கனவு காண்பவன் நகுலன்.
கண்ணதாசன் கண்டது எத்தனை உதடுகள்?
முத்தங்களை ஸ்வீகரித்தவன் கவிஞன்.
முத்தத்தினால் முளைத்த சிறகுகளின்
வசீகர வண்ணங்களில் எழுதப்பட்டிருக்கிறது
நம் பெயர்.
குழந்தைகளிடம் கொடுத்தனுப்புகிறார்
கடவுள் நமக்கான முத்தங்களை.
காளி சூலத்தால் எழுதினாள்
காளிதாசன் நாவில்.
உன் நாவினால் நீ எழுதினாய்
என் கவிதையை.
'கற்பூரம் நாறுமோ
கமலப்பூ நாறுமோ' என்று
வெண் ஆழி சங்கிடம் விசாரிக்கிறாள்
ஆண்டாள் ஆயர்பாடியானின் இதழ் ருசியை.
முத்தத்தின் போதையில் பிரவாகமெடுக்கின்றன
மோகனத்தின் பாசுரங்கள்.
முத்தத்தால் திறந்துகொண்டே இருக்கின்றன
புணர்ச்சியின் புதுப் புது கதவுகள்.
முடிவுறாத காலத்தின் தீராத சிணுங்கலாய்
முத்தமிட்டுக்கொண்டே இருக்கின்றன கூண்டுப்
புறாக்கள்.
கொடுக்கும் போதே
எடுத்துக் கொள்ளப்படுகிறது முத்தம்.
முத்தத்தால் எழுப்பு காதலின் ஸ்தூபியை
மச்ச புராணம் போல்
முத்த புராணம்.
முத்தத்தில் முத்துக் குளி.
முத்துக் குளிக்காதவன் பித்துக்குளி.
சருகான கிழவி
இளமையில் பெற்ற முதல் முத்தங்களை
எண்ணியெண்ணிப் பார்க்கிறாள்.
இளம்பருவத்துத் தோழியோ
தான் பெற்ற முத்தத்தை
எங்கே ஒளித்து வைப்பது என்று
நட்சத்திரங்களிடம் கேட்டுக்கொண்டிருக்கிறாள்.
சாத்தான்களுக்கே சமர்ப்பிக்கப்படுகின்றன
தேவதையின் முத்தங்கள்.
நெஞ்சில் பாய்ந்த ஒரு ஆழமான கத்தியின்
காயம் உன் முத்தம்.
மரண வாயில்வரை வந்து
வழியனுப்பும் வசீகரம் மிக்கது
நீ முத்தமிடுகையில்
என் கண்களில் விழுந்த உன் முகம்.
மோகத்தில் சிறகு முளைக்கும்
முத்தங்களை அள்ளி வானத்தில் பறக்கவிடு.
முத்தங்கள் சிறகடிக்கிற வானத்தில்
நிலவு தாதமாகவே உதிக்கிறது.

-இளையபாரதி


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : உ. சுவேந்திரன்
வயது : 21
முகவரி : P.O. Box 40209, Doha, Qatar.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர் : தி. கனகசபை குணா.
வயது : 25
முகவரி : P.O. Box 4365, Doha, Qatar.
பொழுதுபோக்கு : பேனா நட்பு, பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர் : எஸ்.எம். றியால்
வயது : 35
முகவரி : இல.58, சுதுரியா, அக்கரைப்பற்று.
பொழுதுபோக்கு : பத்திரிகை, கவிதை, ஓவியம்



பெயர் : R. Ruban.
வயது : 28
முகவரி : No.24, Randolph Road, Southall, ub11bnl, London.
பொழுதுபோக்கு : வழமையானவை.




# கொழு கொழு குழந்தையாக வளர்ப்பது எப்படி?

என் குழந்தை கொழு கொழு என்று நன்றாக இருக்க வேண்டும் என ஆசைப்படாத அம்மணிகள் யாராவது உண்டா?

அப்படி ஆசைப்படும் பெண்களுக்கு இது அருமையான டிப்ஸ்.

ஒரு குழந்தைக்குத் தாய்ப் பால் என்பது முழு அளவிலான சக்தியை வழங்குவது முதல் 3 மாதத்திற்குத்தான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக சைடு டிஷ் தேவை.

பிறந்த குழந்தைக்கு ஒரு மாதம் முடிவடைந்துவிட்டாலே தாய்ப் பாலோடு கொஞ்சம் அவ்வப்போது ஆப்பிள் சாறு கொடுப்பது நல்லது.

2,3 மாதங்கள் எனின் ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை ஆகிய பழங்களின் சாறு கொடுங்கள். தவிரவும் காரட், பீன்ஸ், தக்காளி, கீரை வகைகள் ஆகியவற்றின் சாறையும் கொடுக்கலாம்.



4,5 மாதங்கள் எனில் புழுங்கல் அரிசி, பார்லி, கேழ்வரகு ஆகியவற்றை வறுத்து மாவாக்கி வைத்துக்கொண்டு கஞ்சியாக்கி அதோடு சிறிது பால் சேர்த்துக் கொடுங்கள்.

5,6 மாதங்கள் எனில் காய்கறிச் சாறோடு இறைச்சிச் சாறும் கொடுங்கள். இறைச்சி சாறை துணியால் வடிகட்டிக் கொடுக்க வேண்டும்.

6 மாதங்களுக்குப் பிறகு பொட்டுக்கடலை, அரிசி, பார்லி, வறுத்த பச்சைப் பயறு ஆகியவற்றை மாவாக்கிக் கூழாக்கிக் கொடுக்கலாம். வேகவைத்த பருப்புடன் சிறிது உப்பும் சேர்த்துக் கூழுடன் கொடுக்கலாம்.

7 மாதங்கள் ஆகும்போது வேகவைத்த மசித்த உருளைக் கிழங்கு. ஆப்பிள் மற்றும் பழுத்த வாழைப் பழம் கொடுக்கலாம். ரஸ்க் - பிஸ்கட் ஊறவைத்துக் கொடுக்கலாம். 8 மாதங்களில் மெதுவான இட்லி, இடியப்பம், பாலாடைக்கட்டி தரலாம்.

9ஆவது மாதத்தில் இருந்து வேகவைத்த முட்டையின் மஞ்சள் கருவை மசித்து, கூழுடன் கலந்து கொடுக்கலாம்.

10ஆவது மாதத்தில் சூடான பாலில் பச்சை முட்டையை அடித்துக் கலக்கி, வடிகட்டிக் கொடுக்கலாம்.

9-10 மாதங்களில் அரிசிச் சோற்றுடன் வேகவைத்த பருப்பையும் பிசைந்து கொடுக்கலாம். நன்றாக மசித்த இறைச்சியைக் கொடுக்கலாம்.

18ஆவது மாதத்தில் இருந்து முள் இல்லாத மீன் கொடுக்கலாம்.

இவற்றோடு ஊட்டச்சத்து மிக்க சொட்டு மருந்துகளையும் அவ்வப்போது கொடுத்து வரவும்.

குழந்தைகளுக்கு எந்த ஒரு உணவைக் கொடுக்கும்போதும், தொடக்கத்தில் அது ஏற்றுக் கொள்கிறதா? இல்லையா? என்பதைத் தெரிந்து கொடுக்க வேண்டும்.

எனவே, மிகக் குறைந்த அளவில் கொடுத்து டெஸ்ட் செய்துவிட்டுப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உணவின் அளவை கூட்ட வேண்டும்.

**சென்ற வாரத் தொடர்ச்சியான சுருக்கம் நீங்க தொடர் அருத்த வாரம் பிரசுரமாகும்**

# புன்னகையோடு விழித்தெழுங்கள்

காலை நேரத்தில் தூக்கத்திலிருந்து விழித்தெழுவது உங்களுக்குச் சிரமமாக இருந்தால் நீங்கள் சோம்பேறி. அதனால்தான் அப்படி விழித்தெழக் கஷ்டப்படுகிறீர்கள் என்று நீங்களாகவே முடிவு செய்துகொள்ளாதீர்கள். நீங்கள் எல்லோரையும் போல சாதாரணமாகவே இருக்கிறீர்கள். விழித்தெழுவது என்பது இரவில் தூங்கப் போவது போன்றதே. சிலா படுக்கையில் படுத்த சில நொடிகளிலேயே தூங்கிவிடுகிறார்கள் ஆனால் பெரும்பாலானோர் தூங்கக் கொஞ்ச நேரம் ஆகும்.

உலகையே வென்றுவிடப்போவது போல சிலா் படுக்கையிலிருந்து காலை நேரத்தில் உடனடியாக எழுந்துவிடுவார்கள். ஆனால் சாதாரண மனிதன் காலையில் எழ வேண்டிய நேரத்தில் மகிழ்ச்சியாக குதூகலமாக இருப்பதில்லை. அப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவையும் இல்லை.



காலையில் மந்தமாக இருந்தால் அதுவே நாள் முழுவதும் தொடரும் என்பதால் மனோதத்துவ நிபுணர்கள் மக்கள் ஏன் காலை நேரத்தில் எழுந்து வேலையைத் துவங்கக் கஷ்டப்படுகிறார்கள் என்பதை ஆய்வுசெய்து காலையில் மகிழ்ச்சியோடு எழுந்து நாளைத் துவக்கச் சில வழிகளையும் சொல்லியிருக்கிறார்கள்.

இரவு நேரத்தில் சன்னல் திரைகளை இழுத்து மூடிவிட்டுப் படுக்கச் செல்லும் பழக்கம் உடையவர்கள் இனி அப்படிச் செய்யாதீர்கள். அப்படிச் செய்யாமலிருந்தால் காலை நேரச் சூரியன் உங்கள் அறைக்குள் வந்து எட்டிப் பார்த்து உங்களை அதுவே எழுப்பும். மிருகங்களையும் பறவைகளையும் சூரியன் எழுப்பும். நாம் மட்டும் எப்படி மாறுபட்டவர்களாக இருக்க முடியும். நீங்கள் தூங்கச் செல்வதற்கு முன் சாப்பிடும் பழக்கம் உள்ளவராக இருந்தால் குறைவாகச் சாப்பிடுங்கள். இரவில் அதிகமாகச் சாப்பிடவில்லையென்றால் காலையில் பசியெடுக்கும். அந்தப் பசியே உங்களை எழுப்பிவிட்டுவிடும். உங்கள் படுக்கைக்குப் பக்கத்தில் ஒரு டம்ளர் பழரசத்தை வைத்துவிட்டுத் தூங்கத் துவங்குங்கள். மறுநாள் காலையில் கண் விழித்து எழுந்தவுடன் அதைச் சாப்பிடுங்கள். பழரசத்தில் உள்ள சீனி உங்களுக்குத் தேவையான உடனடி சக்தியைத் தரும். அடுத்த ஆலோசனை சீக்கிரமாகத் தூங்கப் போகாதீர்கள். இரவு 8 மணி நேரத் தூக்கம் வேண்டும் என்று நினைக்கிறீர்களா? எல்லோருக்கும் எட்டு மணி நேரத் தூக்கம் தேவையில்லை என்றே ஆய்வு முடிவுகள் சொல்கின்றன. பலா் ஐந்து அல்லது ஆறு மணி நேரத் தூக்கத்தோடு நன்கு வாழ்கிறார்கள். தேவைக்கு அதிகமான நேரம் நீங்கள் தூங்கினால் மறுநாள் காலையில் அதிக ஆர்வத்தோடு உற்சாகமாக இருப்பது போலத் தோன்றலாம். ஆனால் உண்மையில் அப்படி இருப்பதில்லை. குறைவான நேரமே தூங்கினால் எப்படிச் சுறுசுறுப்பில்லாமல் இருப்பார்களோ, அதே போலத்தான் இருப்பார்கள். காலையில் படுக்கையிலிருந்து எழுவதற்குச் சிரமமாக இருந்தால் அது அதிகமான நேரம் தூங்கியதால் இருக்கலாம். அல்லது கடிகாரத்தில் மணி ஓசை எழுப்புவதற்கான நேரத்தை எப்படி வைத்தீர்கள் என்பதைப் பொறுத்தும் இருக்கலாம்.

எழ வேண்டிய நேரத்திற்குப் பத்து நிமிடம் முன்னதாக மணி அடிப்பது போல கடிகாரத்தில் வைக்கலாம். காலையில் மணி அடித்து உங்களை எழுப்பிய பிறகும் கூட பத்து நிமிடங்கள் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்துவிட்டு எழலாம் என்பது உண்மைதான். ஆனால் அதில் திரும்பவும் தூங்கிவிடும் ஆபத்தும் இருக்கிறது. அதனால் எழ வேண்டிய நேரத்திற்குச் சரியாகக் கடிகாரத்தை வைத்துக்கொள்ளுங்கள். காலையில் கடிகாரம் மணி அடித்து உங்களை எழுப்பும்போது படுக்கையில் படுத்தபடியே சிறிது நேரத்திற்கு கைகளை நீட்டி கால்களை மடக்கி, பாதத்தை நீட்டி, மடக்கி ஏதாவது செய்தால் இரத்த ஓட்டம் துரிதமாக நடைபெறத் துவங்கும். இது மூளைக்கு இரத்தம் செல்வதை அதிகரிக்கும். இது உங்களை படுக்கையிலிருந்து எழுவதற்கு உதவி செய்யும். நாள் இனிய நாளாக அமையும் என்ற நம்பிக்கையோடு புன்னகையுடன் எழுந்து நாளைத் துவக்குங்கள்.

# வியர்வையால் உண்டாகும் துர்நாற்றம் போக வேண்டுமா?

இப்போதெல்லாம் நிறைய வாலிபர்கள் விதவிதமான ஆடைகளை உடுத்திக்கொள்கிறார்கள். விதவிதமாய்த் தலை சீவிக்கொள்கிறார்கள். அத்துடன் வாசனைத் திரவியங்களை வாங்கிவந்து ஆடையின் மீது தெளித்துக்கொள்கிறார்கள். உடலுக்கு இவர்களாகவே ஒரு வாடையை உண்டாக்குகிறார்கள்.

ஆனால், உடலுக்குச் செயற்கையான வாசனை தேவையா என்பதைச் சிந்திக்க வேண்டும். தினமும் குளிப்பவர்களுக்கு வாசனைத் திரவியம் ஏன்? தினமும் குளிக்க முடியாத நிலையில் வாழ்பவர்களுக்குத்தான் வாசனைத் திரவியம். மற்றெவருக்கும் தேவையில்லை. உடலைச் சுத்தமாக வைத்திருந்தாலே போதும்.

உடலுக்குள்ளே நோய்களை வைத்துக்கொண்டு, குடல் புண், வயிற்றுப் புண், மலச்சிக்கல், பல் கோளாறுகள் என்று இருக்கும்போது வாய்நாற்றம் இருக்கத்தானே செய்யும்? இதற்கு வாசனையூட்டும் பாக்குத்தூளைப் போட்டால் மட்டும் போதுமா? வாய்நாற்றம் போகுமா? மேற்படி வியாதிகளைக் குணப்படுத்திவிட்டால் போதும், வாய் நாற்றமில்லை என்றாகிவிடும். அது போலவே குளித்துச் சுத்தப்படுத்தினால் உடல் துர்நாற்றமிருக்காது.

வியர்வைச் சுரப்பிகளால் உண்டாகும் வியர்வை, அளவோடிருந்தால் அதுகூட இனிய வாடைதான். ஆனால், சிலருக்கு ஏற்படும் வியர்வை பக்கத்தில் இருப்போரை முகம் சுளிக்க வைக்கும். வியர்வை வருவது உடலுக்கு நல்ல பணியைத்தான் செய்கிறது. நம் உடல் வெப்பமடையும்போதெல்லாம் வியர்வைச் சுரப்பிகள் வியர்வையை வெளியேற்றி உடலைக் குளிரச்செய்து வெப்பநிலையை ஒழுங்குபடுத்துகிறது.

தோலில் முதலில் புறத்தோலும், அதற்கடுத்து அகத்தோலும் இருக்கிறது. அகத்தோலுக்குக் கீழே வியர்வைச் சுரப்பி, எண்ணெய்ச் சுரப்பி என்று இன்னும் பல சுரப்பிகள் உள்ளன. இதில் வியர்வைச் சுரப்பி நம் உடல் நிலைக்கு வெப்பம் கூடுதலாகாமல் பார்த்துக்கொள்கிறது.

கோடை காலங்களில் உடல் வெப்பம் மிகுதியாகும்போது, வியர்வைச் சுரப்பிகள் மூலம் உடலிலிருந்து வியர்வை வெளியேறுகிறது. வெயில் காலத்தில் நிறையத் தண்ணீர் குடிக்கிறோம். தேவையற்ற நீரை வெளியேற்றவும் சிறுநீரகத்துக்கும் இந்த வியர்வைச் சுரப்பிகள் உதவுகின்றன.



வியர்வை நாற்றம் உள்ளவர்களுக்கு அதைப் போக்க எளியமுறை ஒன்றைச் செய்து கொள்ளலாம். அவர்கள் குளிக்கும்போது குளிப்பதற்கு வைத்துள்ள தண்ணீரில் ஒரு எலுமிச்சம் பழத்தைக் குறுக்காக அரிந்து தண்ணீரில் பிழிய வேண்டும். நீரில் பழச்சாறு நன்றாகக் கலக்கிக்கொண்டு குளிக்கவும். இதனால் வியர்வை நாற்றம் போகும். இந்த இயற்கையான பழம் உடலின் தோல் பகுதிப் பிரச்சினைகளையும் போக்கும் தன்மையுடையது.

எலுமிச்சம் பழ மருத்துவம் வெளிப்புறத்துக்கு. உள்ளுக்கு மருத்துவமும் உள்ளது. ஆவாரம் பூக்கள் கிடைத்தால் ஒரு கைப்பிடி பறித்தெடுத்துச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இதை ஒரு டம்ளர் நீர் விட்டுக் காய்ச்சி அரை டம்ளர் ஆனதும், அதனுடன் பால் சேர்த்துக் குடித்து வரவேண்டும். இப்படி வாரம் இரு முறை குடிக்கவும்.

ஆவாரம் பூக்கள் கிடைக்கவில்லையேல், நாட்டு மருந்துக் கடைகளில் பூவின் சூரணம் இருக்கும். பூக்களைப் பதப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அதனை வாங்கி இடித்துச் சூரணமாக்கிக்கொள்ளலாம். இந்த ஆவாரம்பூ சூரணத்தில் ஒரு கரண்டி எடுத்து ஒரு டம்ளர் பசும் பாலில் போட்டுக் கலக்கிக் குடிக்கவும். துர்நாற்றம் போகும். வியர்வை வாடையால் மனம் வருந்துபவர்கள் இதைச் செய்து பார்த்துப் பயனடையலாம்.


# நலமாக வாழ்வோம்

## பரிவர்த்த திரிகோணாசனம்

திரிகோணாசன நிலையில் வலது கையை இடது காலில் வைத்தும் மறுபடியும் இடது கையை வலது காலில் வைத்தும் பழகும் நிலை. பரிவா்த்த ஒன்றுக்கு பதில் மற்றொன்று கொடுத்து வாங்கும் நிலைக்குப் பரிவா்த்தனை செய்தல் என்று பொருள்.

***பலன்கள் :***

1. முதுகுத் தண்டை நன்கு பக்கவாட்டில் வளைத்துப் பலப்படுத்துகிறது.
2. சிறுநீரகம் பலம் பெறுகிறது. அதனால் சிறுநீரகக் கோளாறுகள் ஏற்படுவதில்லை.
3. இடுப்புத் தசைகள், தொப்பை ஆகியவை கரைந்து அழகு பெறச் செய்கிறது.
4. நரம்புத் தளர்ச்சியைப் போக்குகிறது.
5. இதுவும் தட்டைக் காலைச் சரி செய்கிறது.
6. பசியின்மை, அஜீரணம் ஆகியவற்றைப் போக்குகிறது.
7. நுரையீரல் பலவீனம், ஆஸ்துமா போன்ற நோய்களைக் குணமாக்க உதவும்.
8. மலச்சிக்கலைப் போக்கி வாதக் கோளாறுகளைச் சரி செய்கிறது.
9. கால்களில் பொதுவாக ஏற்படும் குறைகள், சரியான வளர்ச்சியில்லாத கால், இளம்பிள்ளை வாதத்தால் ஏற்பட்ட கால்கள் பலவீனம் ஆகியவற்றைப் போக்கி, கால்கள் பலம் பெற உதவுகிறது.



10. அதிக உடல் எடையைக் குறைக்கும்.

**யோகா தொடரும்........**

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது -ஷோபா-*

## மாம்பழ பச்சடி

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| நல்ல கனிந்த மாம்பழத் துண்டுகள் | - 10 |
| சா்க்கரை | - தேவையானது |
| நெய் | - 1 கரண்டி |
| உப்பு | - தேவைக்கேற்ப |
| கடுகு | - சிறிதளவு. |
| கறிவேப்பிலை | - 2 நெட்டு. |

**செய்முறை :**

மாம்பழத் துண்டுகளைத் தோலுடன் வேகவைக்கவும். சா்க்கரை சேர்த்து உப்புப் போட்டு வேகவிடவும். சேர்ந்து வந்தவுடன் இறக்கி நெய்யில் கடுகு, கறிவேப்பிலை தாளித்துக் கொட்டவும். காரம் வேண்டுமானால் 1 மிளகாய் கிள்ளி எண்ணெயில் தாளித்துப் போடலாம். எல்லாரும் விரும்பும் சுவையான இனிப்புப் பச்சடி, மாம்பழ சீசனில் அடிக்கடி செய்யலாம்.




உள்ளே அறையின் வெளிச்சத்தில் ஒரு பெண்மணி அவனைப் பார்த்தவாறு நின்றாள்.

முப்பதிருக்கும். உயரமாக இரந்தாள். ரொம்ப சிவப்பாக இருந்தாள். உயரத்தினால் ஸாரி கொசுவங்கள் ஒரு ஸெக்ஸைக் காட்டின. கழுத்தில் மெல்லிசான சங்கிலி போட்ட அழகாயிருந்தாள்.

பார்வையில் சோகம் இருந்தது. ஆவல் இருந்தது. கோபம் இருந்தது.

"இப்படித்தான் செய்வீர்களா" என்றாள்.

அவன் பேசவில்லை.

"வாருங்கள்" என்றாள்.

பிரமிப்புடன் நடந்து போனான்.

அடுத்த அறை! சுத்தமாக இருந்தது. சோபா இருந்தது.

"ஏன் நிற்கிறீர்கள்? உட்காரக் கூடவா உரிமை இல்லை" என்றாள்.

உட்கார்ந்தான்.

அவள் எதிரே உட்கார்ந்தாள். அவனைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தாள்.

அழுகை "குபுக்"கென வந்தது.

"என் வாழ்க்கையைக் கெடுத்து விட்டீர்கள்! நீங்கள் இப்படி இருப்பீர்கள் என்று நினைக்கவே இல்லை! உங்களால் நான் எவ்வளவு துக்கத்தை அநுபவித்துவிட்டேன். தினம் தினம் அழுது செத்துவிட்டேன். இப்படி என்னைச் சீரழிய விடுவதைவிட, நீங்களாகவே கொன்றிருக்கலாம்."

திடுக்கிட்டான் அவன்.

"இவள் யார்? எங்கேயாவது சந்தித்திருக்கிறோமா? பாண்டித் தெருவிலிருந்த ஒருத்தியாக இருப்பாளா? இப்படி ஒருத்தரையும் நினைவில்லையே!"

அவள் அழுகையை நிறுத்தவில்லை. உடம்பை மடித்து இரண்டாக்கி முகத்தைத் தொடையில் வைத்து விம்மிக்கொண்டிருந்தாள்.

அவன் திகைப்புடன் பொறுமையாக இருந்தான்.

அவள் தானாகவே நிமிர்ந்தாள்.

"நீங்கள் ஒரு கல்நெஞ்சுக்காரர்! இல்லாவிட்டால் இப்போது கூட சும்மா இருப்பீர்களா?"



'ஓ' வென்று அழுதாள்.

"அம்மா" என்றான் அவன்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

"நீங்கள் என்னை யாரோ என்று நினைத்திருக்கிறீர்கள்!

நான் தப்பிதமாக இங்கே வந்து விட்டேன்."

அவள் ஆக்ரோஷத்துடன் எழுந்தாள்.

"அது வேறு பொய்யா சொல்கிறீர்கள்? கொஞ்சமாவது ஈவு இரக்கம் இருக்கிறதா? ஒரு பெண் என்று பச்சாதாபம் இருக்கிறதா? பிடிக்கவில்லையானால் சொல்லுங்கள்! என்னை இங்கேயே கொன்றுவிடுங்கள். உங்கள் அரசியல் தத்துவப் பிரகாரம் அது ஒரு பாதகம்கூட இல்லை."

'டப் பெறு" வெளிச்சம் அவன் தலைக்குள் எரிந்தது. அது உண்மையாக இருக்குமா? இது சூரியகுமார் வீடா? இது அவனது மனைவியா?

"நீங்கள்..."என்று சொல்லி வாயெடுத்தான்.

"என்னை ஏமாற்ற வேண்டாம். இரண்டு வருஷம் பார்க்கவில்லை என்றால் மறந்து விடுவேனா? இந்தத் தாடியும் மீசையும் உங்களை மற்றவர்களிடமிருந்து மறைக்கலாம். என்னிடமிருந்து மறைக்க முடியாது. போதும், ,போதும்! ஒரு அரசியல் வாதியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு நான் படுகிற கஷ்டம் இந்த ஈரேழு ஜன்மத்துக்கும் காணும்.

மீண்டும் அழுதாள்.

அவன் புரிந்துகொண்டான்.

"அம்மா! நீங்கள் எதிர்பார்ப்பது நான் இல்லை. நான்...."

"போதும்" என்று சீறினாள் அவள். "உங்கள் தில்லுமுல்லுகளை நிறுத்திக் கொள்ளுங்கள்! எனக்கு இருக்கும் ஆத்திரத்தில் நானே உங்களை பொலிஸில் பிடித்துக் கொடுப்பேன். இப்படியெல்லாம் பொறுப்பில்லாமல் பேசாதீர்கள். தேசத்தையும் கவனிக்க வேண்டும். அதேபோல் குடும்பத்தையும் கவனிக்க வேண்டும். அப்படிச் செய்ய இஷ்டமில்லை என்றால் ஏன் திருமணம் செய்துகொண்டீர்கள்?"

அவள் தொடர்ந்துகொண்டே போனாள். அவனைப் பேசுவதற்கே இடம் விடவில்லை. அவனை வேறு ஆள் என்று நினைக்க அவள் இஷ்டப்படவே இல்லை. அலை மேல் அலையாக அவள் உணர்ச்சிகள் போவதைப் பார்த்தால் வேறு என்ன சொன்னாலும் நம்பமாட்டாள் போல் இருந்தது. இரண்டு வருடங்கள் தனிமையில் வாழ்ந்து ஒரு மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்தாள். அவள் அவனை விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்வது அவளுக்குள் இருக்கும் ஏதோ பலவீனம், அல்லது மனநோய்!

அவன் மௌனியானான்.

ரொம்ப நாழிகை திட்டிக்கொண்டே இருந்தாள்.

பிறகு அவளே மெள்ள மெள்ளத் தணிந்து வந்தாள்.

சாப்பிட அழைத்தாள்.

அவன் சாப்பிடப் போனபோது அந்த அறையில் திடீர் என்று போட்டோவைப் பார்த்தான்.

அதில் அவனும் அவளும் ஒட்டாக இருந்தார்கள். ஒரு கணம் திடுக்கிட்ட அவன் யோசித்து, தானே தன் நினைவைத் திருத்திக்கொண்டான்.

போட்டோவில் இருந்தது சூரியகுமாரும் அவளும்!

போட்டோவுக்கு மாலை போட்டிருந்தாள்.

நன்றாகச் சாப்பிட முடிந்தது. சாப்பிடாமல் உடம்பைக் கெடுத்துக் கொண்டிருப்பதைப் பற்றி ஒரு லெக்சர் அங்கே அடித்தாள்.

"அப்பா, போதும் சூரியகுமார் அவளை விட்டு ஓடியது சரிதான்!"

சாப்பாட்டிற்குப் பிறகு மேலே அழைத்துப் போனாள். கதவைத் திறந்தும் அங்கே ஓர் அதிசயம்!

கட்டில் ரெடியாயிருந்தது. வாசனைப் புகை மெல்லிசாய் வீசியது. தட்டில் பழங்களும் பாலும் ஸ்டில் லை..ப் ஓவியம் போலிருந்தன.

இழுத்து உட்கார்த்தினாள்.

அவன் தடுப்பதற்கு முகத்தை இழுத்து உதட்டில் இங்கிலீஷ் படம் போல் ரொம்ப நாழிகையான சமாச்சாரம்.

அவன் கண்கள் நனைந்து வழிந்தன.

ஆனந்தத்ததால் அழுகை.

அவனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. இரவுப் படுக்கையை எதிர்பார்க்கவில்லை. தயக்கத்தோடு நிராகரிக்கப் பார்த்தான். அவள் விடவில்லை.

இருவரும் படுத்தார்கள். விளக்கு அணைந்தது. அன்புடன் அவள் கட்டிக் கொண்டாள். மிருதுவான பாரங்கள் அவன் மார்பில் சுவர்க்கங்களை உண்டு பண்ணின. ஒரு கணம் மெய்மறந்தான்.

மனசின் அடியிலிருந்து ஒரு வஞ்சம் ஜனித்து வந்தது சூரியகுமார் செய்த துரோகத்திற்கு இவளைச் சூறையாடினால் என்ன?

வெம்மை அவனை அலைத்தது.

ஒரு கணத்தில் தீண்டியிருப்பான்.

குடிசைக்காரியின் குரல் கேட்டது

"ஒருத்தன் பெண்டாட்டி குட்டிகளை ஒருத்தன் கெடுத்தா, அவன் பெண்டாட்டி குட்டிகளை இன்னொருத்தன் கெடுத்து விடுவான்."

எதனாலோ தெரியாது. அந்தக் குடிசைக்காரியின் வார்த்தை சுட்டுக் கொண்டு மனசில் வந்தது.

நிதானங்களுக்கு வந்து சேர்ந்தான்.

கட்டிலில் அவள் பொறுமையிழந்து அவன் உடம்பில் துவைத்து கொண்டிருந்தாள்.

கடைசி ஆனந்தங்களைப் பெற மல்லாடினாள்.

"எனக்கு உடம்பு சரியில்லை, என்றான்" அவன்.

அவள் நம்பவில்லை.

எழுதுவது
**புஷ்பா தங்கதுரை**

"நான் தூங்க வேண்டும். என்னை விடு."

கேள்விக்குறி போல் உடம்பு ஒருக்களித்தான்.

தாபத்துடன் அவள். அவன் கைகளைத் தன் கழுத்தோடு சேர்த்து இணைத்துக் கொண்டு கண்களை மூடினாள்.

காலையில் அவள் காப்பி கொண்டு வந்தபோது அவனது தோள் பட்டையைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

(துரோகம் துரத்தும்......)

## ஆடவரெல்லாம் ஆடலாம்




இது கேர்ள்:.பிரண்ட்ஸ் சீசன் போல ஐட்டம் நபர்களுக்கு பேர்போன கமலிகா பஸாக் (இடது) ரேவா பூஜாரி ஜோடி ஆண்களை அலைக்கழிக்க ஆரம்பித்திருக்கிறது. 1980களில் டீஸ்கோ குருவான பீட்டுவின் "ஒயி ஒயி" என்ற ஹிட் பாடலின் ரீமிக்ஸ் வீடியோவில் இருவரும் கலக்கியிருக்கிறார்கள். "மியூசிக் டுடே" வெளியிட்டிருக்கும் முல் ரீமிக்ஸ் ஆல்பமான "மிஸ் ஒயி ஒயியில்" இரு தோழிகளும் இடுப்பசைப்பதைப் பார்த்து நைட் கிளப்பில் இருக்கும் ஆண்கள் எனக்கு உனக்கு என்று அடித்துக்கொள்வதைப் போல அமைந்திருக்கிறது அந்தப் பாடல் காட்சிகள். இது பற்றி கமலிகா என்ன சொல்கிறார்? "இந்த ஆல்பத்தைப் போட்டுக் கொண்டு ஆடுவதற்கு அருமையா இருக்கும்." ரேவாவின் நெளிவு சுளிவுகளையும் பார்த்த நீங்கள் மான்ஸ் கத்துக்கலாம்.

## குடுமிப் பிடி!



அமெரிக்காவில் கோல்மரில் அதிபர் புஷ் பேசிக் கொண்டிருந்த பிரசாரக் கூட்டத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட் பெண்ணின் முடியை கொத்தாகப் பற்றி வெளியே தள்ள முயற்சி செய்கிறார் குடியரசுக் கட்சித் தொண்டர் ஒருவர். முடியைத் தானே பிடித்து இழுக்கிறாய். கேட்கிறேன் பார் கேள்வி" என்று கத்துகிறார். முடியைப் பிடித்தது தவறுதான். ஆனாலும் புஷ்ஷையே கேள்வி கேட்கும் உரிமை அம் மக்களுக்கு உள்ளது. நம் நாட்டில் கேள்வி கேட்டால் சுட்டு விடுவார்கள் மிஞ்சினால் வெட்டிவிடுவார்கள். எதைவிட எது மேல்.


## டயஸ் + டயஸ்



2004இன் 100 செக்ஸியான பெண்களில் டயஸு க்கு எட்டாவது இடம் கிடைத்திருக்கிறது. இப்போது அவரது வயது என்ன என்று கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். ஜஸ்ட் முப்பத்திரெண்டேதான்!.

### டயஸ் பற்றிய துளிகள்:

பதினாறு வயதில் மாடல் வாழ்க்கையைத் தொடங்கினார்.



1995இல் எம்பயர் (UK) மேகஸினால் 100 செக்ஸியான பெண்களில் 13ஆவது பெண்ணாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தனது 18ஆவது வயதில் அதிகமாகக் குடித்ததால் (Alcohol Poisoning) சீரியஸான நிலைக்குச் சென்று பின் உயிர் பிழைத்தார்.

இவரது அப்பா எமிலியே டயஸ் கேமரூன் டயஸூ டன் ஒரு படத்தில் சிறு வேடத்தில் நடித்துள்ளார். அதில் அப்பாவுக்கு சிறைக் கைதி வேடம்! படத்தின் பெயர் 'தெயார் இஸ் சம்திங் எபௌட் மேரி' 1998இல் வெளி வந்த படம்.

கால்பந்து போட்டிகளின்போது இடைவேளையில் ஆடும் டான்ஸராகவும் இருந்திருக்கிறார். (சமீபத்தில் ஜேனட் ஜாக்சன் மேலாடை இல்லாமல் ஆடியாதாக சர்ச்சை கிளம்பியுள்ளதே! அதே போல் இடைவேளையில் ஆடும் ஆட்டம் இது.

லொஸ்ஏஞ்சல்ஸின் விமானத் தளத்தில் டயஸிடம் திருடியதாக ஒரு பொலிஸ்காரர் கைதுசெய்யப்பட்டார். டயஸ், பொலிஸ்காரர் தன்னிடமிருந்த பாஸ்போர்ட்டையும், பெரிய தொகையையும் திருடிவிட்டதாக கம்ளெயிண்ட் கொடுத்திருந்தார் (டிசம்பர் 1999).

நடிகர் ஜார்டு லெட்டோவுடன் காதல் வசப்பட்டார். தற்போது இதுவும் முறிந்து விட்டது. (நவம்பர் 2000)

கேமரூன் டயஸின் அப்பா ஒரு கியூபா நாட்டுக்காரர் அம்மா 'பில்லி' அமெரிக்காவில் பிறந்திருந்தாலும் இத்தாலி - ஜெர்மன் அப்பா அம்மாவுக்குப் பிறந்தவர்

ஹாவாலியில் அவரது பிறந்தநாளின்போது (30 ஆகஸ்ட் 2003) ஒரு விபத்தில் மூக்கில் பலமாக அடிபட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார் டயஸ்.



# 27 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளின்டன் எழுதுகிறார்

ஒரு பெண் பிறந்தது முதல் அவள் தாய் தந்தையருடைய அன்பிலும். பிணைப்பிலும் வாழும் மழலைப்பருவம்; அதனைத்தொடர்ந்து ஏற்படுகின்ற பாடசாலைப்பருவம்; உயர்கல்வி கற்பதற்கு வாய்ப்பு ஏற்படின் பல்கலைக்கழக வாழ்வு என எல்லோருக்கும் இருப்பதான வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களையும் நானும் சந்தித்தேன்; இது என்றைக்கும் எனக்கு பசுமையான நினைவுகளைத்தான் எனக்குள் ஏற்படுத்தி இருக்கிறது. அந்த நினைவுகளை என்றைக்கும் மீட்டிப்பார்க்கின்றேன். கல்வி கற்ற காலப் பகுதியை எனது வாழ்வில் ஒவ்வொரு மைற்கல்லாகவே நான் கருதியிருக்கிறேன். இந்த மைல்கற்களை தாண்டி ஒரு பெண் கல்வியில் முன்னேறுகிறாள் எனும் போது அது சமூகத்தில் உள்ள ஒவ்வொருவராலும் பாராட்டப்பட வேண்டியதென்றால் அது மிகையாகாது. இவ்விடயத்தில் அவள் குடும்பம் சந்தோஷப்படும். அவள் பிறந்த ஊர் அவளால் பெருமைப்படுத்தப்படுகிறது. ஏன்அவள் பிறந்த நாடே அவளைப் புகழ்வதை நாம் கண்கூடாக கண்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் படிக்காத பெண்களைப் பொறுத்தவரை அவ்வாறில்லை. அவர்களின் நிலையே வேறு. வித்தியாசமானது. அதாவது படித்த பெண்ணைப் பொறுத்தவரையில் அவளை யாருமே இரண்டாம் பட்சமாக எதிலுமே கருதவில்லை. அப்படி தாழ்த்தி கருதவும் முடியாது. எனென்றால் அவளுக்கென்று சமூகத்தில் தனி மதிப்பு இருந்து கொண்டேயிருக்கும். ஒரு படித்த ஆடவனுடன் ஒரு படித்த பெண்ணை ஒப்பிடும்போது அங்கு அந்தப் பெண்ணுக்கு இரண்டாம் பட்சம் என்ற கதைக்கே இடமில்லை. எப்பொழுதும் எல்லா செயற்பாடுகளிலும். ஆண்களுடன் அவள் சரிசமமே என்பதை இங்கு நாம் நன்றாக புரிந்து கொள்ளவேண்டும். அத்துடன் ஒவ்வொரு பெண்ணும். இந்த உலகில் தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற தெம்பும். தைரியமும் வளர வேண்டும்: பெண் என்பவள் ஒருபோதும் ஆண்களுக்கு அடுத்தபடியாக செயற்படவேண்டியவள் அல்ல: எல்லாவற்றிலும் ஆண்களுக்கு சமமானவளே! பெண் ஆளுமையை தற்பொழுது முழு உலகுமே நன்கு உணர்ந்து கொண்டுள்ளது. இப்படி தமது சிறந்த குணத்தாலும், நன் நடத்தை ஆற்றலாலும் சிறந்த ஆளுமையாலும் எடுத்துக்காட்டான எனது வகுப்பு நண்பிகளினது சில தன்மைகளை சுருக்கமாக இங்கு எடுத்துக் கூறலாம் என விளைகிறேன். என்னுடன் பல்கலைக்கழகத்தில் கற்ற தோழிகளில் இன்னும் சிலரான ஜினத் பௌஸ், ஜான் கிரீம், கொனிஹீன்க், சுசி சலமொன் ஆகியோர்களும் என்னுடன் உயர்கல்வியைத் தொடர்ந்தனர். அவர்களில் ஜினத் பௌஸ் ஒரு சிறந்த ஓவியரும் மற்றும் வரலாற்றுத் துறையில் மிகவும் தேர்ச்சி பெற்ற மாணவியுமாகும்;



மேலே குறிப்பிட்ட மற்றைய சக வகுப்பு மாணவிகளில் இந்த Jinnet Fowles என்ற சித்திர மற்றும் வரலாற்றுத் துறையில் தேர்ச்சி பெற்ற குறிப்பிட அந்த மாணவி: பாடத்தை விரிவுரையாளர் விரிவாக எமக்கு விளக்கும் பொழுது: பல காத்திரமான கேள்விகளை பல்வேறு கோணங்களில் கேட்டு எமக்கெல்லாம் மேலும். மேலும் அந்தப் பாடம் தெளிவாவதற்கு வகுப்பில் மிக்க மதிநுட்பத்துடன் நடந்து கொள்வாள். அதுபோன்று நானும்கூட காத்திரமான நல்ல பல கேள்விகளை கேட்பதற்கு என்னையும் ஒருவாறு இசைவாக்கமடைய வைத்துக் கொண்டேன். இயன்றவரை அவளுடைய அதே பாணியிலான தன்மையை: திறமைப்போக்கை என்னிலும் வளர்த்துக் கொண்டே அவளுடைய அந்தப்பாணியிலான போக்கு எனது கல்வி முயற்சிக்கும். புத்தாக்கம் அளித்தது என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் நினைவு கூறுகிறேன்.

அடுத்தபடியாக ஜான் கிரிக்பம் கலிபோர்ணியாவைச் சேர்ந்த மற்றுமொரு மாணவி. எமது வகுப்பில் மிகவும் சுதந்திரமாக. எல்லா விடயங்களிலும் திறந்த மனதுடன் பழகக் கூடியவராகவும் அத்துடன் அவர் எதிலும் சளைக்காத. அலுப்புறாத ஒரு மாணவியாகவும் அவர் எமது வகுப்பில் ரொம்பவும் கலகலப்பாகவும். சுறுசுறுப்பாகவும் நடந்து கொள்வார். அத்துடன் இலத்தீன் அமெரிக்க மாணவிகளுக்கிடையில் உறவினை எற்படுத்துவதற்கு உறுதியாக நின்று உழைத்து. மாணவிகள் நலனில் அக்கறை செலுத்திக் கொண்டிருந்த சிறந்த வகுப்புத் தோழிதான் ஜான் கிரிக்பம்.

*(இன்னும் வரும்...)*

***இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.***

***ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.***

***ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகி யுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.***

***19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத் துகிறது.***

## ஹோல்மன் ஹண்டின் மரணம் (Holman Hunt) 1827 - 1910

"ஹோல்மன் ஹண்ட்" (Holman Hunt) என்பவர் சுதந்திரமான மிகத்திறமையான வர்ணச்சித்திரம் தீட்டுவதில் மிகத் தேர்ச்சி பெற்றவர். இவர் பிரித்தானியாவைச் சேர்ந்தவர் அவரால் வர்ணம் தீட்டப்பட்ட. தத்துவரூபமான காட்சியையே இங்கு காண்கிறீர்கள். இவர் 1827ல் பிரித்தானியாவில் பிறந்தவர். அத்துடன் இவர் பிரித்தானியாவில் புகழ்பெற்ற



ஓவியங்களுக்கு - வர்ணம் தீட்டி பலரது பாராட்டையும் பெற்றவர். பலராலும் கௌரவிக்கப்பட்டதுடன் அப்போதைய பிர்த்தானிய அரசும் அவரை கௌரவித்து பெறுமதியான பரிசில்களை வழங்கியது. இவ்வாறு ஓவியங்களுக்கு வர்ணம் தீட்டுவதில் புகழின் உச்சிக்கே சென்ற அவர் கடைசியாக 7ம் திகதி செப்டம்பர் மாதம் 1910ம் ஆண்டு மரணமானார்.

## ஜேர்னிமோ (Geronimo) வின் மரணம்



**மிகவுமே** வயதான Apache Chief Geronimo என்பவர் பெப்ரவரி மாதம் 17ம் திகதி. 1909ம் ஆண்டு இந்தியாவின் ஒரு ஒதுக்குப்புறத்தில் காலமானார். இவர் அமெரிக்கர் களுக்கு எதிராக அரிகோணா. மற்றும் புதிய மெக்சிகோ பகுதியில் கிளர்ச்சியில் ஈடுபட்டவர். அவரையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.

## அமெரிக்காவின் வடதுருவம் (North Pole) வெற்றிகொள்ளப்பட்டது (06.04.1909)



**ஏப்ரல்** மாதம் 6ம் திகதி 1909ம் ஆண்டு அமெரிக்காவினால் வடதுருவம் வெற்றிகொள்ளப்பட்டது. அமெரிக்காவின் கடற்படை இந்த திகதியில்தான் வடதுருவத்தை அடைந்தது. அமெரிக்காவின் ஆறாவது கட்ட முயற்சியின்பின் புதான் வடதுருவம் வெற்றிகொள்ளப்பட்டது.

கடற்படையினரின் குழுவின் தலைவராக கப்பலில் சென்று இறங்கிய கடற்படைத்தளபதி. "ரோபர்ட் பெரி (Robert Peary) இங்கு க்காண்கிறீர்கள். கிறீன்லேண்ட் ஊடாக இவரின் குழுவினர் கப்பலில் பயணம் செய்து அங்கு சென்றடைந்தனர். 90 மைல்கள் தாண்டி. காலாற்படை. பெரிய உயரமான மலைப்பாங்கான பகுதியினூடாக கடந்து சென்றது.

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இந்தியாவை ஆத்திரப்படுத்திய ஜே.ஆரின் செயல்கள்

சென்னை, பாண்டி பஸாரில் இடம்பெற்ற துப்பாக்கி மோதலையடுத்துக் கைது செய்யப்பட்ட பிரபாகரனையும் உமா மகேஸ்வரனையும் அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் கோரிக்கையை ஏற்று இலங்கை அரசிடம் கையளித்திருந்தால் ஈழவிடுதலைப் போராட்டம் அன்றே முடிவடைந்திருக்குமென்று சந்திரகாசன் குறிப்பிட்டிருந்தார். "ஆகாவென எழுந்தது பார் யுகப் புரட்சி" என்று 1917இல் நிகழ்ந்த மகத்தான சோவியத் ரஷ்யப் புரட்சியை வாழ்த்தி வரவேற்றுப் பாடினான் மகாகவி பாரதி. அந்தப் புரட்சிகரப் போராட்டத்துக்குத் தலைமை கொடுத்தவர் லெனின். "மக்கள் போராட்டங்களில் புடம்போடப்பட்டு முகிழ்த்தெழுபவர்களே, விடுதலை இயக்கங்களுக்குத் தலைமை கொடுக்கின்றார்கள்" என்று லெனின் ஒரு தடவை கூறியிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இதனை இலங்கைப் பிரச்சினையோடு தொடர்புபடுத்தி விளக்கினார். "பிரபாகரனைக் கொல்வது பெரிய வேலையல்ல. ஒரு பிரபாகரனைக் கொன்றால் ஓராயிரம் பிரபாகரன்கள் தோன்றுவார்கள். தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் தொடர்ந்திருக்கும் வரை, அவர்களின்




அபிலாசைகள், உரிமைகள் மதிக்கப்படாதவரை இந்தப் போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்கும்" என்று ஜனாதிபதி சந்திரிகா சொன்னார். சிங்களப் பேரினவாதிகளின் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் தொடர்ந்திருக்கும்வரை அதுவே போராட்ட வித்துக்களாக அமையுமென்று சந்திரிகா தெரிவித்திருந்தார். இதையே "அடக்குமுறை எங்கெங்கிருக்கிறதோ அங்கெல்லாம் போராட்டங்கள் வெடிக்கும்" என்று சீனத் தலைவர் மாவோ சேதுங்கும் கூறியிருந்தார்.

1983 ஜூலை இன சங்காரத்துக்கு இருபது நாட்கள் முன்னதாக அதாவது ஜூலை 3இல் ஜெயவர்த்தன அரசாங்கம் அவசரகாலச் சட்ட விதிகளைப் பிரகடனப்படுத்தியது. இது தமிழர் விடுதலைக் கூட்டணியையும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியையும் கோபமடையச் செய்தது. ஜூலை 22இல் நடைபெற்ற மன்னார் மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கிய தீர்மானமொன்றினை எடுத்திருந்தது. தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருவதால் அரசாங்கத்துடன் இனிப் பேசுவதில்லையென்று தமிழர் விடுதலை கூட்டணி முடிவெடுத்தது. இதேவேளை இலங்கையின் அவசரகாலச் சட்ட விதிகள் குறித்து இந்தியாவின் அதிருப்தியை வெளியிடுமாறு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி

**தமிழ்ப் போராட்டக் குழுக்களுக்கு இந்தியா தீவிர ஆதரவளித்து வருவதாக நம்பிய ஜெயவர்த்தன, அமெரிக்காவோடு உறவுகளை வளர்த்துக்கொள்ள விரும்பினார். தமிழ் இயக்கங்களின் போராட்டத்தை நசுக்க இராணுவ ரீதியில் அமெரிக்காவின் உதவியைப் பெற அவர் நினைத்தார். அப்போது சோவியத் யூனியனும் அமெரிக்காவும் இரு பெரும் வல்லரசுகளாகத் திகழ்ந்தன. இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் பலமான நட்புறவு ஒப்பந்தமொன்று இருந்தது. அதே பாணியில் அமெரிக்காவுடன் பலமான உறவுகளை ஏற்படுத்துவது ஜெயவர்த்தனவின் நோக்கமாக இருந்தது.**

அப்போதைய இந்தியாவின் மேலதிக வெளியுறவுச் செயலாளர் கே.சங்கர் பாஜ்பாய்க்குப் பணிப்புரை விடுத்திருந்தார். இந்தப் பணிப்புரை கிடைத்த அன்றைய தினம் மாலையே புதுடில்லியிலிருந்த இலங்கை உயர் ஸ்தானிகர் பேர்னார்ட் திலகரட்னவைச் சந்தித்த பாஜ்பாய், இந்தியாவின் அக்கறையையும் ஆதங்கத்தையும் வெளியிட்டார். பாஜ்பாய் கூறியதைக் கேட்டதும் பேர்னார்ட் திலகரட்ன அதிர்ச்சியுற்றார். "அட கடவுளே! இது தலையீடு" என்று சங்கர் பாஜ்பாயிடம் உடனடியாகத் தெரிவித்தார் திலகரட்ன. என்றாலும் பின்னர் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு "இது தமிழக மாநில அரசின் கருத்தா? அல்லது இந்திய மத்திய அரசின் கருத்தா?"

*(அரசியல் தொடர்)*

என்று கேட்டார். இந்திய அரசின் மிக உயர் மட்டம் வெளியிடும் கவலை இது." என்று பதிலளித்தார் பாஜ்பாய்.

இந்தியாவின் எச்சரிக்கையை பேர்னார்ட் திலகரட்ன இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்தார். இந்தியாவின் இந்தக் கூற்று தனக்கு அதிர்ச்சியளித்தது என்ற தனது அபிப்பிராயத்தையும் திலகரட்ன குறிப்பிட்டிருந்தார். இந்தியாவின் அக்கறையும் கவலையும் ஜெயவர்த்தனவை ஆத்திரப்படுத்தியது. இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிடுகிறதென்பதே ஜெயவர்த்தனவின் நிலைப்பாடாகும். ஆனால், பிரேத பரிசோதனையோ நீதி விசாரணைகளோ இல்லாமல் சடலங்களை அடக்கம் செய்வதற்கு ஆயுதப் படையினருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைக் கண்டித்து இந்தியப் பத்திரிகைகள் காரசாரமாக விமர்சித்தன. இந்திய அரசுக்குப் பதிலளிக்கும் விதத்தில் ஜெயவர்த்தன புதிய தந்திரோபாயமொன்றினைக் கையாண்டார். இவ் விடயம் குறித்து பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்புமாறு பின்வரிசை அங்கத்தவரொருவரைப் பணித்ததோடு, அளிக்க வேண்டிய பதில் குறித்தும் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீதுக்கும் விளக்கியிருந்தார்.

ஹமீத் அளித்த பதில் வருமாறு; "எந்தவொரு நாட்டினதும் உள் விவகாரங்களில் தலையிடக் கூடாதென்ற அணிசேரா இயக்கத்தின் முக்கிய கொள்கையை நாம் என்றும் மதிக்கிறோம். எமது நல்ல அயல் நாடு இக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம்" என்பதே ஹகீதின் பதிலாக அமைந்திருந்தது. அத்துடன் கொழும்பில் பணியாற்றிக் கொண்டிருந்த இந்தியாவின் பதில் உயர் ஸ்தானிகர் அபயங்காரை அழைத்து இலங்கை அரசின் ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் ஏ.சீ.எஸ். ஹகீதிடம் பணித்தார் ஜெயவர்த்தன. அவர் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து இலங்கையின் அதிருப்தியை வெளியிட்டதோடு, இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிடுவதாகவும் குற்றஞ்சாட்டினார். இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவை இது பாதிக்குமென்றும் ஹமீத் கூறினார். இதற்கு முன்னர் ஜூலை முதல் வாரத்தில் அப்போது இலங்கையிலிருந்த இந்திய உயர் ஸ்தானிகர் எஸ்.கே.ஜே. சட்வாலைத் தனது வெளிவிவகார அமைச்சு அலுவலகத்துக்கு அழைத்து அவசரகாலச் சட்ட விதிகள் பிரகடனப் படுத்தப்பட்டதன் நோக்கத்தைக் ஹமீத் விளக்கியிருந்தார். ஹமீதின் விளக்கம் சட்வாலுக்குத் திருப்தியளிக்கவில்லை. சட்வால் அவசரகாலச் சட்ட விதிகளைக் கண்டிக்கும் குறிப்புகளை இந்தியாவுக்கு அனுப்பியிருந்தார்.

ஜெயவர்த்தனவின் அமெரிக்கச் சார்பு நிலைப்பாடு 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா'வுக்கு வழங்கப்பட்ட கூடுதல் வசதிகள், திருகோணமலையிலுள்ள எண்ணெய் குதங்களை சிங்கப்பூரைத் தளமாகக் கொண்டியங்கிய கூட்டுக் கம்பனிகளுக்குக் குத்தகைக்கு விட இலங்கை அரசாங்கம் எடுத்திருந்த தீர்மானம் ஆகியவை இந்திரா காந்திக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன. அமெரிக்கக் கடற்படை திருகோணமலையைப் பயன்படுத்தக்கூடுமென்று இந்தியா வலுவாகச் சந்தேகித்தது. 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா'வுக்கு வழங்கப்பட்டிருக்கும் கூடுதல் வசதிகள், இந்தியாவின் பாதுகாப்புத் தகவல்களை அமெரிக்கா பெறுவதற்கு உதவுமென்றும் புதுடில்லி கருதியது. புலனாய்வுத்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

தகவல்களைப் பெறுவதற்கும் இந்து சமுத்திரப் பகுதியில் இலத்திரனியல் கண்காணிப்பு வேலைகளை மேற்கொள்வதற்கும் 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' பயன்படுத்தப்படலாமென்று இந்தியா சந்தேகித்தது.

1983 ஜூன் பிற்பகுதியிலும் ஜூலை மாத ஆரம்பத்திலும் தமிழ்ப், போராளிகள் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டிருந்தன. 1983 ஜூன் மாத நடுப்பகுதியில் ஜெயவர்த்தன அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் றேகனின் அழைப்பையேற்று இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தார். 1980களின் ஆரம்பகாலப் பகுதிகளிலிருந்தே தமிழ்ப் போராளிகள் இராணுவ நிலைகள் மீதும் குடிமக்களின் இலக்குகள் மீதும் தாக்குதல்களை அதிகரித்திருந்தனர். தமிழ்ப் போராட்டக் குழுக்களுக்கு இந்தியா தீவிர ஆதரவளித்து வருவதாக நம்பிய ஜெயவர்த்தன, அமெரிக்காவோடு உறவுகளை வளர்த்துக்கொள்ள விரும்பினார். தமிழ் இயக்கங்களின் போராட்டத்தை நசுக்க இராணுவ ரீதியில் அமெரிக்காவின் உதவியைப் பெற அவர் நினைத்தார். அப்போது சோவியத் யூனியனும் அமெரிக்காவும் இரு பெரும் வல்லரசுகளாகத் திகழ்ந்தன. இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் பலமான நட்புறவு ஒப்பந்தமொன்று இருந்தது. அதே பாணியில் அமெரிக்காவுடன் பலமான உறவுகளை ஏற்படுத்துவது ஜெயவர்த்தனவின் நோக்கமாக இருந்தது.

1983ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு வெள்ளை மாளிகையில் இராணுவ அணிவகுப்பு மரியாதையோடு வரவேற்பளிக்கப்பட்டது. இதனையடுத்து இரு ஜனாதிபதிகளும் இரகசியச் சந்திப்பொன்றினை நடத்தினர். இதில் அமெரிக்க, இலங்கை அதிகாரிகளெவரும் கலந்துகொள்ளவில்லை. பின்னர் இரு தரப்பு அதிகாரிகளும் கலந்துகொண்ட வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. அப்போது ஜெயவர்த்தனவை வரவேற்றுப் பேசிய அமெரிக்க ஜனாதிபதி கீழ்க்கண்டவாறு சொன்னார்.

"உலகின் எதிரெதிர் இடங்களில் அமெரிக்காவும் இலங்கையும் அமைந்திருந்தாலும் மகத்தான ஜனநாயக அமைப்பைப் பொறுத்தவரை இரு நாடுகளும் பொதுவான இணைப்பைக் கொண்டுள்ளன" என்றார். "உங்கள் சொந்த நாட்டில் பயங்கரவாதத்துக்கு அடிபணிவதில்லையென்ற உங்களின் திடசித்தத்தை நான் பாராட்டுகிறேன்" என்றும் ஜெயவர்த்தனவைப் பாராட்டிப் பேசினார் றேகன்.

(தொடர்ந்து வரும்....)




வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!

எம்மைக் கடந்து போகும் ஒவ்வொரு மணி நேரமும் ஏதோ ஒரு மூலையில் யாரோ ஒருவருக்கு ஆபத்து நிகழ்ந்துகொண்டிருப்பதாகவே உள்ளது. இவ்வாரம் யாழ்ப்பாணத்தில் மூன்று கொலைகள் நடந்துள்ளன. பாசிசப் பயங்கரவாதம் எவரையும் நிம்மதி மூச்சுவிட விடாது என்பதே யதார்த்தமாகியுள்ளது. கொலைகள் நிறைந்த போன வாரத்தைப் பார்ப்போம்.

***சின் :-*** *நாட்டின் பிரச்சினைகள் குறித்து புதிய இணக்கப்பாடுகளையும், தீர்வுகளையும் செய்து முடிக்க தேசிய ஆலோசனைப் பேரவை ஒன்றை அமைப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் ஜனாதிபதி ஆலோசனை செய்துள்ளாரே.*

**மன் :-** ஜனாதிபதிக்கும் ரணிலுக்கும் இடையில் நடந்த ஒரு திடீர்க் சந்திப்பில இப்பிடி ஒரு ஆலோசனைச் சபை அமைக்கிற விசயம் பேசப்பட்டு, ஒரு சில விடயங்களில் இணக்கப்பாடும் இருந்தது. ஆனாலும் ஆக்கபூர்வமான எந்த நல்ல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படேல்லை. இந்தமுறையெண்டாலும் மக்களை ஏமாத்தாமல் நடந்துகொண்டால் சரிதான்.

***சின் :-*** *மக்கள்தான் பாவமண்ண. அடிக்கடி "யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்" என்ற முதல் வரியை மட்டும் பாடிக்கொண்டு திரியினம்.... பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் வரை புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை பிற்போட முடியாது; உதவி செய்யுங்கோவெண்டு கதிர்காமர் ஜப்பானிட்டக் கேட்டிருக்கிறாரே.....*

**மன் :-** ம்......கேட்டிருக்கிறார். அவையளும், 'சரி, நியாயமான கேள்விதான். கொஞ்சமா உதவுறம்' எண்டு பச்சைக் கொடி அசைச்சிருக்கினம். 'ஆடுறதை ஆடியும் பாடுறதைப் பாடியும்'... எண்டு சொல்லுவினமே அப்பிடி....

***சின் :-*** *பேச்சுவார்த்தை பிற்போடப்பட்டால் 4.5 பில்லியன் கை நழுவிப் போயிடும் எண்டு கொக்கரிச்சவையள் பாடு என்னாகும்....பாராளுமன்றத்தில பாராளுமன்ற உறுப்பினர்களின்ரயும் அமைச்சர்களின்ரயும் சம்பளங்கள் அதிகரிக்கப்படமாட்டுதெண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறதே.....*

**மன் :-** "நல்ல அறிவிப்பு. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விலைவாசி உயருது. சனம் படாத பாடு படுகுதுகள். சனத்துக்கு எதெண்டாலும் உதவிகரமாகச் செய்யிறதை விட்டுப்போட்டு கொள்ளையடிக்க அரசியலுக்கு வாற அரசியல்வாதிகளுக்கு சம்பள அதிகரிப்பு எதுக்கு? அவையள் கிம்பள அதிகரிப்பு செய்துகொள்ளுவினம் புரியுதே....

***சின் :-*** *சம்பளம் கேள்விப்பட்டிருக்கிறன். அதென்ன கிம்பளம்...? சமாதானப் பேச்சை துரிதமாக ஆரம்பிக்க இந்தியா பங்களிப்புச் செய்ய வேணுமெண்டு தமிழ்க் கூட்டமைப்புக் கேட்டிருக்கிறதே....*

**மன் :-** இந்த வேதாளத்தின்ர கதையை இந்தியாவிட்ட மட்டுமே விட்டிருக்கினம்? கண்களில மாட்டுப்படுகிற எல்லாரிட்டையும்தான் உந்தக் கதையை விடுகினம். இவையள் வந்து தம்பியின்ர காதையும், இங்கால ஜனாதிபதியின்ர காதையும் பிடிச்சு பேச வைக்கிறதோ... குளம் வரைக்கும்தான் குதிரையை கூட்டிக்கொண்டு போகலாம். குதிரைதான் குனிஞ்சு குடிக்க வேணும்.

***சின் :-*** *பேசுறதுக்கு விருப்பமில்லாமல் இவையளே இழுத்தடிச்சுக் கொண்டு*

*'பங்களிப்புச் செய்யுங்கோ' எண்டு கேக்கிறது சின்னப்புள்ளத்தனமாக இருக்கெல்லோ.....*

*வெள்ளவத்தை, கிருலப்பனை பொலிஸ் நிலையங்களுக்கு முன்னாலயே வாகனம் மோதி ரெண்டு பேர் இறந்துள்ளனரே.....*

**மன் :-** கொலையாளியா வாறவங்க எப்பிடி காசு கொடுத்துக் கள்ள அடையாள அட்டை எடுக்கிறாங்களோ, அது போல சில சாரதிகளும் திருட்டுத்தனமாக லைசன்ஸ் எடுகிறாங்கள். காசுக்கு மயங்கி சில அதிகாரிகள் நடந்துகொள்ளுறதால ரெண்டு தரப்பாலையும் மனிசன் கொல்லப்படுகிறான். ஏன், கண்டியிலயும் கலியாணவீட்டுக்காறர் வந்த ஆட்டோவை மோதினதில நாலு பேர் அந்த இடத்திலயே அவுட்....இந்தக் காலத்தில யார் சட்டம் ஒழுங்குகளை மதிச்சு நடக்கிறான்.....?

***சின் :-*** *சட்டம், ஒழுங்கெண்டிறியள். கிலோ என்ன விலையண்ண....? தற்கொலைக் குண்டுத் தாக்குதலில இருந்து பாதுகாத்துக்கொள்ளுறது எப்பிடியெண்டு எம்.பிக்களுக்கு விசேட அறிவுரை வழங்கப்படுகுதாமே...*

**மன் :-** இதுதான் இந்தவார ஜோக். ஒரு பக்கம் கதை இப்பிடிப் போக, மறுபக்கம் தமிழர் கூட்டமைப்பு எம்.பி. ரவிராஜ், செல் மற்றும் விமானத் தாக்குதலில இருந்தும் தப்புறது எப்பிடி எண்டு சொல்லித் தாங்கோவெண்டு கேட்டாரே ஒரு கேள்வி. அது சூப்பர். பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான நிலமை இருக்குதெண்டால் அதை அரசாங்கம்தான் கவனமெடுக்க வேணும். ரவிராஜின்ரடகேள்விக்கு விடை எங்கட சனங்களிட்டயே இருக்கு. இப்பிடி மாறி மாறி இவங்கள் பேசிறதைப் பாத்தால் சண்டை வரும் எண்டுறாங்களா, இல்லை வராதெண்டுறாங்களா? ஒண்டுமாப் புரியுதில்லையே!

***சின் :-*** *இந்தக் குழப்பம்தான் எனக்கும். இதில மக்களை எப்பிடிப் பாதுகாக்கிறது எண்டு ஒருத்தரும் கேக்கயில்லையே எண்டதுதான் என்ர கவலை. அமெரிக்காவின்ர பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளின்ர பிரதிநிதி இலங்கைக்கு வந்திருந்த சமயத்தில புலிகள் சமாதானத்தில பற்றுறுதியை நிரூபிக்கும்வரை அமெரிக்காவின்ர பயங்கரவாதப் பட்டியலில இருந்து நீக்கப்படமாட்டினம் எண்டு காட்டமாகச் சொன்னாரே.*

**மன் :-** காட்டமாகவும் கண்டிப்பாகவும் சொன்னாரெண்டத எத்தினை பேர் புரிஞ்சு கொண்டினமோ தெரியேல்லை. அவர் இதை மட்டும் சொல்லயில்லை. சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க வேறு சில நடவடிக்கைகளையும் எடுப்பதாச் சொன்னாரே! அவதானிக்கயில்லையோ? இதிலயிருந்து என்ன தெரியுது?

செய்யிறதயெல்லாம் செய்துகொண்டு 'அவையள் செய்யினம்', 'இவையள் செய்யினம்' எண்டு எங்கட சனத்துக்குப் புருடா விட்டாலும் சர்வதேச சமூகத்தை ஏமாத்த ஏலாது எண்டதுதான்.

***சின் :-*** *பூனை பால் குடிக்கிற கதையைச் சொல்லிறியள். விளங்குது, விளங்குது...மின்னுற நிகழ்ச்சியில மலையகத்தில பாடசாலையை தேசியமயமாக்கயில்லையெண்ட விவாதத்தில, பெரிசாப் பட்டியல் வாசிச்சுப் பிதற்றின ஈழவேந்தனை இ.தொ.கா. எம்.பி. சுரேஷ் கேட்டாரே ஒரு கேள்வி! 'வடக்கு கிழக்கில கட்டிடமும் இல்லாம, தளபாடமும் இல்லாம, உணவும் இல்லாம சனம் அவதிப்படுகுது; மலையகத்தைப் பற்றிப் பேச வந்திட்டார். முதலில உங்கட பிரச்சினையைப் பாருங்கோ' வெண்டு. அதப்பத்தி என்ன நினைக்கிறியள்.*

**மன் :-** 'பாவிகள் போற இடம் பள்ளமும் திட்டியும் எண்டு சொல்லுவினம். அப்பிடித்தான் எங்கட ஈழ வேந்தனார் ஐயா போற இடமுமாக்கும். இ.தொ.கா. அரசுக்கு ஆதரவு வழங்கினதுக்காக அவையளை ஒரு வாங்கு வாங்க வேணும் எண்டு திட்டமிட்டுச் செய்த நிகழ்ச்சி இது. இப்பிடி திசைமாறிப் போன விதத்தை நினைக்கேக்க சிரிப்பாய்க் கிடக்கு. பாவம் நிகழ்ச்சி நடத்திற தம்பி! யாரைத் திருப்திப்படுத்த இந்தப் பாடு படுகிறாரோ தெரியேல்ல.....

***சின் :-*** *பூலோகத்தில இதுவரை காலமும் எவர் திருப்தி கண்டது. எல்லாம் வீண் முயற்சியண்ண. மினி உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாகியிருக்கே.... எப்பிடி?*

**மன் :-** ம்....கங்காரு நாட்டுக்காறர்தான் அப்ப மாதிரியே இப்பவும் விளையாடினம். மற்றப்படி நம்பிக்கை தரும்படியாக ஆரையும் சொல்ல முடியேல்லை. எங்கட பெடியளும் விடமாட்டாங்கள் பிளீஸ்..... கொஞ்சம் பொறுமையா இரும்.....!

***சின் :-*** *சரி.....சரி...இந்தியாவைப் பற்றி எதெண்டாலும் சொல்லுவியள் எண்டு எதிர்பாத்தன். நீங்கள் வாயே திறக்கயில்லையெண்டால் அவையள் பேசும்படியாக ஜொலிக்கயில்லை எண்டு நினைக்க வேண்டியதான்*

**மன்னவரும் சின்னவரும்**

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்...

# நெஞ்சினில் என்ன காயமோ...? 74

## பிறழ் நம்பிக்கை நோய்க்கான சிகிச்சை முறைகள் யாவை?

பிறழ் நம்பிக்கை நோயின் பிரதான சிகிச்சை முறையாக அமைவது மருந்துகளாகும்.

வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகள் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படும்போது, பிறழ் நம்பிக்கையின் தீவிரம் குறைவடைகிறது. பிறழ் நம்பிக்கையின் அடிப்படையில் அந்த நோயாளிக்கோ அல்லது மற்றவர்களுக்கோ ஆபத்து ஏற்படும் எனக் கருதப்படும் சந்தர்ப்பங்களில் வைத்தியசாலையில் அந்நோயாளிகளை அனுமதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. மருந்து உட்கொள்ள மறுக்கின்றபோது வைத்தியசாலை அனுமதி தேவைப்படலாம்.

முதியோர்களில் இந் நோய் இருக்கின்றபோது அவர்களின் செவிப்புலன், பார்வைப்புலன் குறைவு காரணமாக இவர்களின் நோயின் தீவிரத் தன்மை அதிகரிப்பதற்கு வாய்ப்பு உள்ளது. இந்த நிலையில் கண்பார்வை, கேட்டல் என்பவற்றை விருத்திசெய்கின்றபோது இந் நோயின் தீவிரத் தன்மை குறைவடைகின்றது.

துணைகள் மீதான சந்தேகம் பிறழ் நம்பிக்கையாக மாறுகின்றபோது குறிப்பிட்ட காலத்திற்கு அவர்களை வெவ்வேறு இடங்களில் தனியாக வசிக்கச் செய்வது (Geographical Separation ) பயன் மிக்கது.

தொடரும்....

> உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப் பட்டவர்களே அதிகமாகக் காணப்படும் இன்றைய கால கட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றிற்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத் துறையில் அநுபவம் பெற்றவர்களும், நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த.கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி. உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு.தி.சுவீந்திரன் (எம்.ஏ.எம்,ஏ., எம்.பில்., உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களைப் பகிர்வர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

**உள மருத்துவம்**

# இனிய இல்லறம்

"ஆனால்," திருமண அநுபவம் இல்லாத நீங்கள் இல்லறம் பற்றியும், குழந்தை வளர்ப்பு பற்றியும் பேசுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை." படபடவென்று பேசிக் கொண்டே போனார் அந்தப் பெண்மணி.

"உங்களது கண்ணோட்டத்தில், உங்களது கருத்து சரிதான்!" என்று ஆரம்பித்த நான், அவருக்குப் பின்வரும் விளக்கத்தை அளித்தேன். ஒருவருக்கு மூல வியாதி. மிகவும் அவஸ்தைப்படுகிறார். எப்படியாவது அந்தக் கஷ்டத்திலிருந்து விடுபட வேண்டும் என்று நினைக்கிறார். டாக்டரிடம் போகிறார். டாக்டர், அவருக்கு ஆபரேஷன் செய்து, அவரது அவஸ்தைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்.

இன்னொருவர் அவருக்கு இருதயத்தில் பிரச்சினை. ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட்டிடம் போகிறார். அவரைப் பரிசோதிக்கிற ஸ்பெஷலிஸ்ட் அவருக்கு பைபாஸ் சர்ஜரி செய்து குணப்படுத்துகிறார்.

இந்த இரண்டு உதாரணங்களிலுமே, ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். மூல வியாதிக்கு மருத்துவம் பார்த்த டாக்டருக்கு மூல வியாதி வந்திருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. பைபாஸ் ஆபரேஷன் செய்த டாக்டர் ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட்டாக இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியமே தவிர, அவருக்கு இருதய நோய் வந்திருக்க வேண்டுமென்ப தில்லையே! அதுபோலத்தான், திருமணம் செய்து கொள்ளாத, பிள்ளைகள் வளர்த்த அநுபவம் இல்லாத என்னால், இனிய இல்லறத்துக்கும், குழந்தை வளர்ப் புக்கும் ஆலோசனைகள் சொல்ல முடியாதா என்ன?

நான் மனிதர்களைக் கவனிக்கிறேன். அவர்களுக்கு இடையில் நிலவும் உறவுகளைக் கவனிக்கிறேன். அந்த உறவுகளில் ஏற்படும் சிக்கல்களையும், அதனால் ஏற்படும் பிரச்சினைகளையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. கணவனோ, மனைவியோ அல்லது இரண்டு பேருமாகவோ, என்னிடம் தங்கள் பிரச்சினையைச் சொல்லுகிறபோது, அவர்களது இல்லறம் என்கிற ரயில்வண்டி எந்த இடம் வரை சரியான பாதையில் ஓடியது எங்கே தடம் புரண்டது? என்று என்னால் தெரிந்துகொள்ள முடிகிறது.

ஆக, அநுபவத்தைவிட, அநுபவத்தை ஒருவர் எந்தக் கோணத்தில் பார்க்கிறார், அதிலிருந்து என்ன புரிந்துகொள்கிறார் என்பதுதான் முக்கியம். அந்த அநுபவம் அவருடைய சொந்த அநுபவமா அல்லது அந்நியர் ஒருவரின் அநுபவமா என்பது பொருட்டே இல்லை.

இங்கே, ஒரு சிறிய சம்பவத்தை நினைவு கூர விரும்புகிறேன். ஒரு பெரிய ஆஸ்பத்திரியின் சர்ஜன். அந்த ஆஸ்பத்திரியில் ஆபரேஷனுக்கு அட்மிட் ஆகிற நோயாளிகள் எல்லோருமே, அந்தக் குறிப்பிட்ட சர்ஜன்தான் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று கேட்பார்கள். அவர் 'பிசி' என்றாலும் ஆபரேஷனின்போது, ஒரு தடவை வந்து எல்லாம் ஓ.கே.வா. என்று பார்த்துவிட்டாவது போகும்படி வேண்டிக்கொள்வார்கள். அந்த டாக்டரின் குழந்தைக்கே ஆபரேஷன் செய்தாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது அந்த சர்ஜன், "என் குழந்தைக்கு நான் ஆபரேஷன் செய்யமாட்டேன். அங்கே என் குழந்தையை ஒரு நோயாளியாகக் கருதி ஆபரேஷன் செய்ய என் மனநிலை இடம் தராது. சர்ஜன் என்பதை விட அப்பாதான் அங்கே மேலோங்கி இருப்பார்" என்று சொல்லிவிட்டார். வேறு ஒரு சர்ஜனைக் கொண்டு வெற்றிகரமாக ஆபரேஷன் முடிந்தது.

அதைப் போலவே, இல்லற உறவுக்குள் நான் அமிழ்ந்துவிடாமல், சற்றே தள்ளி நின்றுகொண்டு, உறவுகளை, சிக்கல்களை, பிரச்சினைகளை detached attachment என்பது போல, பட்டும் படாமலும் கவனிக்கிற வாய்ப்பு எனக்குக் கிடைக்கிறது. இதனால் அந்த உறவில் சிக்கலின் முழுப் பரிமாணத்தையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அந்த சிக்கலைத் தீர்த்துவைக்க வேண்டியது கடமை என்கின்ற உணர்வு எனக்குள் ஏற்படுகிறது. நான் ஆலோசனை சொல்லி, பிரச்சினை தீருகிறபோது அவர்களுக்கு மகிழ்ச்சி; எனக்கு திருப்தி.

ஆக, இல்லறம் பற்றியும், குழந்தை வளர்ப்பு பற்றியும் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 85க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ம. சுவர்ணா, 451/2, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. க. அல். ஆஷாத், புன்னைக் குடா வீதி, ஏறாவூர்- 03.
2. திருமதி. ஜெ. குணசிங்கம், 10 வன்னியார் வீதி, கல்முனை - 02.
3. சாருஜா சிவகுமார், நெசவு நிலைய முன் வீதி, அக்கரைப்பற்று - 07.
4. எம். எஸ். அஹமட் இப்ராஹீம், 59 பெண்கள் பாடசாலை வீதி, ஏறாவூர் - 03.
5. செல்வி நஸிஹா சம்சபாத், ஏத்தளை, புத்தளம்.
6. ஏ.எல்.எம் ஃபாயிஸ், நேரியகுளம், வவுனியா.
7. எம். ஏ. நாதிர், சாகிட் மரிக்கார் வீதி, பெரியமுல்லை, நீர்கொழும்பு.
8. ப. பத்மராதிகா, றம்ளின் மாவத்தை, குடாப்பாடு, நீர்கொழும்பு.
9. சி. ராஜ்குமார், ஐம்பது வீட்டுத்திட்டம், சாந்தசோலை, வவுனியா.
10. எம். சி. கலீல், ஹனிபா வீதி, கல்முனை-05.

## குறுக்கெழுத்துப் போட்டி 87

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ |
| 5 | ■ | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | ■ | ■ |
| 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | ■ | ■ | 18 | 19 |
| 20 | 21 | 22 | ■ | 23 |

**இடமிருந்து வலம்**

1. துச்சாதனனால் துகிலுரியப்பட்ட பாஞ்சாலியின் மறு பெயர்.
6. நன்றாகப்பாடுபவன் (குழம்பியுள்ளது).
9. கிளையற்ற மரத்தின் விதை (குழம்பியுள்ளது).
12. நற்குடியில் பிறந்தவன் (குழம்பியுள்ளது)
18. குறும்பு செய்பவரை இப்படி அழைப்பர்.
20. குதிரை உணவு. ஒரு தானியம் (குழம்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. பொய்யாமொழிப் புலவர் தந்தது.
3. இவன் உடனிருந்து உதவுவான் (குழம்பியுள்ளது).
4. இரு சம பங்குகளில் ஒன்று (தலைகீழாகவுள்ளது).
10. இது குடும்பத்தையே அழிக்கக் கூடியது.
15. ஆகாயம் (தலைகீழாகவுள்ளது)
16. தழையாகவும் (இலை) விதையாகவும் உணவில் பயன்படுத்தும் வாசனைப் பொருள் இது. மருத்துவ குணம் கொண்டது.

## குறுக்கெழுத்துப் போட்டி 85 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஐ [1] | ண் [2] | ஸா [3] | டு [4] | ■ |
| டு [6] | ■ | க் [7] | ■ | வ [8] |
| கொ [9] | க் [10] | கு [11] | ■ | ற [12] |
| லை [13] | சா [14] | ■ | ■ | ட் [16] |
| க [17] | டை [18] | ■ | லை [20] | சி [20] |
| ள் [21] | க [22] | ன் [21] | வ [22] | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 19.09.2004 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-87
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.


# ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

## வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**

377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

60

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்: .........................
கையொப்பம்: ..............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 19-09-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சேலை? நேரியகுளம் வாசகிக்கு அதிர்ஷ்டம்! 57

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**எம். றகுமத் உம்மா**
மாங்குளம், நேரியகுளம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

இவ்வாரச் சிறு கதை

# அலை அடங்கவில்லை

செல்வச்சந்நிதி முருகன் கோயில் திருவிழாக் கோலத்தில் சிறப்பாகத் தெரிந்தது. இரவைப் பகலாக்கும் விதத்தில் மின்சார வர்ண விளக்குகள் அங்குள்ள மரங்கள் பூராவிலும் உள்ள கிளைகளில் இருந்து ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தன. கோயில் கோபுர உச்சியில் பிரத்தியட்சமாய் உள்ள வேல் ஒன்று ஜெக ஜோதியாய் ஒளிவீசியபடி பக்தர்களுக்கு அருள்பாலிப்பதைப் போல தெரிந்தது. கருவறையில் காட்சிதரும் முருகனை வணங்கி விட்டு கோயிலையும் மூன்று முறை வலம் வந்து மூலவரை வணங்குகிறார்கள் பக்தர்கள். கோயிலின் உள்ளே தவில் சத்தம் தொடங்குவது கேட்கிறது. நாதஸ்வரமும் தொடர்ந்தது.

அங்கே ஆலய முன்றில் - விண்ணார்ந்து வளர்ந்திருக்க ஒரு பெருமரத்துக்குக் கீழே அவன் நின்றுகொண்டிருந்தான். அங்கு நின்றிருந்தபடி அழகான பட்டைக்கரை வேட்டி கட்டி வந்த தன்னைப் போன்ற இளைஞர்களையெல்லாம் அவன் புதினம் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த இடங்களிலெல்லாம் நடந்து திரிகின்ற இளம் பெண்களின் மேனியில் வர்ண ஒளிகள் கவிந்ததால் தேவதைகளோ இவர்கள்? என்று வியக்குமளவிற்கு அவனுக்குத் தெரிந்தார்கள்.

இளமை எண்ணங்கள் அவன் இதயத்தில் இருந்து ஊஞ்சலாடிக் கொண்டிருக்கும்போது, அங்கே வேறு என்னத்தைத்தான் அவனது கண்கள் தேடும். சந்நிதி முருகனைக் கும்பிடவென்று அவன் கோயிலுக்கு வந்திருந்தாலும் அழகே உருவான அந்த முருகனின் பக்தன் என்ற அளவில் காண்பதையெல்லாம் இரசிக்கும் அளவுக்கு அவன் ஒரு இரசிகனாகவே இருந்தான். பூ, செடியிலே பூத்திருக்கும் போது அதற்கு ஒரு அழகுதான் உண்டு. அதே பூக்கள் பூவையரின் கூந்தலில் இருக்கும்போது முன்னையதைவிட அதற்குப் பேரழகு வந்துவிடுவது வாஸ்தவம்தானே? - இதன் பொருட்டு- அந்தப் பூக்களா, இல்லை பூவையரா உண்மையில் அழகிற் சிறந்தவர்?..... என்று அதற்கு விடை காண முடியாமல் அதிலே நின்றபடி நினைத்துக் கொண்டு நாலாபுறமும் நடந்து திரிகின்ற அந்தப் பெண்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

இளமை இருக்கும் வரை எல்லாருமே அழகானவர்கள்தான்! அந்த அழகு என்னிடம் அதிக நாள் நிலைக்க வேண்டும் என்று அவனது மனம் ஆசைப்பட்டது. ஆலய முன்றில் பார்த்த இடமெங்கும் கண் குளிரும் பொன்மணல், எத்தனை பேர் அந்த மணல் படுக்கையில் உட்கார்ந்திருக்கிறார்கள். ஒலிபெருக்கியிலிருந்து கேட்கும் சீர்காழியின் பக்திப் பாடல் கேட்கக் கேட்க, தித்திப்பான தேனைப் போல சுவைக்கிறது. அந்த வெளியில் வீசுகிற காற்று உச்சுவாசத்தையும் நிச்சுவாசத்தையும் ஆனந்தப்படுத்தியது அவனுக்கு.

அங்கே நின்றுகொண்டு அங்குள்ளவர்கள் ஒவ்வொருவரையும் அவன் தன் மனசுக்குள்ளே கொண்டுவந்து கணக்குப் போட்டுப் பார்க்கிறான். அவன் நின்றுகொண்டிருக்கும் இடத்துக்குக் கொஞ்சம் தள்ளி ஒரு கைக் குழந்தையை வைத்துக்கொண்டிருக்கிற அந்த இளம் தாயும் அவள் கணவனும் கனக் குசாலாக கதைகள் பல சொல்லிச் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குழந்தை மணலிலே சிறிது தூரம் தத்தித் தத்தி நடந்து சென்றுவிட்டுத் திரும்பி விரைவாகக் காலடியெடுத்து வைத்து தாயின் மடியிலே வந்து விழுகிறது. பின்பு தாயின் முகத்தை பூப் போன்ற தன் பிஞ்சு விரல்களால் வருடிக்கொண்டு, அன்னத்தின் வாய் போலிருக்கும் தன் சின்ன வாயைத் திறந்து 'அம்மா.....அம்மா' என்று மழலை பேசுகிறது. குண்டுமணி மாதிரி சின்னச் சின்னக் கண்கள் கொண்ட அந்தக் குழந்தையின் அழகு அவனைக் கட்டி இழுப்பதாக இருந்தது. சின்ன வெள்ளரிப்பழம் போலிருந்த அந்த குழந்தையின் பருவத்திலே அவன் மனம் அவா கொள்கிறது.

'கள்ளம் கபடம் தெரியாத இந்தக் குழந்தை போல் நானிருந்தால்!' என்று நினைத்துக்கொண்டு இன்னும் எட்டவாய் அவன் தன் பார்வையை நகர்த்துகிறான்.

இப்போது அவன் காண்பது ஒரு கிழத் தம்பதியினரை. உடல் சுருக்கங்கள் கண்டாலும் உள்ளம் சுருங்கி மூப்படையவில்லை அவர்களுக்கு. அந்தக் கிழவனின் பொக்கை வாய்ச் சிரிப்பினிலே மனம் நிறைவடைந்தவள் போல் முகம் மலர்ந்ததாய் காணப்படுகிறாள் அந்தக் கிழவி.

ஒரு மனிதன் தனது வாழ்க்கைக் காலத்தில் எத்தனை விசித்திரமான அநுபவங்களைக் காண்கின்றான்.

குழந்தைப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவமென்று மாறுபடும் இந்த வாழ்க்கைக் கோலத்தில் எதுதான் அவனுக்கு நிலைத்திருக்கிறது?

இந்தத் தத்துவார்த்தமான கேள்வியை அவன் தன் மனசிலே நினைத்துக்கொண்டே கோயில் கோபுரத்தைப் பார்த்தான்.

'ஓம்' என்று ஒளிவிளக்கால் எழுதியிருந்த அந்தப் பிரணவ மந்திரத்திலே அவன் மனம் ஒரு கணம் நிலைத்திருந்து மறுபடியும் அவனது பார்வை மணல் தரைக்கு மீண்டது.

அங்கே இருளும் ஒளியுமான ஒரு இடத்திலே இருக்கும் அந்த இளம் பெண்ணின் பார்வை அவனைத் துளைப்பது மாதிரி அவனுக்குத் தெரிகிறது. இடையிடையே ஆனந்தமான புன்சிரிப்பும் அவளிடமிருந்து பிறக்கிறது. ஏதோ மின்னலைத் திடீரென்று பார்த்தது போல சிறிது நேரம் அவன் செயலோய்ந்து நின்றான். அவளை யாரென்று அவனுக்குத் தெரியவில்லை. சுழற்சியாக வருகின்ற சிந்தனை வட்டத்துக்குள்ளே அவளை யாரென்று ஞாபகத்தில் கொண்டுவர முடியாத நிலையில் அவன் திண்டாடுகிறான். இப்படிச் சிரிப்பதற்கு என்னை நன்றாக அறிந்தவளாக அவள் இருக்க வேண்டும்.

இவள் யார்? என்று அறிய இன்னும் தன் மூளையைப் போட்டுக் குடைகிறான். அவளோ இவன் மீது வைத்த கண் பார்வையை விலத்தவில்லை! அவள் இதழோரங்களில் தொடர்ச்சியான புன்னகை.

'இங்கே என் அருகில் வா!' என்ற விதமாக அந்தப் பார்வை, இப்போ காந்தம் போல் அவனை அவளிடமாக இழுக்கிறது.

அவன் கூச்ச சுபாவம் உள்ளவன்தான்! என்றாலும், அதையெல்லாம் அந்த இடத்திலே போக்கிவிட்டு அவளின் பார்வை கொடுத்த துணிச்சலில் அவளுக்குக் கிட்டவாய்ப் போக நடந்தான்.

அவள் காலை மடித்து உட்கார்ந்து கொண்டிருக்கும் அழகே தனி அழகுதான். அந்த ஒயிலான சுந்தரி அவன் நடந்து வருகின்ற பக்கமாய் தன் கழுத்தைத் திருப்பிப் பார்க்கிறாள். மயில் தோகை போல் அவள் உடுத்திருக்கும் அந்த குடைவெட்டுக் கவுண் அவளைச் சுற்றி நிலத்தில் விரிந்து கிடக்கிறது. அந்த ஆடைக்கு அவளது தேக வாளிப்பும் சோபையும் உயர்ந்து தோன்றிற்று.

அவள் ஒரு ரோஜாப் பூவைத் தலையிலே சூடியிருக்கிறாள். கற்றையான தலைமுடியில் இருக்கும் அந்த ஒற்றை ரோஜா மலரின் மூலம் இன்னும் அவள் எடுப்பாகத் தெரிகிறாள். அவளது நெற்றியிலே நிலாப் பிறை போல் இருக்கும் அந்தப் பொட்டு மின்னொளிபட்டு வர்ணஜாலம் காட்டுகிறது. அவளது யௌவனத்தின் நிறைவு ஒவ்வொரு அங்கத்தின் அசைவிலும் தென்பட அவளது மாந்தளிர் நிற மேனியழகை விழுங்குமாப் போல பார்த்துக்கொண்டு அவளுக்குக் கிட்டவாக அவன் போனான்.

"சேகர்!" என்று அவனின் பெயரை மயிலிறகு உதடுகளால் மென்மையாக அழைக்கிறாள் அவள்! பின்பு சிரிக்கிறாள்.

சிரிக்கும்போது கன்னங்கள் நாவல் பழ சிகப்பாய் மாறுகிறது.

"என்ரை பெயர் எப்படித் தெரியும் உங்களுக்கு?" என்று அவன் கேட்க,

"எனக்குத் தெரியும்!" என்று சொல்லியபடி விழிகளை அகலத் திறந்து முகம் விகசித்தாள் அவள்.

"உங்களின்ர முகத்தை எங்கையோ முந்தி நான் கண்ட மாதிரியாத்தான் கிடக்கு..... எண்டாலும் எங்கனேக்க, எப்பவா கண்டனான் எண்டதுகள்தான் இப்ப ஞாபகம் வருகுதில்ல!"

கடற் சோழிகளை நிலத்தில் கொட்டினாற் போல மீண்டும் அவன் சொல்வதைக் கேட்டு அவள் 'கல கல' வென்று சிரிக்கிறாள். அப்படிச் சிரித்தவள் தனது சிரிப்பை இடை நிறுத்திவிட்டு,

"இன்னும் உங்களுக்கு நான் ஆரெண்டு ஞாபகத்துக்கு வரேல்லயே... கொஞ்சம் ஊண்டி யோசிச்சுப் பாருங்கோ......இந்தச் செல்வி ஆரெண்டு அப்ப உங்களுக்குத் தெரியும்."

"செல்வியெண்டா.....எந்தச் செல்வி?"

என்று விட்டு மீண்டும் தன் நினைவுகளை காலத்தின் பின்னோக்கிச் செலுத்தினான்.


'இவள் அவளாகத்தான் இருக்க வேண்டும்?....இருக்க வேண்டும் மென்பதாய் ஏன் ஒரு கேள்விக்குறியை வைக்க வேண்டும்.... அவள்தான்!...நிச்சயமாக அவளாகத்தான் இவள் இருக்க வேண்டும்....' என்ற முடிவுக்கு வந்துவிட்டு,

"நீங்க...நீ.....நீ...கமலம் மாமியின்ரை மகள்தானே?" என்று அவளைக் கேட்டான் இவன்!

அவன் அப்படிக் கேட்டதும் அவள் இதழ்க் கடையில் சிரிப்பு சுழித்தது. உடனே தன் கை விரல்களைப் பந்தாய் வாய்க்குள் அடக்கிக் கொண்டு 'ஓம்'! என்கிறதாய் இருக்க தலையை மட்டும் ஆட்டினாள்.

"கனகாலம்.....உன்னைக் கண்டு....எட்டு வருசங்கள் இருக்குமா?

அப்பவெல்லாம் நாங்க மாமி மாமியெண்டு உன்ரை அம்மாவைக் கூப்பிட்டு பகிடி பண்ணுவம். அது உனக்கு ஞாபகம் இருக்கே?"



"நீங்கள் உங்களையே ஏமாத்துறீங்க சேகர்....உங்களுக்கு தீர்த்தத்தையும் தெரியேல்ல; சாக்கடையையும் தெரியேல்ல. உலகத்தை அறியாத ஒரு அப்பாவியாத்தான் நீங்க எனக்குத் தெரியிறீங்க".
"நீ நினைக்கிறதுதான் பிழை. உன்ரை பழைய சீவியத்தை நான் திரும்பிப் பார்க்கேல்ல. நீயும் கடந்து போன காலத்தில நடந்து போன சம்பவங்களையெல்லாம் மறந்திடு... அதுக்கெல்லாம் நான் ஒத்தாசையாயிருக்கிறன்.... உண்மையா என்ரை மனதைத் திறந்து சொல்லுகிறன். உன்னை நான் வாழவைக்கிறன் செல்வி...என்னை நம்பு."

அவன் அப்படிச் சொல்லவும் அவளுக்கிருந்த உற்சாகம் 'புஸ்'சென்று இறங்கிவிட்டது. அவளுக்குக் கவலை வந்து விட்டது. சொட்டு நீர் சுமந்த விழிச் சுடர்களோடு அவள் கீழே தலையைத் தாழ்த்தி நிலத்தைப் பார்த்தாள். பின்பு விரல்களால் நிலத்தில் கோடு கிழித்தபடி அவள் இருந்தாள்.

அந்த நேரம் அவனது நினைவுகள் அவளது சின்ன வயதுக் காலக் கதையை ஊன்றி ஊன்றி ஆராய்ந்தது. இப்பொழுதுக்கும் அப்பொழுதுக்கும் உள்ள இடைவெளி எட்டு வருஷங்கள்..... அப்பொழுது இவளுக்கு பன்னிரெண்டு வயதிருக்கும். இவளும் தாயுமாகச் சேர்ந்து அந்நேரம் கடைத்தெரு வழியே பிச்சை எடுத்துக் கொண்டு திரிந்தார்கள். கழுகு மாதிரி அலையும் காமுகரினது கண்பார்வைகள் அப்பொழுதே, பேதமைக்கும் மங்கைப் பருவத்துக்கும் இடையே இளமை நெருடும் அவள் மேனியைத் துளைக்கத் தொடங்கிவிட்டன. தங்கள் காமப் பசிக்கு மலைப்பாம்பு போல் அவளை விழுங்க அவர்களெல்லாம் காவல் கிடந்தார்கள். அவர்களிடமிருந்தெல்லாம் இவள் பிழைப்பாளா? என்று இவனுக்குச் சந்தேகம் இருக்கவும் செய்தது.

இவளின் தாய் ஒரு மன நோயாளி. இந்தப் பூவைப் பாதுகாக்க ஒரு முள்வேலியாய் அவள் இருக்கமாட்டாள் என்றே அவன் நினைத்தான். இப்படியாய் இருந்த காலத்தில் திடீரென்று இந்த இருவரையும் அந்த ஊரில் காணவில்லை! என்ன நடந்தது அவர்களுக்கு! என்று எல்லாரும்தான் விசாரித்தார்கள். என்றாலும் பிற்பாடு அவர்களைப் பற்றிய கதை அவர்களுக்கு ஓர் பழங் கதையாய் ஆகிவிட்டது. அந்த நினைவுகளிலிருந்து அவன் விடுபட்ட பின்.....

"உன்ர அம்மாவுக்கு என்ன நடந்தது?" என்று அவளைக் கேட்டான்.

"அம்மாக்கு மூளைப்பிசகு கூடி, பேந்து ஒரு வாய்ச் சோறு கூடச் சாப்பிடாமலும் விட்டுப் போட்டா......பிறகு அப்படியேயிருந்து அன்னந் தண்ணி ஒண்டுமேயில்லாமக் கிடந்து தன்ரை உசிரையே விட்டுவிட்டா...இப்பிடிச் சொல்லியதோடு அவள் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள்.

"அதுக்குப்பிறகு" என்று கேட்டு அவன் அவளது மௌனத்தைக் கலைத்தான். நான் இனி எங்க போறதெண்டு எனக்கு ஒண்டுமே தெரியேல்ல...எங்களுக்கும் சொந்தக்காரர் இருக்கினமெண்டுதான் முந்தி அம்மா எனக்குச் சொல்லிக்கொண்டிருந்தவ....எண்டாலும் அம்மா செத்தாப் பிறகு சொந்தக்காரரின்ர வீடு வழிய போக எனக்கு விருப்பம் வரேல்ல.....அம்மா இல்லாமல் றோட்டு வழிய திரிய எனக்குப் பயமாயிருந்திச்சு...அதால ஒரு வீட்டில வேலைக்காரியா வேலைக்குச் சேர்ந்தன்...அங்க நடந்த கதையைச் சொல்லேக்க கொஞ்சம் மறைச்சும் சொல்ல வேணும்....அந்த வீட்டுக்காறன் காமவெறி பிடிச்ச தூர்த்தனம் நிரம்பி என்ன இரவு வழிய வந்து படுத்த பாயில வைச்சு தொந்தரவு செய்வான். எங்கயும் நான் அப்ப போக வழி தெரியாததால பிறகு அவன்ரை சபல சித்தம் போக்க நானும் அவன்ரை விருப்பத்துக்கு ஓம் பட்டுப் போனன். இது அவன்ரை மனுசிக்கும் பிறகு தெரிய வந்திச்சு. அதால அந்த வீட்டில இருந்து நான் கலைக்கப்பட்டன். அதுக்குப் பிறகு ஒழுங்கா வாழ ஒரு வழியும் தெரியாம வேற ஒரு பிழையான வாழ்க்கைக்கு நான் என்னைத் தயார்படுத்தினன். வாழ்க்கை என்னை கடுமையாச் சோதிச்சதால அதுக்கெல்லாம் நான் துணிஞ்சன். இப்ப நான் பழைய செல்வியில்ல. பலருக்கும் தெரிஞ்ச செல்வி. நான் இப்ப சாம்பலத் திண்டு வெண்ணெய்யைப் பூசிக்கொண்டு திரியிறன். நான் எருக்கம் பூ மாதிரியானவள். ரோசாப்பூ மாதிரியானவளல்ல சேகர் நான்!"

"என்ன சொல்லுறாய் நீ?"

"பொம்பிளையளை விட ஆம்பிளையள்தான் ஒண்டுமே தெரியாதவயள் போல வேசம் போடுறவயள். நான் பச்சையாச் சொல்ல வேணுமே என்ரை வாயால "நான் ஒரு வேசையெண்டு?" பட்டவர்த்தனமாக அவனைக் கேட்டாள் அவள்!

அவன் விழி இமைக்காமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அப்படி அவள் சொன்னாலும் அவனால் அவள் சொல்வதையெல்லாம் நம்ப முடியவில்லை. அவள் கை படாத ரோஜா போன்றே அவனது கண்களுக்கும் தெரிந்தாள். பரிசுத்தன்மை கர்ணனின் கவசம் போல் அவளைச் சுற்றி இருப்பதாக அவனுக்குத் தெரிந்தது.

ஒரு பெண்ணுக்குரிய பரிபூரண இலட்சணங்களும் அடங்கியதாய் காட்சிதரும் இவளா விபசாரி?

"இல்லை நான் நம்பேல்ல. உன்ரை மனச் சுத்தம் முகத்தில தெரியுதுகள்ளங் கபடமில்லாதவள் மாதிரித்தான் நீ எனக்குத் தெரியிறாய். நான் பூவாக நினச்சு உன்னைப் பார்க்கிறன். நீயேன் முள்ளாய் உன்னை நினைக்கிறாய்?"

"நீங்கள் உங்களையே ஏமாத்துறீங்க சேகர்....உங்களுக்கு தீர்த்தத்தையும் தெரியேல்ல சாக்கடையையும் தெரியேல்ல. உலகத்தை அறியாத ஒரு அப்பாவியாத்தான் நீங்க எனக்குத் தெரியிறீங்க".

"நீ நினைக்கிறதுதான் பிழை. உன்ரை பழைய சீவியத்தை நான் திரும்பிப் பார்க்கேல்ல. நீயும் கடந்து போன காலத்தில நடந்து போன சம்பவங்களையெல்லாம் மறந்திடு... அதுக்கெல்லாம் நான் ஒத்தாசையாயிருக்கிறன்.... உண்மையா என்ரை மனதைத் திறந்து சொல்லுகிறன். உன்னை நான் வாழவைக்கிறன் செல்வி...என்னை நம்பு."

இதைக் கேட்டதும் அவள் தனக்கு வந்த சிரிப்பை அடக்க முடியாது கெக்கட்டமிட்டுச் சிரித்தாள். அவளது சிரிப்பில் கரைந்து மறைந்திருக்கின்ற உண்மை என்ன என்று அவனுக்குப் புரியவில்லை. அவர்களுக்குத் தூரமாய் இருந்தவர்கள் கண்பார்வையெல்லாம் இவர்களது பக்கமாக அந்த நேரம் ஒருமித்துத் திரும்பின. கண்களா அல்லது கட்டுவிரியன்களா என்பது மாதிரியாக இருந்தது அவர்களது பார்வை. அவர்களது பார்வையிலிருந்து தப்பிவிட அவனது பார்வை மரங்களிலே உள்ள வர்ணவிளக்குகளின் பக்கமாகக் கவிந்தது.

"எதுக்கும் உனக்கு இந்தச் சிரிப்பு எங்கயிருந்துதான் வருகிறதோ?" என்று சொல்லி அவன் அலுத்துக்கொண்டான்.

"வாழ்க்கையில அது ஒன்று மட்டும்தானே எனக்கு நிம்மதி. சந்தோசம் வந்தாலும் சிரிக்கிறன். கவலை வந்திட்டாலும் சிரிக்கிறன். ஏன்.....எதுக்குச் சிரிக்கிறனெண்டு எனக்கே தெரியேல்ல சேகர்! அப்படியா நான் போயிட்டன்....... எல்லாத் துன்பத்தையும் அநுபவிச்சு அநுபவிச்சு மரத்துப் போட்டுது மனம்.....உடம்புமப்டித்தான் மரத்துப் போச்சு...உண்ணான உங்களுக்கு மட்டும்தான் இதுகளை மனம் திறந்து நான் சொல்லுறன்....!"

அஸ்தமிக்கும் ஆதவனைக் கண்ட அல்லி மலரைப் போல் அவள் முகம் வாடிவிட்டது.

"எல்லாஞ் சரி....உன்னை நான் வாழவைக்கிறனெண்டு மன உறுதி எடுத்துக்கொண்டு உனக்கு மனசைத் திறந்து சொன்னன். அதைக் கேட்டிட்டு நீயேன் சிரிக்க வேணும்?"

"ஓமோம் சிரிச்சனான்தான்...... உண்மையிலேயே நீங்க சொன்னதுகளைக் கேட்டு மனம் சந்தோசப்பட்டுத்தான் நான் சிரிச்சன். இந்த விசயத்தில் ஏகப்பட்ட எதிர்ப்பு வருமெண்டு இருந்தாலும் அதுக்கெல்லாம் துணிஞ்சதாய் நீங்க நிக்கிறீங்க. அதை நினைச்சு எனக்கு சந்தோசம்தான்! உங்கடை கொள்கையள் உங்களை பெரியவராக்கும். ஆனா, உங்களைப் போல என்னால வாழ முடியாது. குற்ற உணர்ச்சிகளோட உங்களோட சேர்ந்து வாழேக்க நான் மனம் கருகிப் போயிடுவன். வேண்டாம் சேகர்! இப்படியெல்லாம் செய்து உங்களை நீங்க சங்கை குலைக்க வேணாம். நான் உங்களை உண்மையிலேயே மதிக்கிறன். வாடுற பயிரைக் கண்டாக் கூட வாடுகிற மனம் கொண்டவராய் நீங்க இருக்கிறீங்க. அப்பிடி நல்லதொரு மனம் உங்களுக்கு! அது எனக்கு நல்லாவும் விளங்குது. உங்களை மாதிரி குணம் உள்ளவயளை நான் உண்மையாவே மதிக்கிறன். என்ரை உயிர் இருக்குமட்டும் உங்களை நான் ஞாபகத்தில் வைச்சிருப்பன். எண்டாலும் இப்போதைக்கு நீங்கள் இந்த இடத்தை விட்டுப் போயிடுங்கோ....பிளீஸ் சேகர்...நான் சொல்றதைக் கேளுங்கோ.... என்னை நிம்மதியா இதில இருக்க விடுங்கோ"

அப்படி அவள் சொல்வதைக் கேட்டு உடனே அவன் மனம் சோர்ந்து விட்டான். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவன் உணர்ச்சி வசப்படுபவன். எப்போதுமே உண்மை பேச வேண்டும் என்ற கொள்கை உடையவன். அப்படியானவனுக்கு அவள் அவ்வாறு சொல்லியது, யாரோ நான்கு பேர் முன் அம்மணப்படுத்தப்பட்டது மாதிரியான கூச்சமாக வந்தது. திடீரென்று அவனது உள்ளத்தில் விழிப்பு ஏற்பட்டது. 'இந்தச் சொற்ப நேரத்தில் இப்படியெல்லாம் உணர்ச்சி வசப்பட்டுவிட்டேனா?' என்று அவன் தன்னையே மனசுக்குள்ளாகக் கேட்டுக்கொண்டான்.

அந்த மரங்களிலிருந்தெல்லாம் சடசடவென இறகடித்துக் கீழ் இறங்கும் காக்கைகள் கூட்டம் போல் அவன் சற்றுமுன் எடுத்த தீர்மானம் மனத்திலிருந்து வெளிக்கிட்டு எங்கேயோ பரந்த வெளியில் பறந்தது மாதிரிப் போனது. 'கூரையேறிக் கோழி பிடிக்காதவன் வானத்திலேறி வைகுண்டம் போக ஆசைப்பட்டானாம்!' என்று யாரோ ஒருவன் அவனைப் பார்த்துக் கேள்வி கேட்டுவிட்டுக் கேலி செய்து சிரிப்பது போலவும் ஒரு பிரமை அவனது மனத்தில் எழுந்தது. உடனே அங்கிருந்து செல்வியிடம்கூட கூறி விடை பெற்றுக்கொள்ளாது அவ்விடத்தை விட்டு கிறு கிறுவென்று அவன் நடந்தான். கோயில் வளாகத்தைத் தாண்டி பஸ் தரிப்பு நிலையத்தை அவன் சென்றடைந்தபோது தட்டிவான் ஒன்று அச்சுவேலிக்குப் போகவென்று புறப்பட ஆயத்தமாயிருந்தது.

-நீ.பி. அருளானந்தம், கல்கிசை.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## தடைக்கல்லைப் படிக்கல்லாகப் பாவிக்க வேண்டும்!

பலர் கோபத்தை ஓர் ஆயுதமாகக் கையாளுகின்றனர். பணிவை உங்கள் கவசமாகக் கொண்டு பாதுகாப்பைப் பேணுங்கள்.

ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் அவரவர் நடிப்பதற்கென்று தனித்துவமான பாகம் உண்டு என்பதை உணர்வீர்களாயின் சகிப்புச் சக்தி எளிதாக விருத்தியாகும்.

சகிப்பதற்கு இன்னும் நிறைய உண்டு என்பதை நீங்கள் உணர்வதன் அர்த்தம் நீங்கள் சகித்துக்கொள்வதற்கு இன்னும் முயற்சிக்கின்றீர்கள் என்பதாகும்.

நான் பெயர், புகழ்ச்சியால் கர்வம் கொண்டால் நிந்தையும் அவதூறும் என்னை அழித்துவிடும்.

செயலும் அதன் பின் விளைவும் என இரு விடயங்களுண்டு. சாதாரண செயலாக இருப்பினும் அதன் விளைவு அனுகூலமானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும், செயற்றிறன் மிக்கதாகவும் இருக்க வேண்டும்.

நம்பிக்கையும் வெற்றியும் மனதில் இருக்கும்போது காரியசித்தியைப் பெற்றுக் கொள்ளலாம். எண்ணங்கள் பலவீனமாக இருந்தால் தோல்விதான் கிட்டும்.

எதையும் தடைக்கல்லாக நோக்காதீர்கள். எல்லாவற்றையும் வெற்றியின் படிக்கற்களாகப் பாருங்கள்.

நீங்கள் விரும்பியவாறு குறிக்கப்பட்ட நேரத்தில் குறிப்பிட்ட எண்ணங்களை அளவோடு கொண்டிருக்கக் கூடியதாக உங்கள் கட்டுப்படுத்தும் சக்தி அமைய வேண்டும்.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

# இலக்கிய நயம்

# என்று தனியும் எங்கள் தனிமையின் சாபம்!

ஆற்றங்கரை மரநிழல் ஒன்றின் கீழ் அமர்ந்திருந்தான் வரதன். கதிரவன் இன்னமும் சூடு தந்துகொண்டிருந்தான். ஆனால், மர நிழல்களை நீளமாக்கிவிட்டிருந்தான்.

தூரத்தில் வெள்ளிக் கம்பிகள் போன்ற நீர்க்கால்கள் கற்பாறையில் விழுந்து சுழித்து சிறுபெண்ணின் துள்ளலோடு வந்த நதி, இவனருகே நாணம் கொண்ட பருவப் பெண் போல அமைதியுடன் நகர்ந்தது.

வரதன் வெண்மையைச் சிதறும் அருவியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

பாறையில் சரியும் நீர்ச்சரங்கள் வெயிலில் பளபளத்தன.

குயில்கள் இரண்டு மாறி மாறிக் குரலை எறிந்து விளையாடுவது கேட்டது.

மரங்கள் அந்தக் குயில்களினோசையையும், மென்மையாக அளையும் காற்றையும் அருந்திக் கொண்டிருந்தன. சாந்தமும் மௌனமும் கொண்டு தாலாட்டியது சூழல். மனதுக்குள் சந்தோஷம் இனிய இசையாக நிரம்பியது.

கட்புலனாகாத இனிய அசைவுகளோடு காற்றும் தன்னைக் கடந்து போவதை உணர்ந்தான். ஆற்றின் கரையில் நின்ற புற்களை ஒடித்துவிடாமல் வளைத்து நெளித்து அழகுக் கோலங்கள் காட்டி, விளையாடுவது தெரிந்தது. 'நம்மை வாழவைக்கும் காற்று' என்று வியப்போடு காற்றை ஒரு கணம் நினைத்துக்கொண்டான். யுகயுகங்களாக அலைந்து துழாவி ஆதரவு தரும் காற்று....இன்றும் இனிமையோடு உலவுகிறது.

பன்னீர் மரநிழலின் குளிர்மையிலும், இளவெயிலின் இதத்திலும் ஆற்றின் முணுமுணுப்பிலும் கண் கிறங்கியது.

"பாலைக் குடித்துவிட்டுப் படுங்கள்" என்றது ஹறிணியின் குரல்.

அரை விழிகளால் அவளைப் பார்த்தான்.

பச்சை நரம்போடும் புறங்கை. மெல்லிய விரல் நுனிகளில் மருதாணிச் சிவப்பு. குறுகுறுக்கும் மனதை மறைத்துத் தாழ்ந்த கண்கள்.

அவன் வெறுமனே பால் பாத்திரத்தை மட்டும் வாங்குவதுடன் நின்றுவிடக் கூடாது என்று உணர்த்துவது போல நின்றாள்.

அவள் கையிலிருந்த பாலை வாங்கி, அவள் அங்கங்களிலிருந்த கள்ளையும் சேர்த்துப் பருகினான்.

**தருவது**

**முழடில்யன்**

உள்ளாடை தெரியும் மேலாடை. கன்னத்தின் சிவப்புக்கு மேலும் சிவப்பாக சின்னதாக இரு பருக்கள் தெரிந்தன.

அவன் பார்வையில் அலைபாய்ந்த பரிதவிப்பைக் கண்டு, காமம் சொட்டும் கனியிதழ்கள் விரிந்து புன்முறுவல் செய்தன.

அவன் கையிலிருந்த பாத்திரத்தை வாங்கிச் சுவரின் மீது வைத்தாள். மெல்லிய ஆடையை மீறித் தெரிந்த எழுச்சிகளின் அசைவால் பித்தமானான் வரதன்.

தன் அசைவுகள் கவனிக்கப்படுவதை உணர்ந்த பெருமிதத்திலும் போலி வெட்கத்திலும்......தாழ்ந்து படபடக்கும் இமைகளும், இரகசியச் சிரிப்பை ஒளித்த உதடுகளுமாக ஹறிணி திரும்பினாள்.

முகத்தில் சந்தோஷ வெட்கத்தின் அழகு பூத்து நிறமிட்டிருந்தது.

அவள் முகத்திலிருந்து கீழிறங்கிய அவன் பார்வை, பொங்கிக் குமிழ்ந்த இரு பூக்குவியல்களில் நிலைத்தது.

ஹறிணி வெட்கத்தால் ஒதுங்குகிற தோரணையில் திரும்ப எத்தனித்தாள்.

ஆனால், வரதனுள் ஏறியிருந்த வெறி, ஒரு மிருகமெனப் பாய்ந்து அவளை வீழ்த்தியது.

அவள் தப்பிக்க எடுத்த முயற்சிகளெல்லாம், அந்த மிருகப் பாய்ச்சலை அவள் மேலும் மேலும் வரவேற்பதையே உணர்த்தியது.

"பூக்களுக்கு ஆடையுடுத்தி வருகிற போக்கிரி" என்று அவள் காதுக்குள் முணுமுணுத்தான்.

"போக்கிரியா? என்ன உவமை இது?" என்றவாறு தன் விடுபட விரும்பாத் திண்றலைத் தொடர்ந்தாள். "இதற்கு மேலும் உவமை



சொல்ல முடியும்" என்ற வரதன் அவள் காதுக்கருகில் உதடுகளைக் கொண்டு சென்று ஏதோ இரகசியம் சொன்னான்.

"சீச்சீ! வெட்கமில்லை உங்களுக்கு?" என்றாள் ஹறிணி.

"இப்போது அது இல்லை" என்று வாய்விட்டுச் சொன்னவன், மீண்டும் அவள் காதுகளுக்குச் சென்று ஏதோ சொன்னான்.

"அசிங்கம் அசிங்கம்...மூடுங்கள் வாயை!"

"அடடா, இதை முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாதா?" என்று கேட்டபடி அவள் வாயைத் தன் உதடுகளால் மூடப் போனான்.

அதற்கு இடங்கொடாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டு, "சுத்த அயோக்கியன்" என்றாள் கோபம் சேர்ந்த வெட்கக் குரலோடு.

"சரி, அசுத்த அயோக்கியத்தனத்தையும் ஆரம்பித்துவிடவா?" என்று சிரித்தான்.

"ச்சீ...நான் போகிறேன்..."என்று எழுந்தாள் ஹறிணி.

"அதே வேகத்திலேயே அவள் கையைப் பற்றிக் கீழ் இழுத்தான் வரதன். தடுமாறிய ஹறிணி தொப்பென அவன் மடியில் விழுந்தாள்.

மடியில் ஏதோ விழுந்த அரவத்தில் திடுக்கிட்டு விழித்துப் பார்த்த வரதன், ஒரு நிமிஷம் வெட்ட வெளி பார்வையைத் தாக்க, இருக்குமிடம் புரியாமல் குழம்பினான்.

மேலே மரக் கிளையில் அணில் ஒன்று ஓடுவது தெரிந்தது. இருள் மெதுவாக இறங்கத் தொடங்கியிருந்தது. எதிரே ஆறு மஞ்சள் மினுமினுப்போடு உறைந்தாற்போல் கிடந்தது.

ஆற்றங்கரையில் ஓர் இளம் பெண் விளையாடிக்கொண்டிருந்தாள். பதினெட்டு நிரம்பாத அவள் உடம்பில் மலைப் பிரதேசத்தின் இறுகிய வளப்பம் தெரிந்தது.

அசையாத கண்ணாடி போல் கிடந்த ஆறு, அவள் பாதங்களின் எற்றலில் கலைந்து சிலிர்த்தெழுந்தது. கண்ணாடிச் சிறகுகளாய் விரிந்தாடின அலைகள்.

முழங்கால் அளவு தூரம் இறங்கியோடித் திரும்பினாள். ஆறு அவளுடன் கொஞ்சிச் சிரித்தது.

வரதன் அவள் விளையாட்டைப் பார்த்தபடி கிடந்தான்.

சற்று நேரத்தில் நீர் விளையாட்டு சலிக்க, கரையில் ஏறி சாடியில் இருந்த பானத்தைக் குடித்து உல்லாசமானாள். சுழன்று மரக் கிளை ஒன்றை ஒடித்துச் சுழற்றி வீசி, ஏதோ பாடியபடி துள்ளி ஓடினாள். தூரத்தில் குன்று தாண்டி வருபவன் அவள் காதலனாயிருக்க வேண்டும். மான் பாய்ச்சலில் ஓடிச்சென்று அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். விடாமல் ஏதேதோ பேசிச் சளசளப்பது தெரிந்தது.

வரதன் எழுந்து உட்கார்ந்தான். குன்றில் வாழும் அம் மலைப் பெண்ணுக்குச் சல்லாபித்து மகிழ்ந்திருக்க துணைவன் அருகிலிருக்கிறான். துணையுடன் இருக்கும் உயிர்களின் கொண்டாட்டம்தான் எவ்வளவு இனியது! ஹறிணியை நினைத்தான். என் போலவே அவளும்.....! துணையின்றிக் கிடந்து வாடுகிறோம்!

***வங்கவரிப் பாறைச் சிறுபாடு.***
***முனையின் செம்பொறி அரக்கின்***
***வட்டுநா வடிக்கும் விளையாடு***
***இன்நகை அழுங்காப் பால்மடுத்து***
***அலையா உலவை ஓச்சிச் சில***
***கிளையாக் குன்றக் குறவனொடு***
***குறுநொடி பயிற்றும்***
***துணைநன்கு உடையள் மடந்தை.***

***(நற்றிணை - 341:1-6)***

---

**தொண்டமான், டக்ளஸ் ஆகியோரை ஏறத்தாழ தூசண வார்த்தைகளால் ஏசி வருகிறாரே ஈழவேந்தன் எம்.பி. என்ன காரணம்?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

எம்.பி. பதவி பறிபடப் போவதாய் பேச்சு வந்துவிட்டது. எனவே அவர் தீவிரத்துடன் முழங்க வேண்டிய தருணம் இது. "தமிழ்க் கத்தல்" பதவியைத் தக்க வைக்க உதவும். இடையிடையே ஆங்கிலத்தையும் கலப்பது இன்னும் விசேஷம். மின்னல்காரரும் இதையெல்லாம் கேட்டுப் புல்லரிக்கும் அரசியல் தரத்திலேதான் உள்ளார். வெளுத்து வாங்குகிறார் வேந்தன்.

**கதாநாயகன் என்றால் நல்லவன், வீரன் என்று காட்டிக்கொண்டார் எம்.ஜி.ஆர். இன்றுள்ள ஹீரோக்கள் அதையும் தாண்டி அதி வீர சூர உத்தமர்களாய்க் காட்டிக் கொண்டு கூச்சல் போடுவதில் அளவு கணக்கில்லாமல் போய்க் கொண்டிருக்கிறார்களே... சகிக்கும்படியாகவா இருக்கிறது?**

-கா.சிவரூபன், தெஹிவளை.

ஆறுதலுக்கு "அழகிய தீயே" பாருங்கள்.

**உங்களைப் பற்றிய சுயவிமர்சனம் என்ன?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

"பின்பற்ற முடியாத ஒரு பிராணி நான்" என்றார் ரொஸ்யேவ்ஸ்கி. நான், யாரும் பின்பற்றக் கூடாத பிராணி என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம்

**உங்கள் சிம்ரன் திரும்ப வருகிறாராமே?**

-கலையன்பன் நிலாம், தாராபுரம்.

வருக வருக திருமகளே! ஹொலிவூட்டைப் போல தமிழ்ப் படவுலகிலும் திருமணமான ஹீரோயின்களும் இரசிகர் நெஞ்சில் வெற்றிக் கொடியேற்ற முடியும் என்னும் சகாப்தத்தைத் தொடங்கி வையுங்கள்!

**எவ்வளவு பணம் வந்தாலும் கையில் தங்காமல் உடனுக்குடன் கரைந்து விடுகிறதே, என்ன செய்யலாம்?**

-ஜி.ஜெயசீலன், மட்டக்களப்பு.

செல்வம் கூட செலவழித்தால்தான் கரையும். ஆனால் நாம் கண்டுகொள்ளாமலே கரைந்துவிடுகிறதே வாழ்நாள்! இதை நினைத்தால் முன்னது சின்னக் கவலையாகிவிடும்.

**கடைசியில் இ.தொ.கா.வையும் துரோகி லிஸ்ட்டில் சேர்த்து தமிழ்ப் பத்திரிகைகள் வசைபாடுகின்றனவே?**

-எம்.மாலினிப்ரியா, வத்தளை.

நீங்கள் வருத்தப்பட வேண்டாம்... "புலிகளே தமிழர்கள்" என்ற உயர்ந்த கோட்பாட்டினடிப்படையில் இனத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறோம். முதலில் முஸ்லிம்களை வெட்டி விட்டாச்சு; இப்போது மலையகம்!



அழகிய தீயே - பிரசன்னா - நவ்யா நாயர்

**பொருளாதார உதவிகளை நிறுத்தி வைத்தும், நிபந்தனைகளை விதித்தும் சர்வதேச சமூகம் உந்தித் தள்ளியதால் பேச்சுவார்த்தைக்கு நெருக்கப்பட்ட சிங்கள தேசம், இப்போது மீண்டும் இராணுவத் தீர்வுக்கு நகர்வது போலத் தெரிகிறதே?**

-ஆர்.கோபிநாத், கம்பளை.

சர்வதேச சமூகம் சிங்கள தேசத்தை நெருக்குவதை ஏன் குறைத்துக்கொண்டு விட்டது என்று, வடக்குக் கிழக்கிற்கு வெளியே உள்ள எந்தச் சக்திகள் மீது பழிபோட்டு அலசலாம் என்பதைக் கண்டு பிடியுங்கள். நம் தரப்பிலுள்ள மூர்க்கத்தனமோ, பயங்கரவாதமோ, கொலைகளோ சிங்கள தேசத்தின் நோக்கத்திற்கு வசதியாக அமைந்துவிடுகிறதா என்பது பற்றி யோசிக்கவும் தலைப்படாதீர்கள். நல்ல விதமாய்க் கனிந்து வரும் சூழ்நிலையும் நாசமாகிப் போய்விடுவதற்கு நம்மைத் தவிர மற்ற யார் யாரெல்லாம் பிழை என்று சொல்லத் தெரிந்திருங்கள்.....நீங்களும் அசல் தமிழ் இராணுவ ஆய்வபாளராகி விடலாம்!

**குழந்தைகளாயிருக்கும்போது இருந்த மகிழ்ச்சியும் நிம்மதியும் பெரியவர்களானதும் காணாமல் போய்விடுவது ஏன்?**

-முஹமட் மஜிஸ், மீராவோடை - 04.

குட்டி இளவரசன் என்ற நாவலில் வரும் ஒரு வரி

"குழந்தைகளுக்கு மட்டுமே தெரியும், எதைத் தேடுகிறோம் என்று!"

**சமூகத்திலுள்ள பெரியவர்கள் கூட, நடப்பதெல்லாம் நன்மைக்குத்தான் என்று மௌனம் சாதிக்கும்போது, நீங்கள் தமிழ்த் தரப்பின் கொலைகளைக் கண்டித்துக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம்?**

-பெ.கோகிலன், மேபீல்ட்.

இது, வாளற்ற....கேடயமும் அற்ற நிராயுதபாணியின் அலறல், அவ்வளவே! (அரசியல் காரணங்களெல்லாம் அடுத்தடுத்த பட்சம்தான்)

**நமது பண்பாட்டில் பெண் தெய்வமாகத்தானே போற்றப்படுகிறாள்.... இங்கேயும் பெண் விடுதலைக் கூப்பாடுகள் தேவையா?**

-எஸ்.புவனேந்திரன், சப்ரகமுவ பல்கலை.

"பெண்ணைத் தெய்வமாக வணங்கும் மண் நம்முடையது என்பது உண்மைதான். பெண் - தெய்வமாக இருக்கலாம்; பரத்தையாக இருக்கலாம்; அடிமையாக இருக்கலாம்; பெண்ணாகத்தான் இருக்க முடியாது..." என்று கோபப்படுகிறார் மாலதி மைத்ரி. என்ன சொல்வீர்கள்?

**சிந்தியா**

**பதில்கள்**

**பேராசிரியர் வாலைப் பிடித்து முறுக்குகிறார்; இராணுவ ஆய்வாளர் செவியைத் திருகுகிறார்; அரசியல் பொறுப்பாளரோ நேரிலேயே கூப்பிட்டுத் திட்டி அனுப்புகிறார்....இருந்தும் கூட்டமைப்பு எம்.பிக்களோ எதுவும் மண்டையில் ஏறாத மக்கு மாணவர்கள் போலவே இருந்து வருகிறார்களே?**

-எம்.முருகநேசன், கொழும்பு - 05.

நேற்றுவரை பரபரப்பைக் காட்டிவந்த விநாயகமூர்த்தி, மகேஸ்வரன் எல்லாம் இன்று எங்கே? இதை நினைத்துப் பார்த்து, இன்றிருப்பார் அடுத்த தேர்தலுக்கு என்ன ஆவாரோ என்ற ஒரு ஞான விரக்தியில் ஆன்றவிந்தடங்கிப் போயிருக்கிறார்கள்.

**சூரியன் மறையாத நாடு இருக்க முடியுமா?**

-நஸீஹா சம்சபாத், ஏத்தாலை.

ஆங்கிலேயர் பூமியின் பல பாகங்களிலும் நாடுகளைப் பிடித்து வைத்திருந்தபோது அப்படிச் சொல்லிக் கொண்டார்கள். இதைப் பற்றி வேறொரு நாட்டுக்காரர் அடித்த கமெண்ட் :

"பிரித்தானியப் பேரரசில் சூரியன் மறைவதே இல்லை...காரணம், இருட்டில் இருக்கும் இங்கிலாந்துக்காரனைக் கடவுள் நம்புவதில்லை.

**தேவையற்ற கொலைகள் என்று தெரிந்தும் பயம் காரணமாக கண்டிக்காமல் இருப்பவர்களும் இருக்கிறார்கள். விடுதலைக்குத் தேவையான கொலைகள்தான் என்று அவற்றை இரசிப்பவர்களும் இருக்கிறார்கள் தானே?**

-வி.கயிலைநாதன், வவுனியா.

இரண்டுமே சுயநலம்தான். இரண்டாவது சுயநல வகைகளுக்குள் கொஞ்சம் விசேஷமானது. ஒரு அக்கரைப் பச்சை :

பெர்னி வெளியூருக்குப் போய்விட்டு வீடு திரும்பியபோது திடுக்கிட்டான். அவன் மனைவி இன்னொருவனோடு படுத்திருந்தாள். அந்த அந்நியன் ஆடைகளைத் திரும்ப அணிந்துகொள்ளக்கூட அவகாசமில்லாதவனாகக் கிடந்தான்.

"அட, நாயே! என்ன துணிவு உனக்கு?" என்று கோபத்தில் கத்தினான் பெர்னி.

"சும்மா இருங்கள் டார்லிங்! போன குளிர் காலத்தில் நான் போட்டுக் கொண்டிருந்தேனே ஒரு கம்பளிக் கோட்டு, அது இவர் வாங்கித் தந்ததுதான். நீங்கள் மிகவும் புகழ்ந்தீர்களே, அந்த வைர நெக்லஸ். அதுவும் இவர் வாங்கித் தந்தது. ஒரு கார் வாங்க முடியவில்லை என்று நீங்கள் திணறியபோது, ஒரு பஜீரோ கொண்டு வந்தேனே, அதுவும் இவர் வாங்கித் தந்தது...." என்றாள் மனைவி.

"அடடே, அப்படியா! ஒரே குளிராயிருக்கு. அவருக்குப் போர்த்திவிடு! சளி பிடிக்கப் போகிறது...." என்றான் பெர்னி.



# கிரிக்கெட்டின் வரலாறு

13

உலகின் முதலாவது முக்கோண டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் இடம்பெற்றுள்ள மைதானங்களில் லோட்ஸ் மற்றும் ஓவல் மைதானங்களில் வரலாறுகள் பற்றி அறிந்துள்ளோம். இனி ஏனைய மைதானங்களின் வரலாறுகள் குறித்து பார்ப்போம்.

ஓல்ட் ட்ரபட் மைதானமானது இங்கிலாந்தில் உள்ள மென்செஸ்டர் நகரில் அமைந்துள்ள உலகப் புகழ் பெற்ற 'மென்ரெஸ்டக் யுனைட்டட்' கிரிக்கெட் கழகத்துக்கும் அதன் விளையாட்டு மைதானத்துக்கும் அருகில் அமைந்துள்ளது. கிரிக்கெட் வரலாற்றில் பல்வேறு சாதனைகள் புரியப்பட்ட மைதானங்களுள் ஓல்ட் ட்ரபட் மைதானமும் ஒன்றாகும்.

1857ஆம் வருடம் த ட்ரபட் எனும் தனவந்தக் குடும்பமொன்றுக்குச் சொந்தமான காணியில் இம் மைதானம் அமைக்கப்பட்டது.

இம் மைதானம் லங்காஷயர் மாநிலத்துக்கும் 1864ஆம் வருடம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள லென் கெஷயர் கிரிக்கெட் கழகத்துக்குமான மைதானமாக இருந்து வருகிறது.

1865ஆம் வருடம் இம்மைதானத்தில் முதலாவது கரிக்கெட்போட்டி நடாத்தப்பட்டுள்ளது. லெங்கெஷயர் மாநில அணிக்கும் மிடில்செக்ஸ் மாநில அணிக்கும் இடையில் ஜூலை மாதம் 20ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை இப் போட்டி நடாத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

இங்கிலாந்து நாட்டில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இம் மைதானத்திலேயே நடாத்தப்பட்டது. 1884ஆம் வருடம் ஜூலை மாதம் 10, 11 மற்றும் 12ஆம் திகதிகளில் இப் போட்டி நடாத்தப்பட்டது. இதில் முதலாவது தினம் மழை காரணமாகப் போட்டி இடம்பெறவில்லை. போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவுற்றது குறிப்பிடத் தக்கது.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது குண்டு விழுந்து பாரிய சேதத்துக்கு உள்ளான இம் மைதானம் 1945ஆம் வருடம் மீளப் புனரமைக்கப்பட்டது.

ஓல்ட் ட்ரபட் மைதானத்தில் 1972ஆம் வருடத்தில்தான் முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடாத்தப்பட்டது. இங்கிலாந்து அணிக்கும் அவுஸ்திரேலியா அணிக்கும் இடையில் ஆகஸ்ட் மாதம் 24ஆம் திகதி இப் போட்டி நடைபெற்றது. இதில் இங்கிலாந்து அணி ஆறு விக்கெட்டுகளால் வெற்றியை ஈட்டிக்கொண்டது.

1956ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியைச் சேர்ந்த ஜிம் லேக்கர் அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக நடந்த டெஸ்ட் போட்டியொன்றின்போது இரண்டு இன்னிங்ஸிலுமாக 90 ஓட்டங்களைக் கொடுத்து 19 விக்கெட்டுகளைக் கைப்பற்றி கிரிக்கெட் வரலாற்றில் சாதனை படைத்ததும் இம் மைதானத்தில்தான் என்பன குறிப்பிடத் தக்கது.

லீட்ஸ் அல்லது ஹெட்னக்லி கிரிக்கெட் மைதானம் இங்கிலாந்தில் லீட்ஸ் நகரில் அமையப்பெற்றுள்ளது. இது யோர்க்ஷெயர் மாநிலத்துக்கு உரிய மைதானமாகும்.

முன்னாள் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் லோட்ஹெரிஸ் உட்பட்ட கிரிக்கெட்டின்பால் ஆர்வம் கொண்ட சிலரால் அமைக்கப்பட்டுள்ள இம் மைதானம், கிரிக்கெட், கால்பந்து மற்றும் மரதன் விளையாட்டு நிறுவனம் மூலம் விலை கொடுத்து வாங்கப்பட்ட 22 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

1890ஆம் வருடம் மே மாதம் 27ஆம் திகதி இம் மைதானம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இதில் முதற்தடவையாக 1899இல்தான் முதல் தர கிரிக்கெட் போட்டியொன்று வட இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.

முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி 1899 ஜூன் 29,30 ஜூலை 1ஆம் திகதிகளில் இங்கிலாந்து அணிக்கும் அவுஸ்திரேலியா அணிக்கும் இடையில் இடம்பெற்றது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

லீட்ஸ் மைதானத்தில் முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி 1973 செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி இங்கிலாந்து அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையில் இடம்பெற்றது. அதில் இங்கிலாந்து அணி ஒரு விக்கெட்டால் வெற்றியீட்டியது.

யோர்க்ஷயர் மாநில அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஹெட்லி வெரிட்டி எனும் பந்துவீச்சாளர் 1932ஆம் வருடம் யோர்க்ஷயர் மாநிலஅணிக்கு எதிராக விளையாடியபோது 10 ஓட்டங்களை கொடுத்து 10 விக்கெட்டுகளைப் பெற்று சாதனை புரிந்துள்ளமை குறிப்பிடத் தக்கது

**-மைந்தன்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் :10 02 1930

மறைவு :14 08 2004

மாதம் ஒன்று போனதே - அம்மா
மனமும் நொந்து வேகுதே - எம்முள்
காலம் எல்லாம் ஆறுதே - தரணியில்
சால எம்மை வளர்த்தே - நல்லோர்
சபையில் நிமிர்ந்து நிற்கவே - சிறந்து
வாழ வழி காட்டிவிட்டு - சென்ற
வழி சொல்லாது சென்றதெங்கே -அம்மா

குடும்பத்தினர்

கரவீணா இசைமன்றம்,
75 கோயில் வீதி, நல்லூர்.

**அமரர் அன்னபூரணம் சுப்பிரமணியம்**
**(பூரணக்கா)**
**கருகம்பனை, காங்கேசன்துறை**

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

## ஆதிக்கம் 5: பிறந்த கிழமை திங்கள்

ஒளியுடைய திங்கட்கிழமை அதிசிறப்பு மிக்க ஆதிக்க எண் 5ஐயும் கொண்டுள்ள நீங்கள் நம்பிக்கை மிகுதியாக உடையவர். உலகத்தில் சாதனை புரிந்தவர்களைக் பேட்டிகண்டால் தெரியும். அவர்கள் தன்னம்பிக்கை உடையவர்களாகவே இருந்திருப்பர். அதைப் போல தன்னம்பிக்கை இமயத்தையும் சாய்க்கும் சக்தி கொண்டது! தன்னம்பிக்கை உள்ளவனுக்குக் கால்கள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, அவன் சாதிப்பான். நீங்கள் சாதனை புரியும் ரகத்தைச் சேர்ந்தவர்.

என்ன நிலை வந்தாலும் எப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டாலும் நேர்மை எனும் ஆயுதத்தை ஒருபோதுமே கைவிடமாட்டீர்கள். நேர்மை உள்ளவனுக்கு நேரங்கூட வணக்கம் தெரிவிக்கும்! காலம் கை கொடுத்துக் கூப்பும். அந்தளவிற்கு நீங்கள் நேர்மையானவர். மத வழிபாடு, மதக் கிரிகைகள், பக்தி என்பற்றை அக்கறையுடன் பேணுவீர்கள். இறைவன் மீது அதிக பக்தியுள்ளவராகத் திகழ்வீர்கள்.

தேசத்தின் மீது அதிக பற்றும், தேச நலனுக்காக உழைக்கக் கூடிய தன்மையும் கொண்டவராக இருப்பீர்கள். எந்த விதமான வேலையாக இருப்பினும் மனத் திடத்துடனும் நம்பிக்கையுடனும் செய்து முடிக்கும் ஆற்றல் உங்களிடம் நிறையவே உண்டு. ஒரு மனிதனின் முன்னேற்றத்திற்கும் தாழ்வுக்கும் மனந்தான் காரணம். உங்களைப் பொறுத்தவரையில் உங்கள் மனந்தான் உங்களுடைய முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைந்திருக்கிறது. எண்ணம், சொல், செயல் இம் மூன்றும் சிறப்பானதாக உங்களிடம் அமைந்திருக்கிறது.

ஒரு வேலையைச் செய்வதாக இருந்தால் அதுவும் பிறருக்கு அந்த வேலையினைச் செய்து கொடுப்பதாக இருந்தால், எந்தப் பலனையோ பிரதியுபகாரத்தையோ எதிர்பார்க்கவே மாட்டீர்கள். அந்த வேலையை நிறைவேற்றிக் கொடுக்கும்போது அவர்கள் அடைகின்ற மகிழ்ச்சியில் நீங்களும் மகிழ்ச்சி காண்பீர்கள். அரசாங்கத்துறை சார்ந்த தொழிலில்தான் நீங்கள் கடமை புரிவீர்கள். தனியார் துறையிலோ அல்லது வேறு வகையிலோ தொழில் செய்யமாட்டீர்கள்.

உடலை வருத்தி உழைக்க வேண்டிய தேவை உங்களுக்கு இல்லை. இலகுவான முறையிலும் சுலபமான வழியிலும் உங்களுக்கு வருமானம் கிடைக்கும். கல்வியைப் பொறுத்தவரையில் தொடர்ந்து அதிகம் படிக்கக் கூடிய வாய்ப்பும் வசதிகளும் இருந்தாலும், மேற்கொண்டு படிக்கமாட்டீர்கள். இதனால் அரசாங்கத்துறையில் உயர் பதவிகளை நீங்கள் பெற முடியாது.

ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம். அவன் உழைத்த அவ்வளவு பணத்தையும் செலவு செய்வானாயின் அவன் ஏழையாவது நிச்சயமே. தேடிய பணத்தில் ஒரு தொகையினை எதிர்கால நன்மை தேவை கருதிச் சேமிக்கின்றவன் ஏழையாக இருந்தாலும் பின்னர் பணக்காரன் என்ற நிலைக்கு உயர்வடைகின்றான். சேமிப்பு என்பது ஆயுளுக்கு நாம் செலுத்திவைக்கும் சந்தோசம் என்பதைப் புரிந்தவர் நீங்கள். இதனால் சேமிப்பும் சிக்கனமும் உங்கள் இரு கண்களாக இருக்கும். வீண் செலவு, அனாவசியச் செலவு என்பவை உங்களிடம் என்றுமே இல்லை.

18 வயதில் உங்கள் தொழில்துறை ஆரம்பித்து 19, 22, 25, 28, 31 வயது வரை படிப்படியாக உயர்ந்து வருமானம் பெறுவீர்கள். அடிக்கடி சிரமங்கள் ஏற்பட்டாலும் பணம் தாராளமாகப் புரளும். 32, 33, 38, 41 வயதுகளில் பண வருமானம் கூடுதாகக் காணப்படும். இதனால் சந்தோசமாக வாழக்கூடிய நிலை ஏற்படும். உங்களுடைய 42ஆவது வயதுக் காலத்தில் புடைவை அல்லது காகிதம் சம்பந்தப்பட்ட வியாபாரம் கூட்டாக்ச் செய்வீர்கள். இதனால் 55 வயது வரை வருமானம் சிறப்பாகக் கிடைக்கும். சொத்துச் சுகம் என்று சகல வசதிகளும் பெற்றுச் சிறப்பாக வாழ்வீர்கள். உங்களுடைய 3ஆவது வயதுக் காலத்தில் உடல்நிலை பாதிக்கப்படுவீர்கள். ஆனால் உயிர் பிழைப்பீர்கள். இதன் பிற்பாடு நீங்கள் மரணிக்கும் வரைக்கும் எந்த ஆபத்துக்களும் நேராது.

மலச்சிக்கல், வயிற்றுவலி, நெஞ்சுவலி என்பன அடிக்கடி உங்களுக்கு ஏற்படும். இதற்குக் காரணம் சூடான தேகநிலை உடையவர் நீங்கள். இதனால் சூட்டைத் தணிக்கும் உணவுகளை நீங்கள் சாப்பிட வேண்டும். சிறுபசலைக் கீரை, உளுந்து வடை, பச்சைப் பருப்பு, பனங்கிழங்கு, பச்சை வாழைப்பழம், புட்டரிசி, பூவன் வாழைப்பழம், மொந்தன் வாழைப்பழம், தயிர், பசும்பால், நெய், மோர், மிளகு, தக்காளிப்பழம், முருங்கைக்காய், வெண்டைக்காய், வெங்காயம், மாதுளம்பழம் போன்வற்றை நிறையவே சாப்பிட வேண்டும்.

ஆதிக்க எண் 5ஐ நீங்கள் பெற்றிருந்தாலும் உங்களுக்கு யோகத்தையும் நல்ல காலத்தை ஏற்படுத்தும் எண் 2 மாதத்தில் வருகின்ற 2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் நீங்கள் செய்யும் காரியங்கள் வெற்றியைத் தரும். மேற்குறிப்பிட்ட திகதிகள் நீங்கள் பிறந்த திங்கட்கிழமையில் அமையுமானால் விசேட பலனை உண்டு பண்ணும்.

நீங்கள் சந்தன நிறத்தில் ஷர்ட் அணிவது நன்மை தரும். இடுப்புக்குக் கீழ் வெள்ளை நிற ஆடைகளை அணிய வேண்டும். வெள்ளி மோதிரம் அணியுங்கள். உங்களுக்கு அதிர்ஷ்டம் மேலும் கிடைக்கும். நீங்கள் வசிக்கும் வீட்டின் இலக்கம் இரட்டை எண்ணாக அமைதல் சிறப்புத் தரும். ஆகவே ஆதிக்க எண் 5ஐயும் திங்கட்கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் வாழ்வில் சகல யோகங்களும் பெற்று வாழ என் நல்லாசிகள்.

நேர்மைக்கும் நிறை வாழ்வுக்கும் நன்மை தரும் எண் ஐந்தும் நல் அதிர்ஷ்டம் வழங்கும் திங்களும் உள்ள நீங்கள் பெற்றது பாக்கியம்.

**அடுத்து ஆதிக்கம் 5 செவ்வாய்க்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்**

# மினி உலகக் கிண்ணம் அணிகளின் தரம் என்ன?

**இங்கிலாந்தில் நடைபெற்று வரும் மினி உலகக் கிண்ணத்துக்கான போட்டிகளில் அவுஸ்திரேலியா, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், பங்களாதேஷ், கென்யா, சிம்பாப்வே, நியூஸிலாந்து, அமெரிக்கா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் விளையாடுகின்றன இதுவரை நடந்து முடிந்த போட்டிகளின்படி அமெரிக்கா விளையாடிய இரண்டு போட்டிகளிலுமே அதிர்ச்சித் தோல்வி கண்டதால், அடுத்த சுற்றுக்குத் தெரிவாகாமலேயே வெளியேறியுள்ளது. முதல் போட்டி இங்கிலாந்து - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நடந்தது. இதில் இங்கிலாந்து 7 விக்கெட்டுகளை இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றது. எதிர்த்தாடிய சிம்பாப்வே 39 ஓவர்களில் 147 ஓட்டங்களை மட்டுமே பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது. 152 ஓட்டங்களால் இங்கிலாந்து வெற்றிபெற்றது.**

**இரண்டாவது போட்டியில் நியூஸிலாந்து - அமெரிக்கா அணிகள் மோதின. நியூஸிலாந்து அணி 4 விக்கெட்டுகளை இழந்து 347 ஓட்டங்களைப் பெற்றது. எதிர்த்தாடிய அமெரிக்கா 137 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 210 ஓட்டங்களால் நியூஸிலாந்து வெற்றிகொண்டது. இப் போட்டி அமெரிக்க கிரிக்கெட் அணிக்கு முதலாவது சர்வதேசப் போட்டி என்பது குறிப்பிடத் தக்கது.**

**மூன்றாவது போட்டி இந்தியா - கென்யாவுக்கிடையில் நடைபெற்றது. இந்தியா 4 விக்கெட் இழப்புக்கு 290 ஓட்டங்களைப் பெற்றது. எதிர்த்தாடிய கென்யா 7 விக்கெட் இழப்புக்கு 192 ஓட்டங்களைப் பெற்றது. இந்தியா 98 ஓட்டங்களால் வெற்றி கண்டது. நடைபெற்ற போட்டிகளில் குறிப்பிடக்கூடிய அம்சம் சின்ன அணிகளுக்கெதிராக பலம்பொருந்திய அணிகளே முதலில் துடுப்பெடுத்தாடியிருக்கின்றமை குறிப்பிடத் தக்கது.**

**அடுத்தபடியாக 4ஆவது போட்டி பங்களாதேஷ் - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நடைபெற்றது. பங்களாதேஷ் 93 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. தென்னாபிரிக்கா 17 ஓவர்களில் 1 விக்கெட்டை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுகளால் வெற்றிகண்டது.**

**5ஆவது போட்டி அவுஸ்திரேலியா - அமெரிக்கா அணிகளுக்கிடையில் நடைபெற்றது. 24 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்த அமெரிக்கா 65 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பதிலுக்காடிய அவுஸ்திரேலியா 7.5 ஓவர்களில் 1 விக்கெட்டை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. இவ்விரு போட்டிகளிலும் பலம் குறைந்த அணிகள் முதலில் துடுப்பெடுத்தாடியிருந்தமை குறிப்பிடத் தக்கது. 6ம், 7ம் போட்டிகள் கென்யா - பாகிஸ்தான், ஸ்ரீலங்கா - சிம்பாப்வே ஆகிய அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இனி அடுத்தடுத்ததான அணிகள் குறித்த**

## சிறப்புப் பார்வை.

### அவுஸ்திரேலியா

**மினி உலகக் கிண்ணத்தை சுவிகரிக்கக்கூடிய தகுதிவாய்ந்த அணி. ஏற்கெனவே இங்கிலாந்தில் கவுண்டி அணிகளில் விளையாடிய அநுபவமும் சிறந்த வேகப் பந்துவீச்சாளர்களும் அவுஸ்திரேலிய வீரர்களுக்குச் சாதகமான அம்சங்கள். இதேவேளை சீரான துடுப்பாட்டம், தேவைக்குப் போதுமான களத்தடுப்பு, உற்சாகம் தரக்கூடிய கூட்டு உழைப்பு - மீண்டும் ஒரு சம்பியனாக அவர்களை மாற்றும் வாய்ப்புகளை அதிகரிக்கிறது.**

### இங்கிலாந்து

**இலங்கை அணியுடனான போட்டியில் வெல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன. தவிரவும் ஏற்கெனவே அவர்களுக்கு பரிச்சயமான சொந்த நாட்டு மைதானம் என்றபடியால் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக இங்கிலாந்து அணியின் வெற்றிக்கான சாத்தியம் அதிகமாகவே உள்ளது.**

### இலங்கை

**சொந்த நாட்டில் நடைபெற்ற தென்னாபிரிக்க அணியுடனான போட்டியில் அபார வெற்றியை ஓரளவு துடுப்பாட்ட வரிசையில் நம்பிக்கையை கொண்டு களமிறங்கியிருக்கிறார்கள். இலங்கை மைதானங்கள் போலல்லாது வேகப் பந்து வீச்சுக்குச் சாதகமான மைதானங்களே இங்கிலாந்தில் இருப்பதால் எவ்வளவு தூரம் ஆடுகளம் உதவப்போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.**

### இந்தியா

**தொடர் தோல்விகளைச் சந்தித்து, தடுமாற்றங்களுக்கு உட்பட்டிருக்கும் ஒரே அணி இதுதான். துடுப்பாட்டம், களத்தடுப்பு, பந்துவீச்சு இப்படியாக எதிலுமே குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் இல்லை என்பதால் குறிப்பிடக்கூடிய எந்த இலக்குகளையும் அடைய வாய்ப்பில்லை.**

### தென்னாபிரிக்கா

**இலங்கை அணியுடன் நடைபெற்ற போட்டி முடிவுகள் நல்ல பாடமாக அமைந்திருக்கின்றது. ஆனாலும் அதிலிருந்து இன்னும் விடுபடாதவர்களாகவே தெரிகிறது. தவிரவும் அணியில் மாற்றங்கள் எதுவும் இடம்பெறாததால் சவாலாக இருப்பார்கள் என கூற முடியாது. தென்னாபிரிக்க அணியின் நம்பிக்கை நட்சத்திரமான கிப்ஸ் தொடர்ந்தும் அவர் மீதான நம்பிக்கையைக் கேள்விக்குறியாக்கி வருகிறார். மேற்கிந்திய தீவுகளுடனான போட்டியில் வெல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.**

தொடர்ச்சி 09ஆம் பக்கம்.....

"மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.




# மாஜிக் தந்திரங்கள்

இதேபோல தந்திரமாக மூன்று தட்டுகளையும் பின்புறமாக இழுத்து மூடிவிட வேண்டும். இப்போது பொருள்கள் பின்பக்கம் மறைந்து விடும். அடித் தட்டு மட்டும் காலியாக இருக்கும்.

காட்சியாளர் கையில் மந்திரக் கோலை வைத்துக்கொண்டு பொருள் களை வெளியேறும்படி சைகை செய்வதைப் போல பாவனை செய்து விட்டு, அலமாரியின் மேல் போடப்பட்டி ருக்கும் கறுப்புத் துணியை மெது மெதுவாக விலக்கி, கடைசியில் முழுவதுமாக எடுத்து சபையோருக்கு முன் அதை உதறிக் காண்பித்துவிட வேண்டும். மறுபடியும் கறுப்புத் துணியை அலமாரியின் மேல் விரித்துவிட்டு, கதவின் மறைவில் இடது கையை தந்திரமாக விட்டு, அலமாரியில் பொருள்கள் உள்ள தட்டை மேல்நோக்கித் தூக்கி, பின்புறமாக இழுத்து பின் திறவை மூடிவிட வேண்டும். மூன்று தட்டு களையும் மூடிவிட்டு, அலமாரிக்கு முன்னால் வந்து மந்திரக்கோலை ஆட்டி மறைந்த பொருள்களை உள்ளே வரும்படி செய்வது போல் பாவனை செய்துவிட்டு அலமாரியின் மேல் போட்டுள்ள கறுப்புத் துணியை மெது மெதுவாக எடுத்தால் அலமாரியில் பொருள்கள் இருப்பது தெரியும். "இந்தப் பொருள்கள் எப்படி மறைந்தது, எப்படி வந்தது" என்று யோசித்து சபையோர் ஆச்சரியப்படு வார்கள். இந்தக் காட்சி முடிந்தவுடன் மேடைக்கு முன்னுள்ள திரையை இறக்கிவிட வேண்டும். மறு காட்சிக்குத் தயாராக வேண்டும்.

*குறிப்பு* : அலமாரியிலுள்ள பொருள் வைக்கப்பட்ட மூன்று தட்டுகளையும் மேல் நோக்கி வந்து பின்பகுதியை மூடவும், மறுபடி முதல் தட்டில் படிமானமாக இறங்கவும் கூடிய ஒரு சூட்சும முறையை அவரவர் யூகம் போல அமைத்துக்கொள்ளலாம்.

மின் சக்தியைக் கொண்டும் இதை இயக்கலாம். காட்சியாளர் அலமாரியை விட்டு விலகி நின்று ஒரு சுவிச்சை காலால் அழுத்தினால், இந்த அலமாரியின் மூன்று தட்டுகளும் ஒரே நேரத்தில் பின்பகுதியை மூடிக்கொள் ளவும், அதே போல, சுவிச்சை அழுத்தினால் இந்த மூன்று தட்டுகளும் முதல் தட்டின் மேல் வந்து படுக்கவும் கூடிய முறையில் ஒரு சூட்சுமக் கருவியை அமைத்துக்கொண்டால் இந்தக் காட்சி அதியற்புதமாக இருக்கும். மேல் பலகையில் பொருள்களை அமைக்கும்பொழுது வெகு கவனமாக இருக்க வேண்டும். அமைக்கப்பட்ட பொருள்கள் விதவிதமாகவும், கண்கவர் வர்ணத்திலும் இருக்க வேண்டும். அதே நேரத்தில் இந்தப் பொருட்கள் பலகையை விட்டுக் கழன்று விடாதபடி உறுதியாகப் பலகையுடன் சேர்க்க வேண்டும்.

உள்ளே கையை விட்டு தட்டுப் பலகைகளை இறக்கும்பொழுதும், தூக்கும்பொழுதும் பொருள்களைத் தட்டிவிடாதபடி கவனமாகச் செய்ய வேண்டும். அலமாரிக்குப் பக்கத்தில் நின்று தட்டுகளைத் தூக்குவதையோ, இறக்குவதையோ சபையோர் அறியாத வண்ணம் தந்திரமாகச் செய்ய வேண்டும்.

## பெட்டியில் போட்டுப் பூட்டிய ஆள் பூரியைச் சாப்பிட்டு, பெட்டியின் மேல் உள்ள மணியை அடித்தல்

இந்தக் காட்சியை நடத்த ஒரு பெரிய மரப்பெட்டி தயாரிக்க வேண்டும். இந்தப் பெட்டியில் ஓர் ஆளைப் போட்டு மூடி பூட்டக்கூடிய அளவில் இந்தப் பெட்டி இருக்க வேண்டும். இந்தப் பெட்டியின் பக்கப் பலகையில் சுமார் 2 செ.மீ. விட்டத்தில் நாலைந்து வட்டத் துளைகள் போட வேண்டும். பெட்டியில் இருப்பவர் சுவாசிக்க இதன் வழியே காற்றுப் போக ஏதுவாக இருக்கும். இந்தப் பெட்டிக்கு முன் பக்கம் பாட்லாக் அமைத்து பூட்டுவதற்கு வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இடது, வலது பக்கம் பெட்டியைத் தூக்குவதற்கு வசதியாக இரண்டு வளையங்கள் அமைக்க வேண்டும். இந்தப் பெட்டியில் ஒரு சூட்சும வழி செய்ய வேண்டும். அதாவது பின் பக்கப் பலகையைப் பின் பக்கமாகத் தள்ளினால் அது திறக்க வேண்டும். விட்டால் மூடிக்கொள்ள வேண்டும் மூடிய பெட்டியை வெளியே இருந்து திறக்க அந்தப் பலகையில் ஒரு கைப்பிடி வைக்க வேண்டும். இந்தப் பெட்டிக்கு கருங்காலி மரம் போல பாலிஷ் செய்துவிட வேண்டும்.

வெள்ளைத் துணியைக் கொண்டு ஓர் ஆள் உள்ளே செல்லும் அளவில் ஒரு பை தைத்து வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு மீற்றர் நீளத்தில் அரை சென்ரி மீற்றர் கனத்தில் இரண்டு வெள்ளைக் கயிறு (நூல்)துண்டுகள் வைத்துக்கொள்ள வேண்டும். பெட்டிக்குப் பூட்ட ஒரு பெரிய பூட்டும் சாவியும் தயார் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு தட்டில் பத்துப் பூரியும், ஒரு செம்பும் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு செம்பில் ஒன்றை போலவே மற்றொன்றும் இருக்க வேண்டும். ஒரே அளவில் ஒரே மாதிரிச் செம்பு இரண்டு இருப்பது நல்லது.

இவ்வளவும் தயார் செய்தபின், இந்தப் பெட்டியை ஓர் இடத்தில் வைத்து விட்டு, பெட்டியிலிருந்து 50 செ.மீ. இடைவெளிவிட்டு பெட்டியைச் சுற்றி வரும்படி நீளச் சதுர திரை தைக்க வேண்டும். இந்த திரை கொசு வலையை ஒத்த அமைப்பில், உள்ளே நடப்பது வெளியே தெரியாமலிருக்கும் வகையில் சற்று கனத்த எந்த நிறத் துணியிலாவது தைத்து, இணைத்து திரையின் நான்கு மூலைகளிலும் நீளமான கயிறு இணைத்து அந்தக் கயிற்றை நான்கு இடங்களில் இழுத்துக் கட்ட வசதி செய்துகொள்ள வேண்டும்.

இவற்றை எல்லாம் தயார் செய்து வைத்துக்கொண்டு இந்தக் காட்சியை ஆரம்பிக்க வேண்டும். காட்சி ஆரம்பிக்குமுன் மேடையின் முன் திரையைத் திறந்துவிட வேண்டும். பெட்டியை உதவியாளரும் காட்சியா ளரும் கூடி பக்கத்திற்கு ஒருவராக பெட்டியிலுள்ள வளையத்தைப் பிடித்துத் தூக்கி வந்து மேடையில் வைத்துத் திறந்து அந்தப் பெட்டியைச் சாய்த்து உள்ளே ஒன்றுமில்லை என்பதைக் காண்பித்து பெட்டியைப் பழையபடி மூடி வைத்துவிட வேண்டும்.

பிறகு சபையிலுள்ள ஒருவரை அழைத்து உதவியாளரின் கையைக் கட்டச் சொல்ல வேண்டும். கயிற்றைக் கொண்டு கட்டும்பொழுதே உதவியாள் கைகளை ரொம்ப நெருங்காமல் கொஞ்சம் விரித்த அளவில் வைத்து கட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும். பிற்கு, புதிதாக வந்தவரின் உதவியோடு பையை விரித்து அதற்குள் உதவியா ளரைப் போகச் சொல்லி பையின் வெளிப்புறத்தைச் சுருக்கி இருவரும் சேர்ந்து கட்டி முடிச்சுப் போட்டுவிட்டு, இருவரும் சேர்ந்து உதவியாளைத் தூக்கிப் பெட்டியினுள் போட்டு, பெட்டியை மூடி பாட்லாக்கை மாட்டி, சபையில் உள்ள ஒருவரை அழைத்து பூட்டைப் பூட்டி சாவியைக் கையோடு கொண்டுபோகச் சொல்ல வேண்டும்.

(தொடர்ந்து வரும்..........)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

"என்னங்கோ? ஏதாவது புரியுதா, ஏதாவது தெரியுதா? எனக்கெண்டா ஒண்ணுமே புரியல்ல...உலகத்திலே!" தான்.

பின்ன என்னங்கோ? என்னென்னவோ நடக்குது. ஆனா ஒண்டுமே நடக்காமல் கிடக்குது. நிலமை என்னெண்டுதான் ஒண்டுமே புரியுதில்லை.

ஒரு பக்கத்தால என்னை விலை கன்னை மூடிக்கொண்டு ஏறிக்கொண்டு போகுது. அங்க ஈராக்கில நாளொரு வெடிகுண்டுத் தாக்குதலாக் குழம்பிக் கிடக்குது. குழம்பின குட்டையில மீன்பிடிக்க இருக்கிறவையள் இப்ப வெளியேற முடியாமல் நிண்டு முழுசினம். அமெரிக்கப் படையில இப்ப ஆயிரத்துக்குமேல பறிபோயிட்டுது. அங்கால எண்ணைக் குதங்களைக் கொழுத்தி விளையாடுறாங்கள். எல்லாம் இங்கால எங்கட வயித்திலதான் உதைக்குது. ஓட்டோக்காறன் இப்ப ஹயர் ஏறினால் எடுத்தாப்போல முந்நூறு ரூபாய்க்கு ரேட் சொல்லுறான். பஸ் கட்டணத்தை எத்தின ரூபாவால கூட்டுற தெண்டு கெடுபிடி விவாதம் போக்குவரத்து அமைச்சுக்கும் தனியார் பஸ் சங்கத்தாருக்கும் இடையில போய்க்கொண்டிருக்குது. இதுக்கு நடுவில 'காஸ்'காறன் திடீரெண்டு ஒரு கொள்ளை விலையைக் கூட்டி வைச்சுக் கொண்டு நிக்கிறான். தங்களுக்குச் சொல்லாமல் கொள்ளாமல் விலையேத்தினது சட்டப் பிழையெண்டு சொல்லிச் சர்ச்சைப்பட்டுக் கொண்டு நிக்குது அரசாங்கம்.

அது ஒரு பக்கத்தால நடந்தேற, மற்றப் பக்கத்தில நாளாந்தம் கொலைகள் நடக்குது. அரிது அரிது எண்டு ஔவைப் பாட்டி பாடின மானுடப் பிறவி சுட்டும், வெட்டியும் மரித்து அழியுது. சமாதான காலம், யுத்த நிறுத்தம் எண்டெல்லாம் பெரிசா விளம்பரப்படுத்தியும் எதையும் எல்லாத்தையும் பொய்யாக்கி துப்பாக்கிக் கலாசாரம் தூள் பறத்திக்கொண்டு திரியுது. மட்டக்களப்பு மோசமாப் போட்டுது. யாற்ற கையிலயிருந்து வெடி பறியும், யாற்ற தலை உருளும் எண்டு சொல்ல ஏலாத நிலமையாக் கிடக்குது. வழக்கமா நடக்கிற கொலைகளுக்கு எதுவுஞ் சொல்லாமல் பிடிச்சு வைச்ச பிள்ளையார் போல இருந்து வந்த எங்கட எஸ்.எல்.எம்.எம். காறருக்கு (கண்காணிப்புக் குழுக்காறருக்கு) இப்பதான் இருப்புக்கொள்ள ஏலாத நிலவரமாக் கிடக்குது. எந்தத் துப்பாக்கி வெடிக்குதெண்டு தெரியுதில்லை.

வெடிச் சத்தம் ஒரு பக்கமிருக்க, இங்க அறிக்கையாளர்களின்ர அறுவைச் சத்தம் தாங்க முடியேல்லை. எதையும் வக்காலத்து வாங்கியே தீருவமெண்டு ஒரு கூட்டம் அலையுது. நம்ப முடியாத கட்டுக்கதை களைக்கூடக் கட்டி, சனம் நம்பாட்டாலும் பரவாயில்லை; தாங்கள் இந்த அளவுக்கு வக்காலத்து வாங்கியிருக்கினமெண்டு அவைக்கு மேல உள்ளவையைத் திருப்திப்படுத்தினால் போதுமெண்ட அளவுக்கு அவையின்ர அரசியற் பெருமையெல்லாம் தாண்டு போய் இருக்குது. கிட்டடியில நடந்த ஐயர் பாலாவின்ர கொலையக்கூட தங்கட அரசியலாக்கிப் போடுறதுக்குப் பாராளு மன்றத்தில நேரமிழுத்துக் பேசிறார் ஒருவர். முழுப் பூசணிக்காயக் கொணர்ந்து தாங்கோ, நான் இந்தப் பாராளுமன்றத்துக்குள்ள புதைச்சுக் காட்டிறமெண்ட சொல்வித்தைக்கு வெளிக்கிட்டு சனத்தின்ர வேதனையில வேடிக்கை காட்டிக்கொண்டு நிக்கினம் இவையள்.

இதுக்கு நடுவில பேச்சுவார்த்தை ஆரம்பிக்கிறதுக்கு வழி பிறந்திருக்குதெண்டு நம்பிக்கை தெரிவிச்சிருக்கிறா ஜனாதிபதி. நம்பிறதுக்கு ஒண்டும் இல்லாமலிருக்கேக்க, எதை நம்பி நம்பிக்கை தெரிவிக்கிறா வெண்டுதான் விளங்கேல்லை. இந்த நம்பிக்கை உற்சாகத்தில சர்வகட்சிப் பேச்சுவார்த்தையெண்டெல்லாம் பெரிய கதைகளைச் சொல்லிக்கொண்டு போறா.

அது சொல்லி முடியேல்லை, இங்கால முகமாலையில ராணுவமும் புலிகளும் ஆளுக்காள் போட்டியா எல்லை நகர்த்தலுக்கு வெளிக்கிட்டிருக்கினம். நல்ல நம்பிக்கைதான் தெரியுது. எக்கணம் ஒருத்தரில ஒருத்தர் முட்டிக்கொண்டிட்டினமெண்டால் யுத்த நிறுத்தமே அம்போதான்!

இங்கால வெள்ளைக்காறன் வந்திறங்கி அடிக்கடி எதையோ ஒண்டச் சொல்லிக் கொண்டிருக்கிறான். சமாதான நாட்டத்தைச் சொல்லில மட்டுமில்லாமல் செயலிலயும் காட்டட்டாம். வெள்ளையன்தானே! கத்திறதக் கத்தட்டும்; காத்தோட போயிடும் சத்தம் எண்டிட்டுக் காரியத்தில கண்ணாயிருக்கினம் சம்பந்தப்பட்டவை. ஆனாலும் மிஞ்சிக் கத்தினால் அவைய ஆக்கிரமிப்புக்காறர் எண்டு பதிலுக்குத் திட்டிப்போட்டுப் போக ஆக்களையும் வைச்சிருக்கு.

இந்த நிலமையில இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் அரசாங்கத்தில சேந்திட்டது. சிலபேருக்கு அஜீரணக் கோளாறாய்க் கிடக்கு. எல்லாரையும் தங்கட வீட்டுக் கொல்லைக்குள்ள கட்டி வைச்சு மேய விட்ட பட்டி மாடுகளெண்டு நினைச்சால் என்ன பண்ணுறது? எதுவும் நடக்கட்டும். நான் கொஞ்சக் காலம் பேப்பர் படிக்காமலிருந்தா மூளை கலங்காமலிருப்பன். வட் டு யு ஸே.....? நோ அதர் வே !

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(19.09.2004 தொடங்கி 25.09.2004 வரை)

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

கன்னி - சூரியன், வியாழன், செவ்வாய், துலாம் - கேது, மேடம் - இராகு, கர்க்கடகம் - சனி, வெள்ளி, சிங்கம் - புதன்
சந்திரன் துலாம், விருச்சிகம், தனு, மகரம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நிலை மாற்றம், தொழில் அலைச்சல், பிரயாச மிகுதி, மனக் கலக்கம், உறவினர் தொல்லை, வீண் குறை கேட்டல், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகளின் பகை. மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

**மிதுனம்** : (மிருகசீரி டத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் உயர்ச்சி, பொருள் வரவு, உயர்ந்த நிலை, உறவினரால் தொல்லை, உத்தியோகச் சிக்கல், மனக் கலக்கம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், வெளியடப் பயணம், உத்தியோக மேன்மை, மன மகிழ்ச்சி, மாணவர் கல்வி குழப்பம், விளையாட்டுப் போக்கு, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07**

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் மந்தம், செலவு மிகுதி, காரியக் கேடு, தேக சுகம் பாதிப்பு, உத்தியோகக் குழப்பம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் கலக்கம், பெரியோர் உதவி, பண வரவு தடை, குடும்ப நன்மை, உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் அலைச்சல், பண விரயம், வீண் குறை கேட்டல், குடும்ப சுகக் குறைவு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி கஷ்டம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

**இடபம்** : (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் நன்மை, பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, அன்னியர் சகவாசம், உத்தியோக நன்மை, பதவி உயர்ச்சி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் பலிதம், பண வரவு, வெளியிட வாழ்க்கை, அன்னியர் நட்பு, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் சிக்கல், பண வரவு தடை, கடன்படல், மனக் கிலேசம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி குழப்பம், பரீட்சைகளில் தோல்வி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07**

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ) தொழில் நன்மை, பண வரவு, காரியானுகூலம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக மேன்மை, பதவி உயர்வு, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 03**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் நன்மை, பண வரவு, வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு, உத்தியோக மேன்மை, கௌரவம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் மேன்மை, பண வரவு, பாரிய முதலீடு, உயர்ந்த எண்ணம், குடும்ப கலக்கம், உத்தியோகச் சிரமம், வேலைப் பளு, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)









## பழைய களம்



பழைமை வாய்ந்த இந்தக் கற்சுவர்களைப் பார்த்ததும் வியப்பாக இருக்கின்றதா? மனிதர்களின் கேளிக்கைக்காக பிரான்ஸில் ஏர்ல்ஸ் என்ற இடத்தில் உருவான பழைய களம் ஒன்றே இதுவாகும். ஆபிரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எருதுகளையும் மனிதர்களையும் மோதவிட்டு வேடிக்கை பார்ப்பது இங்கு வழக்கமாக இருந்தது. அன்று அது ஒரு மரண விளையாட்டாகவும் இருந்தது. இதனால்தான் ஹொரேஸ் என்ற கவிஞர் "இன்றைய நாளை நழுவ விடாதே; நாளை மீது நம்பிக்கை வைக்காதே" என்றார். இப்படியும் ஒரு விளையாட்டு தேவையா?



## மீ....ன்....

மீனுக்கு ஞாபகச் சின்னம் என்று நினைக்கத் தோன்றுகிறதா? இராட்சத மீன் போன்ற இச் சின்னம் பார்வையாளர்களை வரவேற்கிறது. கெரிஸன் எனும் இடத்திலுள்ள 1,32,000 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட மீன் வளர்ப்பு ஏரியில்தான் இச் சின்னம் அமைந்துள்ளது.

## ராஜநாகம்

பதினைந்து அடி நீளமான இராஜ நாகம் ஒன்றையே இங்கு காண்கிறீர்கள். பார்க்கப் பயங்கரமாக இருந்தாலும் இதுபோன்ற பயங்கர ஜந்துக்கள் மனிதர்களை உடனடியாகத் தாக்குவதில்லை. சீண்டும்படியாக ஏதாவது நடந்தால் மட்டுமே அவை தாக்கத் தொடங்குகின்றன.



## பயங்கரவாதம்

கடந்த வாரம் ரஷ்யாவில் பயங்கரவாதிகளால் பாடசாலை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்ட ஆசிரியர்களும் மாணவர்களுமாக சுமார் 350 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை உலகம் பூராவும் கண்டித்தது. ரஷ்யாவின் வட ஒஸற்ரியா மாகாணத்தில் உள்ள பெசலான் நகரில் மேற்படி பாடசாலை அமைந்திருந்தது. பயங்கரவாதிகளின் முற்றுகையை அடுத்து சுமார் ஆயிரம் பேர் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இதற்காகப் பயங்கரவாதிகள், ரஷ்யப் படைகளினால் கைதுசெய்யப்பட்டிருக்கும் செச்சினியத் தீவிரவாதிகள் இருவரை விடுவிப்பதோடு, செச்சினியாவில் இருந்து ரஷ்யப் படையினரை வாபஸ் பெற வேண்டுமெனவும் கோரியிருந்தனர். இக் கோரிக்கைகளுக்கு இணங்கிப் போக முடியாமலும், 53 மணித்தியாலங்களாக உணவு, மருத்துவ வசதி எதையும் பயங்கரவாதிகள் பள்ளிச் சிறுவர்களுக்குக் கிடைக்கவிடாததாலும் ரஷ்யப் படையினர் அதிரடி மீட்பு நடவடிக்கையில் இறங்கினர். இதனால் கோபமடைந்த பயங்கரவாதிகள் சரமாரியாகச் சுட்டு சுமார் 350க்கு மேற்பட்ட பள்ளிச் சிறுவர்களைக் கொன்று குவித்தனர். ரஷ்ய இராணுவத்தினரின் தாக்குதலில் 26 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். ஒருவர் கைதானார். இச் சம்பவத்தை அடுத்து செச்சினியத் தீவிரவாதத் தலைவர்களான சாமில் பசியேவ் மற்றும் அஸ்லாம் மொஸ்கடேவ் ஆகிய இருவர் குறித்த தகவல்களைத் தருபவர்களுக்குப் பத்து மில்லியன் அமெரிக்க டொலர்கள் தரப்படுமென ரஷ்யா அறிவித்துள்ளது. மறுநாள் செச்சினியத் தீவிரவாதிகளால், ரஷ்யாவின் ஜனாதிபதி கிளாடிமீர் புட்டினின் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தரப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.